
www.tamilarangam.net

# எரிமலை

ஜனவரி – பெப்ரவரி 1998



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புள்ள எரிமலை ஆசிரியர் குழுவுக்கு என் வணக்கம்.

தங்களின் அக்டோபர் மாத இதழ் கிடைக்கப்பெற்றோம். தாமதமாகக் கிடைத்தாலும் தரமான கட்டுரைகளையும், செய்திகளையும் தாங்கி தமிழீழப் போராட்டத்தை மெருகூட்டும் வகையில் அமைந்து இருந்தது. சுதந்திரப் பொன்விழா கொண்டாடிக் கொண்டிருக்கும் சிங்கள பேரினவாத சந்திரிகா அரசு தமிழர்களின் மீதான இனப் படுகொலையைத் தொடர்ந்து செய்து வருகிறது. இந்திய, அமெரிக்க அரசுகள் பயங்கரவாதம் எனத் தடை செய்தபோதும் பெரும் படையெடுப்பை எதிர்த்துத் துணிவுடன் போராடும் விடுதலைப் புலிகளின் தியாக செய்திகளையும் களச் சாதனைகளையும் தெரிந்து கொள்வதில் மிகவும் ஆர்வத்துடன் இருக்கின்றோம். எனவே தொடர்ந்து உங்களின் வெளியீடுகளை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு<br>
'தமிழ் தமிழர்<br>
இயக்கத்' தோழர்கள்<br>
இராஜபாளையம்


* * *

எரிமலை ஆசிரியர் குழுவுக்கு,<br>
வணக்கம்.

நீங்கள் அனுப்பிவைத்த ஒக்டோபர் மாத எரிமலை இதழ் கிடைக்கப் பெற்றேன்.

மிக்க நன்றி.

தலதா மாளிகையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை கையில் எடுத்துக் கொண்டு அதை ஒரு பெரிய விடயமாக வைத்துக்கொண்டு சந்திரிகாவின் இன அழிப்பு அரசு பல நாடகங்களை ஆடுகிறது. இதைப் பார்த்தால் ஏதோ குரங்கின் கையில் மாலை கிடைத்தது போல் உள்ளது. புத்த ஆலயத்தைப் பாதுகாக்க தவறியமைக்கு மாமனார் ரத்வத்த, மருமகள் சந்திரிகாவிற்கு இராஜினாமா கடிதம் எழுத அதை ஏற்க மருமகள் மறுக்க, குண்டு வெடித்த மறுநாளே புலிகளைத் (இயக்கத்தைத்) தடை செய்துவிட்டோம்; இனி யானை, பூனைகளையும் தடை செய்துவிடுவோம். நீங்களும் (வெளிநாடுகள்) புலிகளைத் தடை செய்துவிடுங்கள். அப்போதுதான் இலங்கைத் தீவில் சமாதானம் பூக்கும். மாமனும் மருமகளான ஜனாதிபதியும் மாறி மாறி பகல் கனவு காண்கின்றனர். மாமனாரோ போர் 70–80 சதவீதம் முடிந்துவிட்டது என்று நாடகமாட மருமகளோ சமாதானம் நாளை பிறந்துவிடும் என்று கூத்தாட இவர்களை யாரும் (மேற்குலகு நாடுகளும்) நம்பத் தயாராக இல்லை.




## அக்கறைப் பூக்கள்

தமிழீழ மக்களை நேசிக்கும் உணர்வாளன்.

வாழ்க தமிழ்

வாசகன்<br>
யாங்கோன்.

* * *

அன்புடன் ஆசிரியர் குழுவுக்கு,

எரிமலை இதழ் தாமதமாகக் கிடைத்தாலும், அதனைப் படிப்பதில் ஆவலைத் தூண்டுகின்றது. தமிழினத்தின் சிறப்பை இவ் இதழினூடாகவே என்னால் அறிய முடிகின்றது. இதழின் ஒவ்வொரு பக்கமும் ஈழத்தமிழரின் போராட்டத்தை உலகுக்கு உணர்த்துவதாக உள்ளது.

தங்களின் சேவைக்கு எனது பாராட்டுக்கள்.

குகநாதன்<br>
கோலாலம்பூர்<br>
மலேசியா

* * *

பேரன்புடையீர்!

இதழ்கள் தவறாமல் கிடைக்கின்றன. மிக்க மகிழ்ச்சி. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மிகவும் கொச்சைப்படுத்தி இங்கு பிரச்சாரம் செய்யப்படும் வேளையில் தங்கள் பக்கத்தில் உள்ள நியாயத்தை எமக்கு உணர்த்துவதாக 'எரிமலை' இருக்கின்றது.

ஈழத்தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு கொடுக்கும் அவலங்களை எண்ணிப் பார்க்கும் போது, இந்தியா, ஆசியாவில் மிகப் பலம்வாய்ந்த நாடாக இருந்தும், இன்னும் சொன்னால் அயல் நாடாக இருந்தும், ஈழத்தமிழர் விடயத்தில் அதன் கண்டுங்காணாப் போக்கு என்னைத் தலைகுனிய வைக்கின்றது.

இந்திய மத்திய அரசு எவ்வாறாகினும், தமிழ்நாட்டுத் தமிழரின் ஆதரவுக் குரல் என்றும் உங்கள் போராட்டத்துக்கு உண்டு.

அன்புடன்<br>
தேசநேசன்<br>
இராஜபாளையம்

* * *

ஆசிரியர் குழுவிற்கு வணக்கம்.

நவம். – டிசம். மாத எரிமலை இதழ் கிடைத்தது. அவ் இதழின் அட்டைப் படம் பார்ப்பதற்கு மிகவும் பெருமிதமடையச் செய்தது.

எத்தனை தடை வந்தாலும், ஈழத் தமிழருக்கு ஆதரவு கொடுப்பதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது என்று சொல்லாமல் சொல்லி முழங்கிய ஜோர்ஜ் பெர்னாண்டோஸ்சை அட்டைப்பட நாயகனாக்கி, அவருக்கு சிறப்பிடம் கொடுத்தது பாராட்டப்பட வேண்டியது.

சிறீலங்கா அரசுக்கு முண்டுகொடுக்கும் துரோகத் தமிழன் போல் அல்லாமல் வட இந்தியாவில் இருந்து எமக்கு ஆதரவுக் குரல் கொடுத்திருப்பது எனக்கு சற்றுத் துணிவைக் கொடுத்துள்ளது.

விக்ரர்ராஜ்<br>
யேர்மனி

* * *

ஆசிரியர் குழுவுக்கு வணக்கம்,

தங்களின் 'எரிமலை' பழைய ஏட்டை தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அதில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமையையும், தங்கள் உயிரையே ஈகம் செய்யும் புலிகளின் வாரத்தையும் அறியமுடிந்தது.

ஈழத்தமிழரின் விடியல் வெகுதூரமில்லை என்று உறுதியாக நம்புகிறேன்

ந. தமிழ்மறவன்<br>
பெங்களூர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...



மட்டக்களப்பு மாவட்டத்தில்
மனித உரிமை சீர்குலைவு
– பக்கம் 22



தாய் வெட்டி வா என்றதை
மகள் கட்டிவரும் சாமர்த்தியம்
– பக்கம் 20



மாங்குளச் சமர்
அரசின் கௌரவச் சமர்
– பக்கம் 04



ஏன் இந்த வார்த்தை
விளையாட்டு?
– பக்கம் 08

1998-ம் ஆண்டு
வாக்குமூலமும்
வருடபலனும்
– பக்கம் 06





ஈழப்போர் சதுரங்கம்
காய்களை நகர்த்துவது யார்?
– பக்கம் 20

புலம்பெயர் தமிழரின் அரசியல்
விழிப்புணர்வைத் தட்டியெழுப்பிய
சிறீலங்காவின் சுதந்திரப்
பொன்விழா
– பக்கம் 14




★ வேடம் அணியாத வெண்புறாக்கள் – பக்கம் 12

★ தமிழரின் சுயகௌரவத்தின் சின்னமாக புலிகளை முழு உலகமும் ஏற்றுள்ளது – பக்கம் 27

★ புதைகுழியில் 36 சடலங்கள் – பக்கம் 28

★ அபத்தமான அர்த்தத்தோடு ஒரு ஆக்கிரமிப்பு – பக்கம் 31

★ களநிலை யதார்த்தமும் தெற்கில் எழும் விமர்சனங்களும் – பக்கம் 33

★ இலங்கையின் பொருணள்மியத்தை பேரினவாதம் ஏப்பமிடுகின்றது – பக்கம் 35

★ சிரிப்பூ – சிறுகதை – பக்கம் 37

★ உறுதி – சிறுகதை – பக்கம் 42

★ எங்கள் நிலத்தில் சிங்கள யானைகள் – பக்கம் 44

★ தமிழர் வாழ்வை சீரழிக்கும் இன்னொரு சுரண்டல் – பக்கம் 49




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழரின் தேசிய இனப்பிரச்சனை நாற்பது ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. சிங்கள ஆளும் வர்க்கமானது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைக் கொள்கையைக் கடைப்பிடித்தது. தமிழ்த் தேசியத்தின் தனித்துவத்தைச் சிதைக்கும் நோக்கைக் கொண்ட இன அழிப்பு வடிவமாக இந்த ஒடுக்குமுறை அமைந்தது. மொழி, பண்பாடு, பொருளாதார வாழ்வு, தாயக நிலம் ஆகிய தமிழ்ச் சமூகத்தின் அத்திவாரங்களைத் தகர்த்தெறியும் நோக்கமாக இந்த ஒடுக்குமுறை ஏவிவிடப்பட்டது. இதனால், தமிழினம் தாங்கொணாத் துயருக்குள் தள்ளப்பட்டது. அத்தோடு தமிழருக்கு எதிராக திட்டமிட்ட வன்முறையை அரசு கட்டவிழ்த்துவிட்டது. காலத்திற்குக் காலம் இலங்கைத் தீவில் வெடித்த இந்த இனப் பூகம்பங்களால் பாரிய உயிரிழப்புக்களும் ஏற்பட்டன. இந்த அரச பயங்கரவாதப் புயல் இன்னும் ஓயாது வீசிக்கொண்டேயிருக்கிறது.

ஆரம்ப காலத்தில் எமது மக்கள் காந்திய வழி தழுவிய அமைதிவழிப் போராட்டங்களை நடத்திவந்தனர். சத்தியாக்கிரகப் போராட்டங்களையும், ஒத்துழையாமை இயக்கங்களையும் நடத்தினர். இருபது ஆண்டுகளுக்கு மேலாக, தமது அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் எமது மக்கள் மாநில சுயாட்சி கோரி வந்தனர். ஆனால், அவர்களது கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் ஒப்பந்தங்களையும் உடன்பாடுகளையும் மீறி வந்தன. சமாதான வழியில் இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக சிங்கள அதிகார வர்க்கமானது ஈவிரக்கமற்ற இராணுவ அடக்குமுறைக் கொள்கையை கடைப்பிடித்து வருகிறது.

இந்த வரலாற்று சூழ்நிலையில் தான். அதாவது, அமைதி வழி தழுவிய சகல போராட்ட வடிவங்களும் தோல்விகண்ட தருணத்தில்தான் புரட்சிகர ஆயுதப் போராட்டம் எழுபதுகளின் ஆரம்பத்தில் தோற்றம் கொண்டது. விடுதலைப் புலிகள் இயக்கமே இந்த ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தது. காலக்கிரமத்தில் எமது இயக்கமே தமிழர் தேசியப் போராட்டத்தின் முன்னணிப் படையாக வளர்ச்சி பெற்றது. எமது ஆயுதப் போராட்டமே எமது மக்களின் சுதந்திர இலட்சியத்தை முன்னெடுத்து வருகிறது. எமது ஆயுதப் போராட்டமே சிங்கள அரசுக்குப் பெரும் சவாலாக எழுந்திருப்பதுடன், தமிழர் பிரச்சனையை சர்வதேச அரங்கில் பிரபல்யம் அடையவும் செய்துள்ளது.

1986ம் ஆண்டு மார்ச் மாதம் 'ஜென்டில்மன்' பத்திரிகைக்கு
தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய பேட்டியிலிருந்து...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

ஜனவரி – பெப்ரவரி

1998

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

## பெப்ரவரி 4

# தமிழர் உரிமைப் பிரகடனம்

சிங்கள தேசத்தின் 50வது சுதந்திரதின கொண்டாட்டங்கள் அதனது திண்டாட்டத்தை புலப்படுத்தும் நிகழ்வாக அமைந்துவிட்டன. சிங்கள பௌத்த இனவாதத்தின் இறுமாப்பி னைப் பறைசாற்றி கண்டி தலதா மாளிகையில் தமது சுதந்திர தினத்தைக் கொண்டாடப் புறப்பட்ட இனவெறி அமைப்பு ஈற்றில் வெறிச்சோடிக்கிடந்த வீதிகளும் வெற்றிடமாய் திகழ்ந்த வெளிக ளுமாக கொழும்பில் திண்டாட்டத்துடன் தமது கொண்டாட்டத் தினைக் கொண்டாடியுள்ளது. சிங்கள தேசம் பயத்துடனும் பீதியுட னும் கெடுபிடிகளுடனும் தமது ஐம்பதாவது சுதந்திர தினத்திற்கு 'விழா' எடுத்தது.

மறுபுறம், சர்வதேச அரங்கில் சிங்கள தேசம் தமிழர்களின் எழுச்சிகரமான போர் குரலினால் நிர்வாணப்படுத்தப்பட்டது. சிங்கள தேசத்தின் அரசியல் இராஜதந்திரத் தில்லுமுல்லுகளால் கனடாவாழ் தமிழ் மக்களின் சுதந்திர எழுச்சி நசுக்கப்பட்டு விட்ட தாக சந்திரிகா அரசு கனவு கண்ட வேளையில் மாபெரும் எழுச்சிப் பேரணியை நடாத்தி சிங்கள தேசத்தை தமிழர்கள் எச்சரித்துள்ள னர். இலண்டன் பேரணி சர்வதேச கவனத்தை ஈர்க்கும் அணியாக அமைந்துவிட்டது. பாரிசிலும், ஐரோப்பிய பாராளுமன்ற முன்ற லிலும், மார்சல், லியோன் பகுதிகளிலும் பிரான்ஸ் வாழ் தமிழர் சமூகம் தம் ஒருமைப்பாட்டையும் விழிப்பையும் காட்டும் கறுப்பு தினப் பேரணியை நடாத்தியுள்ளனர். இந்த ஒருமைப்பாட்டுக்குச் சான்றாக பாரிஸ் தமிழ் வணிகர்கள் முழுமையான கடையடைப் புச் செய்திருந்தனர். சுவிஸ் மற்றும் பிற நாட்டுப் பேரணிகள் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் சிங்கள தேசத்தின் சுதந்திரதினத்தை சர்வதேச ரீதியாக அம்பலப்படுத்துவதாக அமைந்திருந்தன.

தமிழர்களின் இவ்வெழுச்சியின் பின்னே ஆதாரமாய் நிற்பது அவர்களது சுதந்திர தாகமே. பொய்ப்பிரச்சாரங்கள் – மில்லியன் கணக்கில் செலவிடப்பட்டு நடாத்தப்படும் இராஜதந்திரத் தில்லு முல்லுகள் மூலம் தமிழர்களின் சுதந்திர தாகத்தை சர்வதேச ரீதி யாக நசுக்கிவிடலாம் எனக் கனவுகாணும் சந்திரிகா – கதிர்காமர் கூட்டணி தமிழ் தேசிய இனத்தின் ஆத்மார்த்த எழுச்சியை இவை ஒன்றும் செய்துவிட முடியாது என்பதை புரிந்துகொண்டேயாக வேண்டும்.

சிங்கள தேசம் சுதந்திரமாக கௌரவமாக பெருமிதமாக தம் சுதந்திரதினத்தைக் கொண்டாட வேண்டுமாயின் அது தமிழ் தேசம் மீதான தம் ஆக்கிரமிப்பைக் கைவிட்டு தமிழர் தேசத்தின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டும். தமிழர் தேசத்தின் விடுத லையே சிங்கள தேசத்தின் எதிர்காலத்திற்கான திறவுகோலாகும். நாம் இரு தேசங்களாகப் பிரிந்து வாழ்ந்து எம் சுதந்திரதினங்களை நாகரீகமாகக் கொண்டாடுவதே நவீன மனிதகுல வரலாற்றின் நிரூபிக்கப்பட்ட நியதியாகும் என்பதை தமிழீழம் சிறீலங்காவிற்கு அதனது பொன்விழாக் கொண்டாட்டங்களின்போது புரியவைத் துள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# மாங்குளச் சமர்

**"மாங்குளத்தில் பெரும் சமருக்கு ஜெயசிக்குறு துருப்புக்கள் தயாராகின்றன. மாங்குளத்தைப் பிடிப்பதற்கான இறுதிப்போர் மிகுந்த விலைகொடுத்து வெல்ல வேண்டிய யுத்தமாகவே இருக்கும்"**

– ஜெயசிக்குறுப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரிய

ஜெயசிக்குறு நடவடிக்கையில் சிறீலங்கா இராணுவம் ஏற்கனவே பெரும் விலையைக் கொடுத்து விட்டது. சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் ஒரு நடவடிக்கைக்கு என ஜெயசிக்குறு நடவடிக்கையில் இழக்கப்பட்டது போன்றதொரு ஆளணியையோ அன்றி ஆயுத தளபாடங்களையோ அது இதுவரை இழந்ததில்லை. இதே சமயம் ஜெயசிக்குறு நடவடிக்கைக்குக் கொடுக்கப்பட்ட விலையானது; அதனால் கிடைக்கப்போகும் அனுகூலங்களுக்கும் அதிகமானது என்றும் ஜெயசிக்குறு நடவடிக்கை மூலம் அடையமுற்படும் இலக்கினை இராணுவத்தினால் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்பது குறித்தும் இராணுவ ஆய்வாளர்கள் மத்தியில் பலமான கேள்விகள் எழுந்து வருகின்றன. அதிலும் ஜெயசிக்குறு ஆரம்பித்து இன்று ஒன்பது மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு இன்னும் பலமாகவே இருக்கின்றது. இதேவேளை மேஜர் ஜெனரல் சிறிலால் வீரசூரிய கருதுவது போல மாங்குளத்துக்கான இறுதிப் போரில் அதிக விலை கொடுக்க வேண்டிவரும் என்பது சரியான ஒரு எதிர்வு கூறலாகவே நிச்சயம் இருக்கும். ஆனால் இப்போரில் இராணுவம், சிறிலால் கருதுவது போல் வெற்றிபெற்று விட முடியுமா என்பதை தற்போது எதிர்வு கூறுதல் பொருத்தப்பாடான ஒன்றாக இருக்குமா? என்பது சந்தேகமே.

ஏனெனில், ஜெயசிக்குறு வாங்கிய பாடத்தின் அடிப்படையில் மேஜர் ஜெனரலின் கூற்றான, 'இராணுவம் பெரும் இழப்பைக் கொடுக்கவேண்டும்' என்பது சரியானதே. அத்தோடு வன்னிப் போர் முனையில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு நிலைகளை உடைத்து இராணுவம் முன்னேறுவதற்கான திறமை இராணுவத்துக்குள் ளதா என்றால் அதற்கும் உடனே பதில் கூறிவிட முடியாது. அவ்வாறானால் தாண்டிக்குளத்தில் இருந்து கரிப்பட்டமுறிப்பு, கனகராயன்குளம் பகுதி வரை இராணுவம் எவ்வாறு வந்துசேர முடிந்தது என்ற கேள்வி தவிர்க்க முடியாது எழக்கூடும். ஆனால் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை உற்று நோக்கும் எவருமே இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையிலான பாரிய ஆளணி வேறுபாடே இராணுவத்தின் முன்னேற்றத்திற்கு வாய்ப்பானதாக அமைந்திருந்ததைப் புரிந்து கொண்டிருப்பர். ஜெயசிக்குறு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நடந்த முதலாவது சமரில் ஓமந்தைப் பகுதியை இராணுவம் கைப்பற்றியது. இப்பகுதியை மட்டுமே இப்படைநடவடிக்கையில் இராணுவம் நேரடியாக எதிர்கொண்டு கைப்பற்றியது எனலாம்.

ஆனால், அதிலும் இராணுவம் கணிசமான உயிரிழப்புக்களையும் இராணுவ தளபாட இழப்புக்களையும் ஏற்க வேண்டியே இருந்தது. ஆனால், அதற்குப் பிற்பாடு இராணுவம் மேற்கொண்ட எந்த முயற்சியும் புலிகளின் நிலைகளைத் தாக்குவதன் மூலம் ஊடறுத்துக் கைப்பற்றியதாக இல்லை. மாறாக, புலிகள் தமது தந்திரோபாயத்திற்கு ஏற்ப விட்டு வெளியேறிய பகுதிகளையும் புலிகளின் பாதுகாப்புக்கு அப்பால் இருந்த வெளிப்புறப் பகுதிகளையும் இரகசிய நடவடிக்கை மூலமாக சிறீலங்கா இராணுவத்தினால் சென்றடையவும் கைப்பற்றவும் முடிந்தது. எடுத்துக்காட்டாக புளியங்குளம், புதூர் சந்தி, கனகராயன்குளம் ஆகிய மூன்று பகுதிகளையும் இராணுவம் கைப்பற்றுவதற்காக பலமுனைகளில் பல தடவைகள் பெரும் முயற்சியைச் செய்தது. ஆனால், அதனால் வெற்றி பெற முடியவில்லை. மாறாக பெரும் ஆளணி, இராணுவத் தளபாட இழப்புக்களையே இராணுவம் சந்திக்க வேண்டிவந்தது. அதிலும் குறிப்பாக





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசின் கௌரவச் சமர்

புளியங்குளத்துக்காக இடம்பெற்ற மூன்று மாதச் சமரானது சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போரில் தனித்துவம் பெற்றதாகும். புளியங்குளத்திற்காக பல தடவை தாக்குதல்களை மூன்று மாதத்திற்கு நடத்திய சிறீலங்கா இராணுவம் புலிகளின் எதிர்ப்பை முறியடித்துக் கைப்பற்றவில்லை. மாறாகப் பெரும் இழப்புக்களைச் சந்திக்க வேண்டிவந்தது. இந்த நிலையில் புளியங்குளம், புதூர் சந்தி, கனகராயன்குளம் பகுதிகள் வரை இராணுவம் நகரமுடிந்ததாக இருந்தது எனின், அது விடுதலைப் புலிகள் அப் பிரதேசங்களில் இருந்து தாமாக வெளியேறிய பின்னரே ஆகும். அதாவது, புலிகள் களநிலைக்கு ஏற்ப எடுத்துக்கொண்ட முடிவின்படி அப்பகுதியில் இருந்து வெளியேறினரே தவிர அப்பகுதியில் இருந்து இராணுவத்தால் புலிகளைத் தள்ள முடியவில்லை.

இதுதவிர மாங்குளத்தைக் கைப்பற்றும் சமர் பெரும் சமராக இருக்கும் என்பது நீண்டகாலமாகவே எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இச்சமருக்கான தயாரிப்புக்கள் பெருமளவில் இருதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டதொன்றாகவே உள்ளது. இந்தநிலையில் இராணுவம் மாங்குளம் நோக்கி ஒரு நகர்வை மேற்கொள்ளும் பட்சத்தில் அது இழப்புக்களைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். இதனைக் கடந்த வார இறுதியில் மூன்றுமுறிப்பு நோக்கி நகர இராணுவத்தினர் மேற்கொண்ட நகர்வின் போது இராணுவம் எதிர்கொண்ட பலமான அடியும் இழப்பும் இதனை உறுதி செய்வதாகவே இருந்தது. அத்தோடு இந்நகர்வு முயற்சியானது மாங்குளம் நோக்கிய நகர்வின் சிரமத்தையும் இராணுவத்திற்கு உணர்த்தியிருக்கும். இந்த நிலையில் மாங்குளத்திற்கான சமரில் பெரும் உயிரிழப்பைச் சந்திக்க வேண்டிவரும் என்ற கட்டளை அதிகாரியின் மதிப்பீடு எதிர்பார்த்ததே. இவ்வாறு இருந்தும் மாங்குளத்தில் இராணுவம் ஒரு பெரிய சமரைச் சந்திக்க முற்படுவதானது இராணுவ அரசியல் தலைமைப்பீடத்திற்கு வெற்றி ஒன்று அவசியமாக இருப்பதே காரணமாகும். ஏனெனில், சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து இன்று ஜெயசிக்குறு நடவடிக்கை வெற்றி என்பது மட்டுமல்ல பெரிதாகக் கூறிக் கொள்வதற்கான இராணுவ வெற்றி ஒன்று அவசியமாக தேவையாக உள்ளது என்பதுமாகும். அவ்வாறானதொரு இராணுவ வெற்றியொன்று ஈட்டப்படாது போனால் சுதந்திரப் பொன்விழாவுக்கு முன்னதாக சந்திரிகா அரசாங்கம் கட்டியெழுப்பிய இராணுவ வெற்றியை அதனால் நிலைப்படுத்திவிட முடியாது போய்விடலாம். ஏனெனில், சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்ட காலம் சிறீலங்கா இராணுவத்தின் சாதனையை மிகவும் அடி மட்டத்திற்குக் கொண்டு சென்றது எனலாம். இதன் விளைவாக இராணுவத்திற்குப் பொறுப்பேற்று வழி நடத்திய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகவேண்டி வந்தது. ஆனால் அதன் பின்னர் நடத்தப்பட்ட அரசியல் நாடகத்தின் மூலம் அவர் மீண்டும் பதவிக்குக் கொண்டுவரப்பட்டார். ஆயினும் தனது பெயரை மீண்டும் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டிய தேவை அவருக்குண்டு. இந்த நிலையில் மாங்குளச் சமரானது சிறீலங்கா அரசைப் பொறுத்தும் அதன் இராணுவத்தைப் பொறுத்தும் ஒரு கௌரவத்திற்கான பெரும் சமராகவே நிச்சயம் இருக்கும். இதற்காக எந்த இழப்பையும் பொருட்படுத்தாது இராணுவம் முழு முயற்சியையும் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவே அரச தரப்பில் பேச்சுக்கள் உலவிவருகின்றன.

ஆனால் பெரும் இழப்பில்கூட இச்சமரில் இராணுவத் தரப்பு வெற்றியானது உறுதியாக இருக்கும் என்று எவரும் உறுதியாக எதிர்வு கூற முடியாது. ஆனால் ஒன்றை மட்டும் எவரும் உறுதியாக அறுதியிட்டுக் கூறமுடியும். அதாவது, இச்சமரில் இராணுவத்தரப்பு வென்றாலும்கூட இராணுவத்தரப்பு பெரும் அனுகூலங்களைப் பெற்றுவிடப் போவதில்லை. ஏனெனில், இதற்கு முன்னராகவே ஜெயசிக்குறு நடவடிக்கை சிறீலங்கா இராணுவத்தின் வரலாற்றில் ஓர் பின்னடைவு என்பது உறுதிசெய்யப்பட்ட ஒன்றாக மாறிவிட்டது. அத்தோடு மாங்குளத்தில் இராணுவம் சந்திக்க நேரும் இழப்பு சிறீலங்கா இராணுவத்தின் இழப்புக்களின் அளவே பெரும் சிகரத்துக்குக் கொண்டு செல்வதாகவே இருக்கும். இந்த நிலையில் சந்திரிகா அரசின் கௌரவத்திற்கான சமர் சிறீலங்கா இராணுவத்திற்கு பெரும் துயர்படிந்த ஒன்றாக இருக்கும் என்பது உறுதியானதே. அத்தோடு சிறீலங்காவின் இராணுவ வரலாற்றில் இச்சமரானது என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும் என்பது தவறான மதிப்பீடாகாது. ★





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1998-ம் ஆண்டு:

# சில வாக்குமூலங்களும் வருடப் பலனும்

98-ம் ஆண்டு நடைபயிலத் தொடங்கிவிட்டது. 21-ம் நூற்றாண்டு அண்மிக்கின்றது; புதிய நூற்றாண்டை எதிர்கொள்ள – வரவேற்க உலகம் ஆயத்தமாகின்றது. சிறீலங்கா என்ன செய்கின்றது? தமிழீழம் எங்கே போகின்றது? இந்த நூற்றாண்டின் பெரும் வினாக்கள் இவை. இவை பற்றி அம்மையார் என்ன சொல்கின்றார்? "இதற்கு மேல் எதுவும் செய்யமுடியாது என்கிற நிலையிலே இத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தோம். இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டால் நாடு அழிவதை யாராலும் தடுக்க முடியாது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சிக்கலைத் தீர்க்க முடியாது. ஏனெனில் இன்று இனச் சிக்கல் அகோரவடிவம் பெற்றுவிட்டது. இதனை இவ்வாண்டிற்குள் தீர்க்காவிட்டால் நாட்டிற்கு எதிர்காலமே கிடைக்காது. வடக்கிலும் தெற்கிலும் மோதல்கள் தலைவிரித்தாடி நாடே அராஜகத்துள் அமிழ்ந்துவிடும். அப்போது நாம் எல்லோரும் கடலுக்குள் குதிக்க நேரிடும்." இங்கே அம்மையார் "இதற்குமேல் எதுவும் செய்ய முடியாது என்கிற நிலையிலே" என்பது தேக்க நிலையை அடைத்துள்ள ஜயசிக்குறு பற்றியதாகவும், "நாடு, நாடு" என அம்மையார் ஒப்பாரி வைப்பது சிங்களத்தையே குறிக்கும் என்பதும், நாம் என்பது சிங்களவரைக் குறிக்கும் என்பதுமே இந்த ஆண்டு, தமிழ் மக்கள் சார்பாக முன் வைக்கும் செய்தியாகப் போகின்றது என்றே நாம் பொருள் கொள்கின்றோம்.

இதேவேளை அரசியல்வாதிகள் தவிர்ந்த சிங்களத்தின் ஏனைய அறிஞர்கள், நற்சிந்தனையாளர், ஆய்வாளர் எல்லோரும் ஏகோபித்து என்ன சொல்கின்றார்கள்? இவர்கள் யாவரும் கூறும் கருத்தை சமூக, மதத்திற்கான மையத்தின் பணிப்பாளரான (Centre for Society and Religion) கலாநிதி ஒஸ்வால்ட் இவ்வாறு பிரதிபலிக்கின்றார்: "50 வருட சுதந்திரம் எமக்கு அளித்த சுதந்திரம் என்ன? அவநம்பிக்கை, விரக்தி என்கிற கருமுகில்களே பாரிய சிக்கல்களின் குவிமையத்துள் தீவு உள்ளது. மாயைகள் நிரம்பிய கற்பனை உலகில், தீவு யதார்த்தத்திற்கு புறம்பாக வாழ்கின்றது. சிங்களவரிடையே மனமாற்றமின்றி எவ்வாறு இனச் சிக்கலுக்கு தீர்வுகாண முடியும்? அது போலவே பொருண்மிய மேம்பாடு என்பதும் வெறும் மாயையே. தென்கிழக்கு, கிழக்காசிய நாடுகள் இன்று எமக்குச் சொல்லும் செய்தி இதுதான்: "உலக வங்கி கூறுவதுபோல் மானியங்களை முற்றாக நீக்கி, பொதுநலச் செலவுகளை முற்றாகக் குறைத்து, போரை நிறுத்தி, மேலதிக தொழிலாளரை வேலை நீக்கி, வேதனை உயர்வை நிறுத்தி செயற்பட சிறீலங்காவால் முடியுமா? விதைத்ததைத் தானே அறுக்கமுடியும்."

இக்கட்டத்தில் (ஓய்வு பெற்ற) லிங் கொமாண்டர் மார்க் செனவிரத்தினா, மிக்க அவலம் நிரம்பிய சிங்களத்தின் சித்திரம் ஒன்றை வரைகின்றார்: "அரசியல்வாதிகளால் அரசியலும் போரும் ஏற்படுத்திய குருதி வெள்ளத்தில் சிங்களம் மிதக்கின்றது. இந்தோனேசியாவின் காட்டுத்தீயை விடவும் வேகமாக வேலையின்மை பரவ, வாழ்க்கைச் செலவு விண்ணுக்கு ஏகிற, வேறு வழியின்றி தமது புதல்வர்களை வேதனத்திற்காக இராணுவத்தில் சேர்த்தவர்கள், அவர்கள் சமர்க்களங்களிலே சமாதியாவது கண்டு படும் துயரம் எல்லை தாண்டிவிட்டது. கண்ணீரை ஆறாகச் சொரியும் காலம் இப்போது சிறீலங்காவிற்கு வந்து விட்டது. வெறுமனே அழுத காலம் போய் இப்போது விம்மி, விம்மி அழுது வெதும்ப வேண்டிய காலம் வந்து விட்டது ("Cry not Sri Lanka but weep").

இப்போது சிறீலங்காவின் குடுகுடுப்பைக்காரரான பீரிஸ் என்ன சொல்கின்றார்? மெத்தவும் படித்த கனவானான பீரிஸ், விதி( ?)வசத்தால் அம்மையாரின் அந்தரங்க ஆலோசகரானபின் பிதற்றி, அரற்றி 'நல்லகாலம் வருகுது' என இப்போது திரும்ப, திரும்ப குறி சொல்கின்றார். "சிறீலங்காவின் வரலாற்றிலே இந்த ஆண்டே மிகத் தீர்க்கமான ஆண்டு. பெரும் திருப்பங்கள் ஏற்படப்போகும் ஆண்டு பொதியை நிறைவேற்ற ரணில் ஒத்துழைக்காவிட்டால் எம்மிடம் மாற்று வழிகள் உள்ளன...." என பீரிஸ் தொடர்கின்றார். மனம் போன போக்கில் பேசித் திரியும் பீரிஸ் கூறும் "மாற்றுவழி" தான் என்னவென்பதைத்தான் ஒரு முறை பார்த்து விடுவோமே! கடந்த வருடம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒக்டோபர் மாதமளவில் நாடாளுமன்றில் பீரிஸ் சமர்ப்பித்த அரசியல் யாப்பிற்கான திருத்தங்கள் பற்றிய பிரேரணைகளின் பின்னே பீரிஸ் இவ்வாறு புலம்பித்திரிகின்றார். ஆனால், இங்கேயுள்ள மோசமான உண்மை என்னவென்றால், இத்திருத்தங்கள் தொடர்பாய் பின்வரும் விடயங்களில் எவ்வித கருத்தொருமைப்பாடும் எவரிடமும் ஏற்படவில்லை என்பதுதான். அதிகாரம் 1 குறிக்கும் அரசு, இறையாண்மை2, மக்கள் அதிகாரம் 15 குறிக்கும் பிரதேசங்களான அதிகாரப் பகிர்வு; அதிகாரம் 16 குறிக்கும் அரச நிலம்; மற்றும் அதிகாரம் 22, 23 குறிக்கும் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தாம் அவை.

தீர்க முடியாத இச்சிக்கலை ஒதுக்கி விட்டு, எல்லோரையும் திசை திருப்ப இன்னொரு கண்கட்டு வித்தையை பீரிஸ் காட்டுகின்றார். அதுதான் அரசியல் யாப்பின் 86–ம் பிரிவினை பயன்படுத்தி எவரையும் கட்டுப்படுத்தாத பொது மக்கள் வாக்கெடுப்பிற்கு பொதியை விடப் போகின்றோம்" என்பதுதான் அந்த வித்தை.

அந்த 86–ம் பிரிவு என்ன சொல்கின்றது? "85–ம் பிரிவின் விதிகளுக்கு உட்பட்ட வகையில் ஜனாதிபதிதான் விரும்பினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என தான் கருதும் விடயமொன்றை பொது மக்கள் வாக்கெடுப்பிற்கு விட முடியும்." ஆனால் யாப்பிற்கு 85–ம் பிரிவு என்ன வரையறை செய்கின்றது? "யாப்பிற்கான எத்திருத்தமும் நாடாளுமன்றின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்று பொதுமக்கள் தீர்ப்பிற்கு விடப்பட வேண்டும்" என்கிறது. எனவே "இந்தப் பழமும் புளிக்கும்" என அரசியல் யாப்பை மிகக் கடுமையாக அம்மையார் இப்போது சாடுகின்றார். ஆனால், அதேவேளை, அதே அரசியல் யாப்பு வழங்கும் அளவற்ற அதிகாரங்களைப் பயன்படுத்தியே ஆழவும் செய்கின்றார். இப்போது புதிதாக பொதிக்கு "மக்கள் ஆணையை" பெறப்போகிறாராம். ஏற்கனவே 'அமைதியை உருவாக்க' பெற்ற மக்கள் ஆணைக்கு என்ன நடந்தது? அம்மையார் இவ்வாறு பரிதவிப்பது கண்டு 'கொடுப்புக்குள்' சிரிக்கின்றார் ரணில். அம்மையார் எடுக்கும் சகல முயற்சிகளையும் 'செக்மேற்' செய்து "இந்தப் பூனையும் பால் குடிக்குமா" என்றிருக்கும் ரணில், அம்மையார் எதனை, எவற்றை, எவ்வாறு கூறி பதவிக்கு வந்தாரோ அத்தனையையும் பிரயோகிக்கத் தயாராகின்றார். வரலாற்றின் நகை முரண் நாடகமிது.

இப்போது எமது கதை; புதிய வரலாறு படைக்கும் புலிகள் கதை. 1812 ஜூன் மாதம் ரஷ்யா மீது பாய்ந்த போது, இன்னும் ஒரு மாதத்திற்குள் மொஸ்கோவில் இருப்பானாம் என்றான் நெப்போலியன். பின் ஒன்றேகால் நூற்றாண்டின் பின் 1981 ஜூனில் சோவியத் ரஷ்யா மீது படையெடுத்த ஹிட்லர் வருட முடிவிற்குள் மொஸ்கோ என்வசம் என் நம்பினானாம். வரலாற்றின் செல்லாக்காசாகி விட்ட இத்தகைய காலக்கெடுக்களோடு ரத்தவத்தவின் புகழ்(?)மிக்க காலக்கெடுக்களையும் சேர்த்த பெருமை மட்டுமா புலிகளைச் சேரும்? ஜயசிக்குறுவை அதன் மூல இலக்குகளிலிருந்து விலக்கி,

**50 வருட சுதந்திரம் எமக்கு அளித்த சுதந்திரம் என்ன? அவநம்பிக்கை, விரக்தி என்கிற கருமுகில்களே பாரிய சிக்கல்களின் குவிமையத்துள் தீவு உள்ளது. மாயைகள் நிரம்பிய கற்பனை உலகில், தீவு யதார்த்தத்திற்கு புறம்பாக வாழ்கின்றது. சிங்களவரிடையே மனமாற்றமின்றி எவ்வாறு இனச்சிக்கலுக்கு தீர்வுகாண முடியும்?**

அதனை இயக்குவோரின் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கி முடிவற்ற போர் நிலைமைக்குள் சிங்களத்தை தள்ளிவிட்ட, தமிழரின் விடுதலைப் போரின் தாக்கம் எப்படிப்பட்டது? "தாங்கொணாத அழுத்தம்" இப்போது சிங்களத்தின் மேல் புலிகளால் பிரயோகிக்கப்படுகின்றது.

இத் "தாங்கொணாத அழுத்தம்" என்பதின் பொருள் என்னவென்பதை, தேசிய சமாதானப் பேரவைக்காக மார்க் ஆய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கூறுகின்றன. 1996–ம் ஆண்டு போருக்காக ஒதுக்கப்பட்டது 4600 கோடி. ஆனால் உண்மையில் போரின் நேரடி விளைவுகள் யாவற்றையும் உள்ளடக்கினால் இத்தொகை 16,500 கோடி என்கிறது மார்க். மொத்த தேசிய உற்பத்தியில் 21.3 விழுக்காடு இது. கடந்த 14 வருட காலத்தில் போரினால் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி 2,34,000 கோடி (2340 பில்லியன் ரூபா). இது 1996–ம் ஆண்டு தேசிய உற்பத்தியான 76,800 கோடியின் மும்மடங்கு. போர் நடந்திராவிட்டால் சிறீலங்காவின் பொருண்மியத் துறையே ஒட்டுமொத்தமாக 40 விழுக்காடு வளர்ச்சியைப் பெற்றிருக்கும். அதன் பொருண்மிய வளர்ச்சி வருடமொன்றிற்கு 7 விழுக்காட்டை நெருங்கியிருக்கும்.

(1996–ம் ஆண்டு வளர்ச்சி 4.3 விழுக்காடு) சராசரி நபரின் வருமானம் 40 விழுக்காடால் அதிகரித்திருக்கும். வேலையின்மை என்பது தற்போதைய 12 விழுக்காட்டிலிருந்து 3 அல்லது 4 விழுக்காடாக குறைந்திருக்கும் இவ்வாறாக இப்புள்ளி விபரங்கள் போர் நிறுத்தப்பட்டால் எண்ணற்ற பாரிய நன்மைகள் கிடைக்கும் என ஏக்கம் தெரிவிக்கின்றது.

நம்பமுடியவில்லை என்கிறீர்களா? இறுதியாக இன்னொரு வாக்குமூலம். யாழ்ப்பாணத்தில் முன்னர் அரச அதிபராக இருந்து பின்னர் பல இராஜதந்திரப் பணிகளில் ஈடுபட்ட நெவில் ஜெயவீரா கூறுகின்றார்: "மிக விரைவிலோ அல்லது பின்னரோ வடகிழக்கில் வாழும் தமிழர்கள் சிறீலங்காவில் இருந்து முற்றாகப் பிரிந்தோ அல்லது பிரிவினைக்கு சமமான அளவு அதிகாரப் பகிர்வினையோ பெற்று விடுவார்கள். இது நடந்து ஒரு பத்தாண்டுக்குள் அல்லது அதற்கு குறைவான காலத்திலோ சிங்களவர் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன வடகிழக்குப் பகுதி அரசியல், பொருண்மிய ரீதியில் மிக்க வலிமையுடைய எழுச்சிபெற்ற பகுதியாகிவிடும்." (நெவில் இவ்வாறு கூறுவதன் நோக்கம் அதிகாரப் பகிர்வு சிங்களவர்க்கு இப்போது தேவையில்லை. தமிழர்க்கு மட்டுமே தேவை. அது சிங்களப் பகுதியைத் துண்டு துண்டாக்கி சீரழித்து விடும் என்பதற்காக என்பது வேறுவிடயம்) ஆண்டுத் தொடக்கத்திலே இவ்வாறான பல இடித்துரைப்பு வாக்கு மூலங்கள் சிங்களத்தில் எழுகின்றன.

இவற்றிலிருந்தே இந்த ஆண்டுப்பலன் எவ்வாறிருக்கும் என்பது நாம் ஊகிக்கக் கூடிய விடயமல்லவா.

**- வே. பாலகுமார்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏன் இந்த வார்த்தை விளையாட்டு?

"இந்த ஆண்டின் இறுதிக்குள் போரை எப்படியும் முடிவுக்குக்குள் கொண்டுவருவேன்" இது சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் புதிய பிரகடனம். வழமையான பிதற்றல் என்றபோதும், புதிய கால எல்லையுடன் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மார்ச் முதலாம் திகதி, பொலநறுவையில் நடந்த வைபவமொன்றில் உரையாற்றுகையில் இப்புதிய காலக் கெடுவை அவர் சிங்கள மக்கள் மத்தியில் முன்வைத்தார். அதேவேளை, இன்னுமொரு வழமையான பாடலையும் அவர் அங்கு பாடத் தவறவில்லை. அதாவது இந்த ஆண்டுக்குள் அரசியல் தீர்வுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்பதே. இவற்றை எல்லாம் எப்படி செய்து முடிப்பார்? இதற்கான சாத்தியம் உண்டா? எந்த நம்பிக்கையின் பேரில் இந்த காலநிர்ணயங்கள்?

இவை யாராலும் விடை காணமுடியாத கேள்விகள்.

ஏற்கனவே இது போன்ற பிரகடனங்கள் பல செய்யப்பட்டன. காலநிர்ணயங்களும் இஸ்டத்திற்கு செய்யப்பட்டன. அவை மக்களால் மறக்கப்படுகின்றபோது, மீண்டும் புதிய வார்த்தை வீச்சுகளால் மக்கள் சூடேற்றப்பட்டனர். அல்லது இவ்விதமான திசைதிருப்பல்கள் மூலம் தம்மைச் சுற்றிய யதார்த்தத்தை மக்கள் மறக்கடிக்க வைக்கப்பட்டனர்.

இந்த வார்த்தை முழக்கங்கள் ஒரு புறத்தே நிகழ்ந்தாலும், மறுபுறத்தே கள நிலைமை முற்றிலும் வேறுபட்ட புதிய உலகத்தைக் காட்டிக்கொண்டிருக்கின்றது.

இலங்கைத் தீவில், தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான காலம் கனிந்து வருவதையே கள நிலைமை காட்டுகின்றது.

இந்த ஆண்டு, ஒரு பெரும் கடற்சமருடன் விடுதலைப் புலிகள் சிங்களப் படைமீதான தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றனர். சிறீலங்காப் படைக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தி அதன் கடலாதிக்க ஆசைக்கு மரண அடி கொடுக்கப்பட்டிருக்கின்றது. கடற்புலிகளின் பலம் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. தரைப்பாதை அமைத்து ஆக்கிரமிப்புப் படையினருக்கு, தொடர்ந்த பாதுகாப்பான செலவு குறைந்த விநியோகத்தை மேற்கொள்ள வென ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறு



## அரசியல்வாதிகளால் அதுதான் முடிகிறது!

இராணுவ நடவடிக்கை, சிதறடிக்கப்பட்டு நாலா திசையிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாய் தனது இலக்கு நோக்கி நகர அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் கடல் விநியோகமும் பலத்த ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. இருக்கும் ஒரே வழி ஆகாய மார்க்கமான செலவுகூடிய விநியோகப்பாதை. அதுகூட பாதுகாப்பானது என்பதற்கு எந்த உத்தரவாதமுமற்ற, ஏற்கனவே பலதடவை தாக்குதலுக்கு இலக்கானதே.

98–ம் ஆண்டு, ஒரு புதிய போராட்டப் பரிமாணத்தை வெளிப்படுத்தும் ஆண்டாக அமையப்போகின்றது என்பதே பொதுவான நம்பிக்கை, சிங்கள ஆக்கிரமிப்புப் பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டு, தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புக்கள் படிப்படியாக வலுப்பெறுகின்ற வளர்ச்சிக் கட்டத்தை இந்த ஆண்டு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதே எதிர்பார்ப்பு. அதற்கான அறிகுறிகள் ஆண்டின் ஆரம்ப கட்டத்திலேயே வெளிப்பட்டுள்ளன. தரையிலும் தமது உறுதியான பலத்தை வெளிப்படுத்தும் விடுதலைப் புலிகள் தமது கடற்பலத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

நாலாவது ஆண்டைப் பூர்த்தி செய்தல் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தற்போதைய மக்கள் ஐக்கிய முன்னணி அரசு, முழுமையாக மூன்றாண்டுகளில் செய்த சாதனையாக ஒரு முழுமையான பிரகடனப்படுத்தப்பட்ட போரை தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விட்டதைத் தவிர வேறு எதனையும் சொல்வதற்கில்லை. ஒரு ஆண்டுகளை நெருங்கும் ஜெயசிக்குறு, என்றுமில்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாத இராணுவச் செலவீனம், வகை தொகையின்றிப் பெருகும் மரணங்கள் இதுவே சந்திரிகா அரசின் நான்குவருடச் சாதனைகள்.

முன்னைய சிங்கள ஆட்சிகளை, தூக்கிக் கடாசிவிடும் வகையில் தற்போதைய அரசின் தமிழின அழிப்புப் போர் சமாதானத்துக்கான யுத்தம் என்ற பெயரில் நவீனத்துவம் பெற்று, பல உயிர்களைக் காவுகொண்டிருக்கின்றது... காவு கேட்டு நிற்கின்றது.

இந்த ஆட்சி, பதவிக் கதிரையில் அமர்ந்தபோது கையிலெடுத்த தீர்வுப் பொதி அரசியலமைப்புத் திருத்தம் போன்ற வார்த்தைச் சிலம்பங்கள் இன்றும் அதேவேகத்துடன் சுழற்றப்படுகின்றது. யுத்தமுழக்கம் ஒருபுறம் சமாதானம் பற்றிய கூப்பாடுகள் ஒருபுறமுமாக தமிழ் மக்களின் செவிப்பறைகள் கிழிந்ததுதான் மிச்சம்.

சிங்கள அரசாங்கத்தின் இந்த நளின அசைவுகளில் மனதைப் பறிகொடுத்து வாய்பிளந்து, புளதகாங்கிதம் அடைய தமிழ் மக்கள் தயாராக இல்லை என்றபோதும், உலகத்தைக் கவர இந்த உள்ளூர் நாட்டியம் மேடையேற்றப்படுகின்றது. எதுவாக இருப்பினும், மறுதேர்தலை எதிர்கொள்ளவும், ஆட்சிக் காலத்தை ஆபத்தின்றி ஓட்டவும் மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளைக் கொடுக்க முடியும். பொய்யான தகவல்களைக் கொடுத்து மக்களை ஏமாற்றவும் முடியும். ஆனால், வரலாற்றின் ஓட்டத்தை யாராலும் திசை திருப்ப முடிவதில்லை. பிரவாகமெடுத்துப் பாயும் அந்த வரலாற்றுப் பெருநதியின் வந்தொதுங்கும் சருகுகளாக மறைந்துபோபவர்களால், அதற்கு தடுப்புப் போட முடியுமா? அடக்குமுறையின் கொடுமைக்கு ஆட்பட்டு துன்பச் சிலுவை சுமந்த மக்கள், விடுதலை பெறுவது வரலாற்று நியதி. அதற்கான காலம் கனிந்து நெருங்கும் வேளை, அதைத்தடுப்போரும் இலர்.

தமிழீழமும் தன் விடுதலை வாசலில் நிற்கின்றது. ஒரு இனிய புலர்வின் திசையில் அது விழிகளைப் புதைத்து நிற்கின்றது. இந்த அற்புதமான காலப்பிரவத்திற்காக... கொடுமையான வேதனையைச் சுமந்தபடி... அழுத முகத்துடன் இனிய சுதந்திரக்குழந்தையின் மழலைச் சிரிப்பிற்காக.... அது காத்திருக்கின்றது.

“சந்திரிகாக்களின்” வார்த்தைப் பிதற்றல்கள் தமிழ் மக்களின் செவிகளில் எட்டா. ஏனெனில், இனிய சுரத்திற்காக ஏங்கி நிற்கும் செவிகள் அபசுரங்களை அனுமதிப்பதில்லை.

— சுப்பு

# சந்திரிகாவின் நிராகரிப்பு

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ‘ஜெனரல்’ அனுருத்த ரத்வத்தவின் இராஜினாமாக் கடிதத்தை சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்பதற்கு மறுத்துள்ளார். இதற்கான காரணத்தை தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் “நாட்டின் பாதுகாப்பிற்குப் பங்கம் ஏற்படுமானால் நாம் அனைவரும் இணைந்து அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்” எனவும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி சந்திரிகாவின் இக்கூற்றுக்களில் அவர்கள் பார்வையில் அர்த்தமும் உண்டு. அவர் நிராகரித்தமைக்குக் காரணமும் உண்டு. ஏனெனில், அமைச்சர் அனுருத்த ரத்வத்த சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரே ஒழிய, பாதுகாப்பு அமைச்சரோ அன்றி முப்படைகளின் தளபதியோ அல்ல. இந்த நிலையில் பாதுகாப்பிற்கு ஏற்படும் குந்தகத்திற்கு அமைச்சர் ரத்வத்தவுக்கு அப்பாலும் பலர் பொறுப்பேற்க வேண்டியுள்ளனர். ஆகையினால், பாதுகாப்பிற்கு குந்தகம் என்ற ரீதியில் பதவி விலகலானது தனியாக ரத்வத்தவுடன் நின்றுவிடக் கூடியதல்ல. இந்த ரீதியில், தலதா மாளிகைக்கு அருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்பிற்கு தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகுவதானால் முதலில் விலக வேண்டியவராக பாதுகாப்பு அமைச்சரும், முப்படைகளின் தளபதியுமான ஜனாதிபதி சந்திரிகாவே செய்திருக்க வேண்டும். இதைத் தொடர்ந்து, நாட்டில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்த அங்கீகாரம் அளித்த அமைச்சரவையும் பதவி விலகியிருக்க வேண்டும். இந்த நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் இராஜினாமாவை ஏற்க மறுத்தமை ஒருவகையில் சரியானதே. அதாவது அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டிய இந்நிகழ்விற்காக அமைச்சர் அனுருத்த ரத்வத்த மட்டும் பதவி விலகுவதை ஜனாதிபதி எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த யுத்தத்தில் ஆர்வமுள்ளவர்தான். யுத்தத்தை முழுமையாகப் பொறுப்பும் எடுத்தும் நடத்தியவர்தான். ஆனால், யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கான தீர்மானத்தை அவர் தனியாகவே மேற்கொண்டாரா? ஏனெனில், யுத்தத்தை தொடர்ந்து நடத்தும் தீர்மானத்தை சந்திரிகா தலைமையிலான அரசாங்கமே எடுத்தது. ஆகையினால், யுத்ததிற்கு முழுப்பொறுப்பு அரசாங்கமே. ஆகையினால், பாதுகாப்பிற்குப் பங்கம் என்ற ரீதியில் தார்மீகப் பொறுப்பேற்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்கு முன்பதாகப் பதவி விலகியிருக்க வேண்டிய பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சந்திரிகா எந்த வகையில் இவ் இராஜினாமாக் கடிதத்தினை ஏற்றுக் கொள்ள முடியும்? ரத்வத்த தார்மீகப் பொறுப்பு என்ற ரீதியில் பதவிவிலக எவ்வாறு ஜனாதிபதி தனது தார்மீகப் பொறுப்பை மறந்து பதவி விலகல் கடிதத்தை ஏற்க முடியும்? ஆனால், ஜனாதிபதி இவ்வாறு முடிவு செய்யினும், இவ் யுத்தினால் விளைந்துள்ள பாதிப்புகளுக்கு அதனை நேரடியாக வழிநடத்திச் செல்லும் அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கும் கணிசமான பங்கு உண்டு.

ஏனெனில், யுத்தத்தை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நடத்தினும், யுத்த தந்திரோபாயங்களிலும் – அணுகுமுறையிலும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவின் கை நிரம்பவே உண்டு. அத்தோடு, யுத்தம் குறித்த முழுமையான தகவல் அறிந்தவராகவும் அவரே இருந்துள்ளார். இந்நிலையில் பாதுகாப்பிற்குக் குந்தகம் ஏற்படுமானால் அமைச்சர் ரத்வத்தவே பொறுப்பு ஏற்க வேண்டும். இது தவிர, கண்டியில் இடம்பெறுவதாக இருந்த சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட்டங்களின் பாதுகாப்பிற்கான முழுப்பொறுப்பையும் அவரே ஏற்றும் இருந்தார். ஆகையினால், இக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுவிட்டதற்கான தார்மீகப் பொறுப்பை அவர் ஏற்க வேண்டியது அவரது கடமையாகும். அவ்வாறிருந்தும், ‘அவர் பொறுப்பு ஏற்கத் தேவையில்லை. அரசாங்கமே பொறுப்பு’ என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருப்பதானது அமைச்சர் ரத்வத்தவுக்கு உரிய பங்கிலிருந்தும் அவரைவிடுவிப்பது போன்றதாகும். ஆனால், இது தனியாக அமைச்சர் ரத்வத்தையையும் மட்டும் பாதுகாக்கும் செயலல்ல. ஜனாதிபதி தன்னையும் தனது ஆட்சி அதிகாரத்தையும் அதற்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாக்கும் செயலாகும். ஏனெனில், அமைச்சர் பதவி விலகிச் செல்ல அனுமதிக்கப்படுவதானால் ஒட்டுமொத்தமாக யுத்தத்திற்கே பொறுப்பாகவுள்ள அரசாங்கமும் பதவிவிலகுதல் தவிர்க்க முடியாது போகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஈழப்போர் சதுரங்கம்

# காய்களை நகர்த்துவது யார்?



**ச. வில்லவன்**

நீண்டு 195 நாட்களாக இழுபடும் இரு முனைகளில் இரண்டு படையணிகளுடன் தொடங்கப்பட்டு அவ் இரண்டு அணிகளும் ஒரு புள்ளியிலே சந்தித்து அதன் பின் மேலும் குறித்த தூரம் நகர்ந்து வன்னியின் மையமெனத் தக்க இடத்தைக் கைப்பற்றி வெசாக் தினத்துக்கு முன் கொடியேற்றுவதுடன் 1–ம் கட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவது என்ற பாரிய இலக்குடன் தொடங்கப்பட்ட ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை இன்னமும் தன் 1–ம் கட்ட இலக்கையே எட்ட முடியாமல் 2–ம் கட்டங்களைப் பூர்த்தி செய்து விட்டு 3–ம் கட்டம் ஆரம்பமாகிவிட்டதா இல்லையா என்ற மயக்க நிலையிலே நின்றுகொண்டிருக்கிறது.

எப்பாடுபட்டாவது வவுனியாவில் இருந்து யாழ்குடா நாட்டுக்குத் தரைப்பாதை ஒன்றைத் திறந்துவிடுவது என்ற அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் பகீரத முயற்சிகளை நமது தேசியப் படையணி எதிர்த்து இன்று வரை தடுத்து முறியடித்து வருவது தமிழ் மக்களின் உள்ள உரத்தை உயர்த்தி இருக்கிறது. மறுவளமாக சிங்கள மக்களிடையேயோ யுத்தம் குறித்த சலிப்பு உணர்வை ஜெயசிக்குறுவின் இழப்புகளும் கால நீடிப்பும் விளைவித்துவிட்டது. இந்நிலவரத்தை மாற்றி தன்னை சிங்களத்தின் நவீன துட்டகைமுனுவாக மீளவும் நிறுவிக்கொள்ள (ரிவிரெச நடவடிக்கைக்கு பின் ரத்வத்தை அவ்வாறே கொண்டாடப்பட்டார்.) ரத்வத்தை படாதபாடுபடுகிறார்.

திருமலை மாவட்டத்தில் மூதூரில் 8 முகாம்களை மூடியும்யாழ் குடா நாட்டில் பல இடங்களில் இருந்தும் இராணுவத்தை ஜெயசிக்குறு முனையில் கொண்டுவந்து குவித்தார். இதன்மூலம் 2 டிவிசன்களுடன் தொடங்கிய நடவடிக்கை இப்போது 3 டிவிசன் படைகள் குவிக்கப்பட்டன.

நடவடிக்கைக்குத் தேவையான ஆளணியை இவ்வாறு திரட்டிய ஜெனரல் தொடர்ந்து யுத்த முனையின் கடும் வாழ்வினால் சோர்வுற்றும், நோய்களினால் அவதியுற்றும் போரிடும் ஆர்வம் குன்றி நின்ற படையினரின் மனோவலிமையை உயர்த்த முன்னரங்க நிலைகளிற்கு அடிக்கடி விஜயம் செய்து அவர்களின் மனோநிலையை மேம்படுத்த முயன்றார்.

இந்நிலையில் தான் எதிர்பாராத நிகழ்வுகள் இரண்டு நடந்தேறின. ஒன்று கொழும்பின் புறநகர் பகுதியான களனி திஸ்ஸவில் அமைந்திருந்த அனல் மின் நிலையத்தில் இடம்பெற்ற நேரக் கணிப்புக் குண்டுத் தாக்குதல், இரண்டு யாழ் குடாநாட்டில் பரவலாக இடம்பெறத் தொடங்கியுள்ள புலிகளின் அதிரடித் தாக்குதல் இவை இரண்டுமே ரத்வத்தையின் கவனத்தை ஜெயசிக்குறு நடவடிக்கையிலே மட்டும் குவித்து ஈடுபட முடியாமல் சிதறடித்தன.

கொழும்பின் பாதுகாப்பிற்காக மேலும் புதிய புதிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய தேவை உணரப்பட்டமையால் அங்கு படையினரை திரட்டி வைத்திருக்க வேண்டிய நிலை. ஏனெனில், முன்பு வெறுமனே வெடித்த குண்டுகள் போய் இப்போது முழுநாள் நீளத்துக்கு துப்பாக்கிச் சண்டை நடைபெறுமளவுக்கு கொழும்பில் பாதுகாப்பின் இலட்சணம் இருக்கிறது.

சரி கைப்பற்றப்பட்ட குடாநாட்டில் வீணே முடங்கிக் கிடக்கும் துருப்புக்களையாவது அவர்களுக்கு பாதை திறக்கப் பாவிக்கலாமென்றால் அங்கேயும் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி விட்டனர். புலிகள் அங்கிங்கெனாதபடி எங்கும் நடைபெறும் துணிகரத்தாக்குதல் பட்டப்பகலிலேயே வட்டுக் கோட்டையிலிருந்து சங்கரத்தைக்கு ரோந்து சென்ற அணி சிதறடிக்கப்பட்டு 22 பேர் கொல்லப்பட்ட பின்னர் அங்கிருந்து துருப்புக்களை எடுக்கும் நிலை மாறித் திரும்பவும் துருப்புக்களை அங்கே கொட்டிக்குவிக்க வேண்டிய நிலை மீண்டு விட்டது.

ஆக ஒட்டுமொத்தத்தில் ஜெயசிக்குறு இன்று ஒரு தேக்க நிலையை அடைந்து விட்டது. ஆனால் ஒரு வாரத்துக்குமுன் 3–ம் கட்ட நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டது என்று அரசு அறிந்ததே. இரண்டு மூன்று நாட்களாக அரச வானொலி அதைப்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிப் புலம்பியதே? அது ஏன்?

கொழும்பில் நடந்த இரண்டாவது குண்டு வெடிப்புச் சம்பவத்தின் அதிர்வுகளை, கண்டனக் குரல்களின் வீரியத்தை திசை திருப்பி வடக்கு யுத்த முனையிலே சிங்களத்தின் கவனத்தைக் குவிக்கும் முயற்சியே அது. அப்படியாயின் 3–ம் கட்ட நடவடிக்கை தொடங்கப்பட மாட்டாதா? என்றால் அப்படிச் சொல்வதற்கில்லை. ஏனெனில் “மூக்கனும் முதலையும் கொண்டது விடா” என்பது போல நாடு எக்கேடு கெட்டாலும் தான் பிடித்த பிடி விடேன் என்று நிற்கும் ரத்வத்தை அப்படி நின்று விடக்கூடியவரல்ல. அவரை அனுமதிக்கும் சந்திரிகாவும் அப்படியே சந்திரிகா யுத்தத்தில் வென்றால் தானும் புகழில் நனைவார். தோல்வியுற்றால் அதற்கு ரத்வத்தையை பலிக்கடாவாக்கிவிட்டு தான் மீளவும் சமாதான தேவதையாகி கழற்றி வைத்துவிட்ட ஒலிவ் இலை தாங்கிய கைப்பையை மீளவும் கொழுவிக்கொண்டு வெண்ணிறப் புன்னகையை உதிர்க்கலாம்.

அப்படியாயின் எங்கிருந்து ஜெயசிக்குறு பூதம் தன் அடுத்த நகர்வை முன்னெடுக்கும்? எம்முன் உள்ள கேள்வி இது. முதலாவதாக கிளிநொச்சியில் இருந்து முன்னேறி இரணைமடுச் சந்தியை அடைந்து வன்னியின் கண்டி வீதிக்கு இருபக்கமுமுள்ள ஒரே போக்குவரத்துப் பாதையை அடைத்து அங்கிருந்து மேலும் முன்னேறி மாங்குளத்தை அடைவது. இது மாரிகாலம் தொடங்கிவிட்ட தற்போதைய சூழலில் சாத்தியப்படுமா? ஏனெனில், இராணுவத்தினருக்கு தற்போதைய யுத்தத்தில் முதுகெலும்பாக உள்ள யுத்த டாங்கிகளும் கவசம் தரித்த துருப்புக் காவிகளும் கிளிநொச்சியின் வயல் நிலங்களிலும் களிமண் நிலத்திலும் புதைந்து போய் நிற்க இராணுவம் அவதிப்பட நேரும். ஆகவே இப்புதைசேற்றில் இராணுவம் கால் வைக்குமா? கரிப்பட்ட முறிப்பில் இருந்து காடுகளுக்கு முன்னேற முயன்றாலும் இதே நிலையையே படைகள் எதிர்கொள்ள நேரிடலாம். அப்படியாயின் அடுத்த நகர்வுப் பாதையின் பிரதான வீதியூடாக புளியங்குளம் பகுதியைத் தாண்டி இராணுவம் முன்னேறவேண்டியதே 5 மாதங்களுக்கு மேலாக அவ்விடத்தில் புலிகளுடன் மோதி அடைந்த அனுபவங்களின் வலி படைகளை அப்படி கால் எடுத்து வைக்க அனுமதிக்குமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆக தமிழீழ போர் சதுரங்கப் பலகையில் ஜெயசிக்குறு முனைக்கு ரத்வத்தை வகுத்த வியூகம் குடாநாட்டு முனைக்கு புலிகள் நகர்த்திய காய்களால் உடைத்து மீளவும் குடாநாட்டை நோக்கி தற்காப்பு நிலைக்கு மீள்கின்றன. அவர் நகர்த்திய காய்கள் அதாவது, ஈழப்போர் சதுரங்கத்தில் எந்தக் காய்கள் எங்கு நகர வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குவது புலிகளே.

# ஆளும்கட்சியினரைப் போன்று ஐ.தே.கவினரும் தமிழர் பிரச்சனையில் அரசியல் இலாபம் தேடுவதிலேயே குறி!

## அரசியல் அவதானிகள் கருத்து

இனப்பிரச்சனைக்குத் தீர்வாக சந்திரிகா அரசு முன்வைத்திருக்கும் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஐ.தே.கட்சியினரும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் வெளிப்படுத்திவரும் கருத்துக்கள் “குட்டையைக் குழப்பி அரசியல் இலாபம் தேடும்” முயற்சியாக விருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் இந்தியப் பத்திரிகையான ‘இந்து’வுக்கு வழங்கிய பேட்டியில் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள கருத்துக்களும் இவ்வாறே அமைந்துள்ளன.

“அரசாங்கம் தெரிவித்திருப்பதைப்போல இலங்கையைப் பிராந்தியங்களின் ஒன்றியமாக மாற்றுவதை நாங்கள் விரும்பவில்லை. அதனை எதிர்த்திருக்கின்றோம். ஆனால், அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதற்கு நாங்கள் ஆதரவாகவே உள்ளோம். நாம் சமச்சீரற்ற அதிகாரப் பரவலாக்கலையே கோருகின்றோம்” என்ற கருத்து இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வுக்கு தான் ஒத்துழைக்கப் போவதில்லையென்பதை தெரிவிப்பதாக கருதப்படுகின்றது. அதாவது, அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவளிப்பதாகவும், அதிகாரப்பரவலாக்கலின் அலகையும் ஒற்றையாட்சி முறை மாற்றத்தையும் எதிர்ப்பதாகவும் தெரிவிக்கும் கருத்து ஒன்றுக்கொன்று முரணானதாகவும் உள்ளதாக ஒரே நேரத்தில் சிறுபான்மையினரிடமும் பேரினவாதிகளிடமும் நல்லபிள்ளை பேரெடுக்கும் முயற்சியாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் “இனப்பிரச்சனைக்கு மத்தியஸ்த்தம் வகிக்க மூன்றாவது நபரை இலங்கை அரசு விரும்பினால் இந்தியாவின் ஆலோசனையையும் பெறவேண்டும். பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க உதவுவதற்கு பிரிட்டன் முன்வந்திருக்கிறது என்பதானது இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் இந்தியாவை இழுத்துவிடும் வகையில் தூபம் போடுவதாய் அமைவதாகவும், அதே வேளையில் இலங்கையில் தற்போது அமெரிக்க பிரசன்னம் செல்வாக்கு அதிகரித்து வரும் வேளையில் இந்தியாவை இலங்கை விவகாரத்தில் இழுத்துவிடுவதன் மூலம் இந்திய அமெரிக்க முறுகலைத் தோற்றுவிக்கக் கூடியதெனவும் கூறப்படுகிறது.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தலானபோது அதற்குப் பூரண ஆதரவு வழங்காத ரணில் அவ்வொப்பந்தத்தின் முக்கிய அம்சமான வடக்கு – கிழக்கு இணைப்பை இப்போதும் எதிர்ப்பவர். அப்படியான ரணில் இப்போது இக்கருத்தை வெளியிட்டது பிள்ளையைக் கிள்ளித் தொட்டிலை ஆட்டுவது என்று கருதப்படுகிறது.

‘அதிகாரப் பரவலை ஆதரிக்கிறோம் என்பதன்’ மூலம் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர் போலவும் பிராந்தியங்களின் ஒன்றியமாக மாற்றுவதை எதிர்கிறோம் என்பதன் மூலம் ஐக்கிய இலங்கைக்காக பாடுபடுபவர்கள் போலவும் பாவனை காட்டியபடி தனது அரசியல் நலனுக்கான நகர்த்தல்களையே மேற்கொண்டு வருகிறார் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேடம் அணியாத வெண்புறாக்கள்

தளபதி கேணல் கிட்டு அவர்களும், அவரோடு ஒன்பது வீரவேங்கைகளும் வங்கக் கடலில் தீ மூட்டிய புகை வான்பரப்பில் மறைந்துவிட்டாலும்; வங்கக்கடலில் நீரள்ளிய அந்தப்புகை தமிழ் மக்களின் இதயங்களில் எல்லாம் மழையாக அடிக்கத் தொடங்கி ஐந்தாண்டுகளாகிவிட்டன. ஆனால், இன்றும் அந்த இழப்பு மழையால் உருவான வெள்ளமோ வடிந்தபாடில்லை. கேணல் கிட்டுவும், தோழர்களும் பயணம் செய்த கப்பலை சர்வதேசக்கடல் எல்லையில் தடுத்து நிறுத்திய சம்பவம் தவறான தென்ற தீர்ப்பை இந்திய ஆண்புல எல்லைக்குள்ளிருந்தே கேட்டாயிற்று. ஆயினும் கிட்டு அவர்களதும், தோழர்களதும் இழப்பை ஈடுசெய்ய சட்டம், நீதி, நிருபணம் போன்ற ஆட்சியியல் துறைகளுக்கு வல்லமை கிடையாது. ஆகவேதான் ஈடுசெய்ய முடியாத அவர்களின் இழப்பின் தாக்கம் ஐந்தாண்டுகளாகியும் ஓயாத மழையாக அடித்துக் கொண்டிருக்கிறது.

எப்பொழுதும் ஆண்டுகள் செல்லச் செல்ல வரலாற்றுத் தகவல்களும், தாக்கங்களும் மக்கள் மனதில் இருந்து மெல்ல மெல்லப் பின்வாங்கிச் செல்வதே வழமை. ஆனால், கிட்டு அவர்களின் இழப்பு அப்படிப்பட்டதல்ல; அது நாளும் நாளும் புதிய வெளிச்சங்களை வீசியபடி, பருத்துப் பருத்து வரலாற்றில் முன்வந்து கொண்டிருக்கக் காண்கிறோம். உண்மையில் எப்போதுமே வாழ்விற்காகவே வெற்றியைத் தேடுகிறது உலகம். ஆனால், பல சந்தர்ப்பங்களில் அது வெற்றிக்கும் சில வழிகள் உண்டு என்பதை மறந்து விடுகிறது. எப்போதுமே நீதியற்ற வெற்றிகள் படு தோல்வியை விடக் கேவலமானவையாக இருக்கும் என்பதை காலமே நிரூபிக்கிறது. கேணல் கிட்டுவினதும் தோழர்களதும் தியாகத்தைச் சீர்தூக்கினால் அவர்களின் மரணத்திற்குக் காரணமாயிருந்தோரின் வெற்றி; "தோல்வியானது" என்பது அவர்களின் நீதி மன்றத்தினாலேயே நிரூபிக்கப்பட்டு வரலாற்றில் பதிவாகிப்போனது.

எப்போதுமே வாழ்தல் என்பதை வெற்றியானதாகவும்; மரணம் என்பதை தோல்வியானதாகவும் கருதுவது ஆதிக்க சக்திகளின் மனோபாவம். ஆனால் புரட்சிகர வீரர்களின் வாழ்வு அப்படிப்பட்டதல்ல; மரணத்தின் மூலம் வெற்றியைக் காணலாம் என்பதை ஏற்கனவே உலகப் புரட்சியாளர் பலர் தமது மரணங்களால் எடுத்துரைத்துள்ளனர். "உண்மை உன்னை விடுவிக்கும்!'' என்று கூறிய இயேசுவின் மரணம், அவரை மரணிக்கச் செய்தோருக்குத் தோல்வியைத் தந்தது. "உன்னையே நீ அறிவாய்'' என்று கூறிய சோக்கிரட்டிசின் மரணம் அவரைக் கொன்றவர்களைத் தோல்வி



யாளராக்கியது. இன்று சேகுவேரா வரலாற்றில் பெற்றுவரும் முன்வரவு அவரைக் கொன்றோரை தோல்விக்குழிக்குள்ளே வேகமாகத் தள்ளிவருவதாகக் கூறுகிறார்கள். மேலே கூறியவர்களைப் போலவே கேணல் கிட்டுவும் ஒன்பது தோழர்களும் மரணத்தால் வெற்றி அடைந்த போராளிகள் ஆதிக்க மனம் கொண்டோரின் வாழ்வைத் தோல்விக்கு உள்ளாக்கி தியாக வீரர்கள் என்பது மிகைக்கூற்றல்ல.

கேணல் கிட்டுவின் பணிகள் மூன்று பெரும் தளங்களில் வைத்து மதிப்பிடப் படவேண்டியவை. முதலாவது தமிழீழத்தில் அவர் ஆற்றிய போராட்டப் பணிகள். இரண்டாவது இந்தியாவிலிருந்து பணியாற்றி, தமிழக மக்களின் அன்பைப் பெற்ற காலம். மூன்றாவது ஐரோப்பிய அரங்கில் அவரின் காத்திரமான பணிகளென இவற்றை நோக்க முடியும். மேற்கண்ட மூன்று தளங்களையும் எடுத்து நோக்கினால்; அவர் எந்த நாட்டில் இருந்து பணியாற்றினார் என்பது முக்கியமல்ல; அவர் எங்கிருந்தாலும் ஆற்றிய பணிகள், "பளிச்''சென மிளிர்வதும் இயல்பு. அவர் காட்டிய உழைப்பும், எழுச்சியும் எப்போதும் தமிழீழ விடுதலைக்கே வலு கொடுப்பதாகவும் அமைந்தன. இதை தலைவர் அவர்களின் செய்தியொன்றிலிருந்தும் சுட்டிக் காட்டலாம். இலண்டனிலிருந்து களத்தில் என்ற பத்திரிகை வெளிவரத் தொடங்கியவுடன் அதைப் பார்த்த தலைவர், "விசாரித்துப் பாருங்கள் இது கிட்டுவின் வேலையாகத்தானிருக்கும்!'' என்று குறிப்பிட்டிருந்தார். இது கொடுத்த பணியைச் செவ்வனே செய்யும் அவரது பண்பை தலைவர் எப்படி நேசித்தார் என்பதற்கு அரியதோர் எடுத்துக்காட்டாகும்.

அவர் யாழ்.மாவட்டத் தளபதியாக இருந்த போது குறைந்தளவு எண்ணிக்கையுள்ள போராளிகளின் உதவியுடன் இராணுவத்தை அவர்களுடைய முகாம்களிலேயே முடங்கச் செய்தமை தமிழ் மக்கள் அறிந்த செய்தி. கோட்டைக்குள் இருந்து சிங்கள இராணுவம் அவரிடம் விறகுக்காகக் கையேந்தியதும்; அவர்களுக்கு அவர் ஒரு லொறியில் விறகை அனுப்பி வைத்தமையும் வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய விடயங்கள் மட்டுமல்ல; தலைவரவர்களின் ஆளுமை அவரை எப்பேற்பட்ட விடுதலை வீரனாக உருவாக்கியிருக்கிறது என்பதற்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். "காலை இழந்த பின்னும் களத்தில் வீரனாய் நடந்து காட்டியவன்!" என்ற காசியானந்தனின் வரிகளில் இந்தச் சிறப்பு மிளிரக் காணலாம்.

தமிழகத்தில் தமிழீழ நேசச் சக்திகளிடையே அவர்பணியாற்றிய காலம் அடுத்து முக்கியமானதாகும். தமிழக நேசச் சக்திகளின் உறுதுணை தமிழின விடுதலைக்கு மிக முக்கிய பின்னணித் திரையாகும் என்பதைப் புரிந்து, எத்தனையோ கெடுபிடிகளுக்கு மத்தியிலும் அவர் ஆற்றியபணி விதந்து போற்றுதற்குரியதே. இன்று அவரின் பெயரினால் தையலகங்கள், கடைகள் போன்றவற்றை நேசமுள்ள தமிழக மக்கள் ஏற்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்திவருவதானது தமிழகத்தில் அவர் பெற்றிருந்த அன்பிற்கு அதிசிறந்த அடையாளமாகும். 'தேவி' என்னும் வாரச் சஞ்சிகையில் தமிழீழ விடுதலைப் போராட்ட நிகழ்வுகளை வாராவாரம் தொடராக எழுதி, தமிழக மக்களிடையே போராட்டத்தின் கதையை இலகுபடுத்தி எடுத்துரைத்த சிறப்பு குறிப்பிட்டுக் கூறக் கூடிய பிரச்சாரப் பணியாகும். இத் தகைய சேவையின் சிறப்பை மதித்தே, எத்தனையோ நெருக்கடிகள் சூழ்ந்த போதும் கிட்டு அவர்களைப் பற்றி தமிழகத்திலிருந்தே ஓர் நூல் எழுதினார் பழ. நெடுமாறன் அவர்கள்.

மூன்றாவது கட்டம் ஐரோப்பிய நாடுகளில் அவர் மேற்கொண்ட பணிகளாகும். இதுபற்றி வெளிநாடுகளில் வாழும் தமிழரிடையே நிறையத் தகவல்கள் பரிமாறப்பட்டுள்ளன. ஈழத்தமிழ் இனம் தமிழீழத்துடன் பூரண தொடர்பின்றி, தனித் தனி மரங்களாகப் பிரிந்து கிடப்பது போன்ற காட்சி அவர் மனதை உறுத்தியது. அந்த நிலையை மாற்ற அவர் வெளிநாடுகளில் மிகக் கடுமையாக உழைத்தார். தமிழினம் உலகளாவிய ரீதியில் தனித்தனி மரங்களாக நிற்கும் கோட்பாட்டிலிருந்து மாறி, ஆலமரத்தைத் தாங்கும் விழுதுகள் போல தமிழீழத்திற்கு உதவிகள் புரிய வேண்டுமென எண்ணினார். அப்பணியில் கணிசமான அளவு வெற்றியும் பெற்றார். இந்தியா போலவே ஐரோப்பிய அரங்கிலும் அவர் பல்வேறு அழுத்தங்களைச் சந்தித்தார். ஆனால் ஐரோப்பாவிலிருந்து அவர் சமாதானப் புறாவாகவே புறப்பட்டார். 'குவாக்கர்' அமைப்பின் சமாதான யோசனைகளுடன் புறப்பட்டபோதே அவர் உடலில் நெருப்பேந்த வேண்டி நேர்ந்தது. சமாதானத்திற்காக தங்களைத் தாங்களே அழித்துக்கொண்ட கேணல் கிட்டுவினதும் தோழர்களினதும் தியாகம் ஒரு பக்கமும்; சமாதானத்திற்காக அப்பாவி மக்களைப் பட்டினி போட்டு அழிக்கும் சிங்கள அரசு மறுபக்கமாகவும் வரலாற்றுத் தராசில் நிறுக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அறிந்தால்; கிட்டுவும் தோழர்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தார்மீகப் பங்கை தம் உயர்ந்த ஈகத்தால் எவ்விதம் நிறைவேற்றியுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இன்று பொய்யான வெண்புறா வேடமிட்டோரெல்லாம்; கேணல் கிட்டுவும் தோழர்களும் வேடமணியாத வெண்புறாக்கள் என்பதை அறிந்து கொள்ளும் நாள் அதிக தொலைவில் இல்லை. ★

# மூட்டிய தீயில் முடிவானாய்!



இந்துக் கடல்மடி இருள் அகலும் வேளை
எங்களின் காவலர் ஏறிய கடற்கலம்
பொங்கிடும் கடலுடன் பொருதி நீர் கிழிக்க
தாயகம் காண ஆவல் தாங்கியே வந்தது
இந்திய இராக்கதர் இடைபுகுந்து எதிர்க்க
எங்களின் நெஞ்சிலே இடிவீழ்ந்து போனது
தன்மானம் காத்திட தலைவன்வழி நிழல்கள்
தண்ணீரில் தம்மையே தகனம் முடித்தனர்.

கிட்டுவும் தோழரும் கிட்டுவார் என்றிருக்க
கப்பல் எரிந்ததாய் காற்று வந்தழுதது
ஊமைக்காற்றே கடல்தழுவும் உப்புக்காற்றே
கடைசிக் கணங்களில் கண்டதை கூறாயோ
கரையோடு தலைமோதி கதறியழும் கடலலையே
கருகிவிழும் போதுமவர் கண்ணொளியைக் கண்டனையோ
வங்கக் கடல்தாண்டி வருகின்ற கொக்கினமே
வஞ்சகர் வலைவிரித்த வரலாறு சொல்லாயோ

கரையினில் தோழரின் கால்சோர்ந்து போனது
வெள்ளலை நோக்கியே விழிசிவந்து போனது
தாயகக் காதலால் தவிக்கின்ற உள்ளங்கள்
வரவேண்டும் நீயென்று வரம்வேண்டி நின்றது
வயிற்றினில் சுமந்தவள் வாய்மொழி இழந்தாள்
வாழ்க்கைக்கு வந்தவள் வாடிமெய் சோர்ந்தாள்
நேசத் தலைவனின் நெஞ்சம் துடிதுடிக்க
மூட்டிய தீயில் முடிவானாய் தேவனே!

- சோதியா [நோர்வே]



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

## புலம்பெயர் தமிழரின் அரசியல் விழிப்புணர்வை தட்டி எழுப்பிய

# சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழா






**தேச இனமாக எழுந்து தேசமெங்கும் தேசநிலையுணர்த்தினர்**

சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழா உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழீழ மக்களிடை அரசியல் விழிப்புணர்வை தட்டி எழுப்பியது. இதனால் இதுவரை நீறுபூத்த நெருப்பாகப் புலம்பெயர் மக்களிடை கனன்று கொண்டிருந்த தேசநேசம், விடுதலை ஆர்வம் மாசி முதல் வாரத்தில் உலகெங்கும் வாழ் தமிழீழ மக்களை செயற்பாட்டர்களாக மாற்றியது.

புலம்பெயர் தமிழர்களின் வானொலிகளான ரேடியோ ஆசியா (கனடா), தமிழ்ஒலி (பிரான்ஸ்), சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஐ.பி.சி. (தமிழ்) போன்ற சமூகத் தொடர்பு சாதனங்களில் புலம்பெயர் தமிழீழ மக்கள் சுதந்திரம் தமிழீழ மக்களால் எவ்வாறு கருதப்படுகிறது என்ற உண்மைகளை உலகுக்கு எடுத்துக் கூறி கனல்கக்கும் அனல் மிகு கருத்துக்களை வெளியிட்டனர்.

மூன்று முக்கிய உண்மைகள் தமிழீழ மக்களால் தெளிவுறுத்தப்பட்டன.

*1948*–ல் பிரித்தானிய காலனித்துவம் விலகி, சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்ற ஒற்றையாட்சி பிரித்தானியரால் திணிக்கப்பட்டபொழுது, நிபந்தனையுடனான ஒரு ஆட்சியாகவே அது உருவாக்கப்பட்டதே தவிர, ஒரு பொழுதும் சிங்களவரிடம் தமிழர்களை ஆளும் உரிமை வழங்கப்படவில்லை. சோல்பரி அரசியலமைப்பின் *29(2)* உபபிரிவு தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றையாட்சியில் பங்குபற்றுவதற்கான நிபந்தனையாக முன்வைக்கப்பட்டது.

இதனால் இலங்கை அரசாங்கத்தின் இறைமை சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்றத்திடம் மட்டுமல்ல பிரித்தானியா பாராளுமன்றத்திடமும் தொடர்ந்து இருந்தது. இதனை இரட்டை இறைமை எனக்கூறி *1948* முதல் *1956* வரை ரஷ்யா, ஐ. நா. சபையில் இலங்கை ஒரு தனிநாடாக அங்கத்துவம் பெறுவதை “வீட்டோ” அதிகாரம் கொண்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடுத்தது. 1958–ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராக பிரித்தானிய பிரிவு கவுன்சிலில் தமிழர்களால் தொடுக்கப்பட்ட வழக்கில் பிரித்தானிய நீதிமன்றம் சட்டபூர்வமாக இலங்கை பாராளுமன்றத்தின் சட்டவாக்க இறைமையில் தலையிட்டு அதனை மறுபரிசீலனை செய்யும்படி 1969–ல் பணித்தது. இதனை ஏற்கமறுத்த அப்போதைய சிறீமாவோ பண்டாரநாயக்காவின் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்தி சட்டவிரோத “சிறீலங்கா பௌத்த சிங்கள குடியரசை” திணித்து தமிழர்களை அரசற்ற தேச இனத்தவராக மாற்றியதினால் தமிழர்கள் சர்வதேச சட்டங்களுக்கு அமைய சுயநிர்ணய பிரகடனத்தையும் பின்னர் அதன் அடிப்படையில் தமிழீழத் தேசத்தை மீள அமைப்பதற்கான பிரகடனத்தையும் வெளிப்படுத்தி இரண்டிற்குமே குடியொப்ப அங்கீகாரம் பெற்றனர். இந்த தமிழீழத்தை மீள அமைக்கும் செயற்பாட்டை பேச்சுவார்த்தையூடாக எய்த முடியாவிட்டால் போராடிப் பெறுவோம் எனவும் உறுதியுடன் வெளிப்படுத்தி குடியொப்ப அங்கீகாரம் செய்தனர். இந்த தமிழீழத் தேசத்தை மீள அமைப்பதை பகிரங்க இன அழிப்புகள் மூலமும் நிராயுதபாணியான தமிழ் மக்கள் மீதான ஆயுதபடை பலபிரயோகங்கள் மூலமும் சிறீலங்கா அழிக்க முற்பட்டதனால் தமிழர்களுடைய “தேசிய பாதுகாப்புக்கான மக்கள் இராணுவமாக தமிழீழ விடுதலைப் புலிகளாக தமிழ் மக்கள் தம்மை மாற்றியமைத்து இன்றுவரை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழீழ மக்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் ஆக்கிரமிப்புகள் மூலம் சிறீலங்கா பெறுவதற்கு எத்தனையோ வழிகளில் மக்கள் மீதான யுத்தங்களையும் முற்றுகைகளையும் நடாத்தினாலும் தமிழீழ மக்களின் சமூக பொருளாதார அரசியல் பணிவு என்றுமே தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே உண்டு. தமிழீழ மக்கள் எங்கு வாழ்ந்தாலும் என்றுமே தங்கள் தேசியத் தலைவனான பிரபாகரனையே தமது தேசத் தலைவராக நேசித்து பூஜித்து வருகின்றனர்.

தமிழீழ மக்களுடைய நாளாந்த வாழ்வையும், தேச உட்கட்டுமானத்தையும்,



நேச உணர்வோடு
சுய சுயநிர்ணய உரிமைக் குரலெழுப்பினர்



பாச உறவுடன்
மக்கள் படும்துன்பம் பாருக்குணர்த்தினர்




தேசமெங்கு வாழினும்
தலைவர் பிரபாகரனுக்கே
அரசியல் பணிவு என்றனர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


நீச சிறீலங்காவின
மோசமான கொடுமைகள் இயம்பினர்


வெல்லும் சுதந்திரப் போர் விரைவுற
என்றும் உழைக்க உறுதிபூண்டனர்




உயிரையும், உடலையும் அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் அழித்தும் அச்சுறுத்தியும் வரும் சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளின் விலகல் ஒன்றினால் மட்டுமே தமிழீழ மக்கள் பாதுகாப்பும் அமைதியுமான வாழ்வைப் பெறுவர்.

இந்த மூன்று உண்மைகளையும் தொடர்பு சாதனங்களூடாக எடுத்துணர்த்திய மக்கள் தமது தேச நிலையை மட்டுமல்லாது பாச உணர்வுடன் தமிழீழ மக்கள் சிறீலங்காவால் அனுபவிக்கும் மனிதக் கொடுமைகளை இன வதைப்புக்களை வானலைகளில் பரப்பத்தவறவில்லை. உயிரிழப்புக்கள் இனக்கொலைகள், உடமையழிப்புக்கள், பாலியல் வன்முறைகள், திட்டமிட்ட யுத்தங்கள் இவை எல்லாவற்றாலும் சிறீலங்கா தமிழர்களை மனிதர்களாகவே கூட பொருட்படுத்தாது வதைக்கும் ஒரு பயங்கரவாக அரசாக திகழ்வதை பாருக்குப் பறைசாற்றினர். இந்தப் பயங்கரவாத சிறீலங்கா அரசாங்கம் தனது அரச பயங்கரவாதங்களை எல்லாம் மூடி மறைத்து தமிழர்களைப் பயங்கரவாதிகள் என பரப்புரை செய்வதையும் உலகெங்கும் வாழும் தமிழர்கள் தமது சொந்தங்களுக்கு, பந்தங்களுக்கு, பாசங்களுக்கு, நேசங்களுக்கு அவர்களின் ஜீவ மரணப் போராட்டத்தில் மனித உதவிகளை அளிப்பதை தடுக்க முற்படுவதையும் புலம் பெயர் தமிழர்கள் கடுமையாகச் சாடியுள்ளனர். உண்மைக்கும், நீதிக்கும், மானிடத் தன்மைக்கும், சர்வதேச நம்பிக்கைக்கும் ஊறுவிளைவிக்க முயலும் சிறீலங்காவின் பரப்புரைகளின் உண்மைக்கு மாறான தன்மைகளை உணர்ந்து தமிழர்க்கு உடன் உதவியும் அங்கீகாரமும் அளிக்கும் படியும் சிறீலங்காவுக்கு ஆயுத நிதி உதவிகள் ஆயுத பயிற்சிகள் இரகசிய உதவிகளை நிறுத்தும் படியும் ஏகோபித்த குரல் எழுப்பிய புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்தி சிறீலங்காவின் பகிரங்கமான இன அழிப்புக்கு மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி சர்வதேச உலகை வற்புறுத்தினர்.

இவ்வாறு தை மாத நடுப்பகுதியில் இருந்தே தமிழீழ மக்கள் வெளிப்படுத்தி வந்த உணர்வுகளின் வெளிப்பாடாக, பேரணிகள், ஜனநாயகப் போராட்டங்கள் மாசி 1–ம் திகதியும், 4–ம் திகதியும் இடம்பெற்று சர்வதேச உலகின் மனச்சாட்சியை உலுப்பின. பெருந்திரள் பேரணிகள், மனமுருகு சுலோக அட்டைகள்,



www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மைக்குரலாக, உறுதிக் குரலாக சுலோகங்கள், உலக நாடுகளின் தலைநகர்களில் வாழும் மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் தொலைக்காட்சி ஒளிபரப்புகளுக்கும், தமிழீழ தேசத்தின் யதார்த்த நிலையை, சுதந்திரத்தின் தேவையை, விடுதலைப் போராட்டத்தின் வலிமையை, தேசத் தலைவர் பிரபாகரனின் தலைமையில் நடக்கும் விடுதலைத் தியாகங்கள், அர்ப்பணிப்புகள் உடனான போராட்டத்தின் அளப்பரிய வெற்றிகளை, புனர்வாழ்வு, புனரமைப்பு முயற்சிகளை விடுதலை விரைவதன் சான்றுகளை, தமிழீழ தேசம் மீளவும் மீட்கப்பட்டு உலக அங்கீகாரத்தை தேடி நிற்பதன் தேவையை எடுத்துக் கூறின. மீட்கப்பட்ட நிலையில் உள்ள தமிழீழத் தேசத்தினை உலகு அங்கீகரிக்கத் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் சிறீலங்கா எனும் அந்நிய அரசு சட்டவிரோத அரசு தனது ஆக்கிரமிப்புக்களால், இன அழிப்புகளால் அதனை உருக்குலைக்கும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்து விளக்கினர்.

பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுதியான உரைகள், ஜேர்மனிய, பிரான்சிய, இத்தாலிய, நோர்வேஜிய, சுவிஸ் பிரிதிநிதிகளின் தெளிவான விளக்கங்களை சிறீலங்காவின் மோசமான மனித உரிமை மீறல்களையும், சட்ட விரோதப் போக்குகளையும், இயலாமையையும் எடுத்து இயம்பின.

ஒரு அரசாங்கம் தனது மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்க இயலாத நிலை தொடருமானால் அந்நிலையில் ஐ. நா. தலையிடுவதற்கான உரிமை உண்டு. சிறீலங்கா தமிழர்களுக்கு கடந்த 50 ஆண்டுகளாக அமைதியையும் பாதுகாப்பையும் வழங்க இயலாத அரசாக உள்ளது. அதிலும் 1972 முதல் அப்பட்டமான அந்நிய அரசாக உள்ளது. ஆகவே இந்நிலையில் தமிழீழ மக்களின் அரசியல் தலைமையும் விடுதலை இயக்கமுமான தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரித்து, சிறீலங்கா படைகள் தமிழர் தாயகத்திலிருந்து விலக உதவ வேண்டுமென உலகை புலம்பெயர்ந்த தமிழர்கள் தெளிவாகவும் பெருந்திரளாகவும் வற்புறுத்திய வரலாற்று நிகழ்ச்சிகளாகவும் சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழாவுடன் தமிழர்களுக்கு தொடர்பு இல்லவேயில்லை என்பதை எடுத்துக்காட்டிய நிகழ்ச்சிகளாகவும் மாசி முதல்வார பேரணிகள், நிகழ்ச்சிகள் அமைந்தன.

இழப்புகளும் அழிவுகளும் ஒருவிடுதலைப் போராட்டத்தில் சர்வசாதாரண நிகழ்வுகள் நாம் எத்தனையோ இழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்துள்ளோம்; சந்தித்தும் வருகின்றோம். ஆனால், இந்த இழப்புகளும் அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்து விட்டால் உலகத்தில் எந்த ஒரு சக்தியாலும் எம்மை அடக்கிவிட முடியாது.

— தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

# தேசியக் கடமை

இவர் என் நண்பர். நாங்கள் தனிமைப்பட்டு இருந்த போது எங்களுக்கு உதவியவர். இப்போது நாங்கள் இங்கு வரக்கூடாது எனச் சொல்பவர்கள் அப்போது எங்கள் விரோதியாக இருந்தார்.

இந்தக் காட்டமான கருத்தினைத் தெரிவிப்பவர் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்கள்.

தென்னாபிரிக்க ஜனாதிபதி அவர்கள் லிபியா நாட்டுக்கு அண்மையில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மண்டேலா மண்டேலா என்று மக்கள் கோஷம் எழுப்ப திரிப்போலியை வந்தடைந்த நெல்சன் மண்டேலாவை லிபியத் தலைவர் கேணல் கடாபி வரவேற்றுக் கொண்டிருக்கும் போது ஏகாதிபத்தியவாதிகளும் விடுதலை இயக்கங்களை பயங்கரவாதிகள் எனச் சித்தரிப்போரும் வயிறு எரிய அதனைப் பார்த்துப் புகைந்தனர்.

தனது லிபிய விஜயத்தினைச் சாடிய ஆக்கிரமிப்பாளர்களை குறிப்பாக அமெரிக்காவை தாக்கிப் பேசிய மண்டேலா தென்னாபிரிக்காவில் நடந்த நிறவெறி கொள்கைக்கெதிரான போராட்டத்தை ஆதரித்த கேணல் கடாபிக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இது காரணமாகவும் மனித உரிமைகளை மீறும் நைஜீரிய அரசுக்கொதிரான கடும் போக்கினைஅவர் கடைப்பிடிப்பதன் காரணத்தாலும் அண்மையில் நடந்த பொது நலவாய நாடுகளின் மகாநாட்டிலும் தனித் தன்மை பெற்றவராக விளங்கினார்.

உண்மையான நண்பனாக இருந்தால் என்ன யாராக இருந்தால் என்ன சோதனைகள் நெருக்கடிகள் மிகுந்த கால கட்டத்தில் உதவுகின்றவனை யாரும் மறந்து போகமாட்டார்கள் மறக்கவும் முடியாது.

இல்லாவிட்டால் அமெரிக்கா போன்ற நாடுகளின் மிரட்டல்களையும் மீறி மண்டேலா லிபியாவுக்கு விஜயம் செய்திருக்கமாட்டார்.

தமிழீழ மக்களும் இதில் இருந்து ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான விடுதலைப் போரில் எத்தனையோ கட்சிகளும் இயக்கங்களும்ஈடுபடுவதாகப் பாவனைபண்ணிக்கொண்டு இன்று தமிழையும், தமிழர்களையும் அவர்களது விடுதலைப் போராட்டத்தையும் தமது சுகபோகங்களுக்காக கைநிறையக் காசிற்கு விற்றுவிட்டு சிங்கள ஆட்சியாளர்களின் காலடிகளில் வசதியாக அமர்ந்துவிட்டனர்.

ஆனால், அன்றும் சரி, இன்றும் சரி தமிழர்களின் விடுதலையே உயிர் மூச்சாகக் கொண்டு அதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினை வலுவேற்ற வேண்டியவர்கள் தமிழ் மக்கள் ஆவர்.

சூழவும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் இராணுவ, பொருண்மிய அழுத்தங்களை மேற்கொண்டு எமது இருப்பினையே கேள்விக்குறியாக்கிக்கொண்டு இருக்கும் சமகாலச் சூழல் மிகவும் இறுக்கமாக உள்ளது.

இந்த நெருக்கடியான காலகட்டத்திலே நாம் மிகவும் துணிவுடனும், உறுதியுடனும் எமது விடுதலைக்கான தலைமைக்குத் தோன்றாத் துணையாக இருக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

தனியே உயிர் வாழ்தல் மாத்திரம் என்பது எமது மக்களின் நோக்கம் அல்ல. மானத்துடன் தமிழர்களாக வாழ்தல் என்பதே அவர்களது கோட்பாடாகும்.

இத்தகைய கொள்கையுடைய ஒவ்வொருவரும் எமது விடுதலையை முன்னெடுக்க தேசியத் தலைவருக்கும் அமைப்புக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்க உறுதி பூணுவோமாக.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாய் வெட்டி வா என்றதை மகள் கட்டி வரும் சாமர்த்தியம்

## உயர் கல்வியில் தமிழ் மாணவர்களை இனஒதுக்கல் செய்வது என்றுமில்லாதவாறு சந்திரிகா அரசில் அதிகரிப்பு இது ஒருஅப்பட்டமான மனிதஉரிமை வன்முறை இனியேனும் ஐ.நா.வும் சர்வதேச நாடுகளும் உதவுமா?

'கல்வியில் சிறந்தது தமிழீழம்' உதிரத்தை உழைப்பாக்கி உழைப்பை கல்விமேம்பாடாக காண்பவர்கள் தமிழீழ மக்கள். இதற்கு காரணம் அழியாச் சொத்து கல்வி என்பது மட்டுமல்ல வரண்ட பூமியில் தொழில் பெறுவதற்கும் உயர்கல்வி தேவை என்பது உணரப்பட்டமையே. ஆதலால், உயர்கல்வி தமிழீழ மக்களைப் பொறுத்த வரை அடிப்படை மனித உரிமை. இது பலருக்கும் புரியாத காரணத்தினால் தான் பல்கலைக்கழகங்களில் தமிழர்கள் மேலாண்மை செய்தார்கள் என்று அர்த்தமற்றுப் பேசுவது உண்டு. தமிழர்கள் எப்பொழுதுமே சிங்களவர் கல்வியில் மேலாண்மை செய்ததில்லை. மாறாக சிங்கள தேசத்து அமைச்சர்கள் பலர், அறிஞர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் கல்விபெற்று உயர்ந்தவர்கள் என்பது வரலாறு. ஆனால், சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் தமிழ் மண்ணில் தமிழர்களுக்கு என உயர்கல்விச்சாலைகளை அனுமதிக்க மறுத்ததினால் ஆற்றலுள்ள தமிழர்கள் சிங்களதேசத்தில் இயங்கிய பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி பெற்றனர். இந்த உண்மை அதாவது, தமிழர்க்கு உயர்கல்வி நிறுவனங்கள் நிறுவப்படவில்லை என்ற இன ஒதுக்கல் ஒளிக்கப்பட்டு ஏதோ சிங்களவர் கல்வி எழுச்சியை தமிழர் சூறையாடியது போன்றதொரு பொய்த்தோற்றம் சிங்கள நெஞ்சங்களில் மெய்த்தோற்றமாக்கப்பட்டது. இதுவும் சிங்களப் பேரினவாதத்தின் ஒரு செயல்.





மனச்சாட்சி உள்ள சிங்களவரையும் மழுங்கடிக்கும் தந்திரோபாயம் சிந்திக்காது தமிழர்கள் மேல் சீறிப்பாய வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சீட்டுத் துரும்பு. இந்தச் சிங்களப் பேரினவாத சீட்டாட்டத்தில் வெட்டப்பட்டது தமிழர் தலைகள் மட்டுமல்ல தமிழர் கல்வியும்தான். அதற்கு மூலகாரணம் தமிழர் உயர்கல்வி தமிழர் பொருளாதாரத்தினை இயக்கும் அச்சு என்பதுவே ஆகும். இதனால் உயர்கல்விக்கான இன ஒதுக்கலை வெறுமனே படிப்புக்கான தடை என்று மட்டும் பார்க்காது தமிழர் பொருளாதாரத்தின் மீதான திட்டமிட்ட நாசகார செயல் எனவும் எடுத்து நோக்கினாலே அது தோன்றியவிதம் வளர்ந்த விதம் இன்றுவரை தொடரும் தன்மை என்பதன் வரலாற்றுத் தொடர்ச்சியை விளங்கிக்கொள்ளலாம். கல்வி, பொருளாதாரம், அரசியல் எனும் மூன்றுமே வேறுவேறான தலைப்புகளைக் கொண்டிருந்தாலும் சமூக உருவாக்கத்தில் அவை மூன்றுமே ஒன்றுதான் எனும் மார்க்கசிய சிந்தனை கல்வியூடாக ஒரு இனத்தின் சுதந்திரம் பறிக்கப்படலாம் என்பதனை எடுத்துக் காட்டி எச்சரிக்கின்றது. எனவே ஒரு மக்களது அல்லது தேசத்தினது பொருளாதாரத் திட்டமிடலுக்கு எவ்வளவு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றதோ அதே அளவுக்கு அம்மக்களது அல்லது தேசத்தினது கல்வி அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலே அந்த மக்களின் அல்லது நாட்டின் பொருளாதாரம் நலம் பெறும்; பலம் பெறும்.

### அரசியல் ஆதாயங்களுக்கு கல்வி அபிவிருத்தியை விட முக்கியத்துவம்

காலனித்துவ விலகலின் பின் இலங்கைத்தீவின் வரலாற்றை எடுத்து நோக்கின் கொழும்பு சென். ஜோசப் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட் திரு. டபிள்யூ. எல். ஏ. டொன் பீட்டர் அவர்கள் கூறியது போல "அரசியல் ஆதாயங்களுக்கு கல்வி அபிவிருத்தியை விட அதி முக்கியத்துவம் வழங்கப்பட்டது." இலண்டன் கல்வியியல் அறிஞரான டாக்டர். எட்மண்ட் ஜே. கிங். கூறுவது போல "எத்தகைய கல்விமுறை எந்த அளவுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது அரசியல் தெரிவினாலேயே


**பற்றிமாகரன்** B.A., Bsc. (Oxford)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பொறியியல் துறை**




நிர்ணயிக்கப்படுகிறது. அதனால் கல்வி முறையும் அரசியல் செயற்பாடாகி அரசியல் நோக்குகளுடன் சட்டங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது". இந்தவகையில் இலங்கைத்தீவில் சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் காலனித்துவப் பிரித்தானிய அரசினால் சட்டபூர்வ அரசாங்கம் என மகுடம் சூட்டப்பட்ட காலம் முதல் இலங்கைத் தீவின் கல்விமுறை சிங்களப் பெரும்பான்மையினரின் அபிவிருத்திக்கான ஒரு ஊடகமாகவே வளர்க்கப்பட்டது. "பெரும்பான்மையினர் தாம் நினைத்தபடி நடப்பார்கள்; சிறுபான்மையினர் அவர்கள் சொல்கிறபடி எல்லாம் ஆட வேண்டும்" என்கிற வேதத்தை "பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் என்பதினால் ஏற்படுத்தப்படும் கொடுங்கோன்மை ஆட்சி" சிருஷ்டித்தது. இதனால் தமிழர்களுடைய மனித உரிமைகள், கல்வி உரிமை உட்பட சிங்கள பெரும்பான்மை இனத்தினால் கபளீகரம் செய்யப்படுவதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. "வலு" என்பது குறித்து ஆய்வுகள் நடாத்திய லூக்ஸ் கூறுவது போல வலு (Power) என்பது ஒரு சமுதாயத்தின் மேல் தரையப்படும் பொழுது அந்தச் சமுதாயம் தங்கள் தலைகளில் அது தரையப்படுகிறது என்ற உணர்வு இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன அது அவர்களின்மேல் தரையப்பட்டுவிடும்" இதனை அந்தச் சமுதாயம் மாற்றுவதானால் அந்த வலுவை எதிர்க்கின்ற வலுவை அது வெளிப்படுத்த வேண்டும். 1948 முதல் 1970கள் வரை தமிழ் சமுதாயத் தலைமை தங்கள் மேல் தரையப்பட்ட வலுக்களை ஏற்று நெளிந்து வளைந்து அதற்கு ஏற்ப தன்னை சுதாகரித்துக்கொள்ளும் "புழுக்களாக" காணப்பட்டது. இதனால் தமிழர்களை அவர்களது தாயகத்திலேயே அரசியல் அனாதையாக்கலாம் என்ற எண்ணம் மட்டுமல்ல பொருளாதார அகதிகளாக, கல்விவளம் அற்ற சமுதாயமாக மாற்றலாம் என்ற துணிவும் சிங்கள அரசாங்கங்களுக்கு வளர்ந்து வந்தது. இதனால் "பெற்றோர்களே தங்கள் குழந்தைகளுக்கு எத்தகைய கல்வி வழங்கப்படல் வேண்டும் என்பதனை தெரிவு செய்யும் முன்னுரிமை உள்ளவர்கள்" என்ற மனித உரிமை சாசன (26:3) சட்டத்திற்கு எதிராக தமிழ் பிள்ளைகளின் கல்வி சிங்கள அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டது. குறிப்பாக தமிழர் தாயகமாம் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் எல்லாம் தங்கள் பிள்ளைகளைச் சிங்கள மொழி ஊடகத்தில் படிப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை பூராவும் சிங்கள அரசால் தோற்றுவிக்கப்பட்டன. ஆயினும் இந்த வலுக்கட்டாயத் திணிப்பினை உலகு இனங்காணாதபடி சிறீ லங்காவின் தலைநகராகிய கொழும்பில் தமிழிலும் ஆங்கிலத்திலும் படிப்பிக்கக் கூடிய வசதிகள் சில பள்ளிக்கூடங்களில் செய்யப்பட்டது. இதனை ஏற்று தமிழ்த்தலைமை திருப்தி கண்டதினால் மலைநாட்டுத் தமிழ் பிள்ளைகள் சிங்களம் பேசும் சமுதாயமாக உருவாக்கப்பட்டதும் அல்லாமல் வடக்கு கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழ் மக்களின் குழந்தைகளும் தமிழ் பேச முடியாத தமிழர்களாக வளர்ந்து வந்ததை வரலாறு தெளிவாக இனங்காட்டுகிறது. காலனித்துவம் விலகிய நேரத்தில் 82,000 பேர் அரசாங்க சேவைகளில் இருந்தனர். இவர்களில் 30% தமிழர்கள். ஆனால் 1970—ல் 225,000 பேர் அரசாங்க சேவையில் இருந்தனர். இவர்களில் 6% மட்டுமே தமிழர்கள். அது மட்டுமல்ல 1956க்கும் 1970க்கும் இடையே 189,900 பேர் பொதுத்துறைகளுக்கும் கூட்டுத்தாபனங்களுக்கும் தெரிவாகினர். இவர்களில் 99% சிங்களவர்கள். இந்த அளவுக்கு தமிழ் தலைமைகள் தமிழர்களை தாழ்வுற வைத்த நிலையிலேயே 1970—ம் ஆண்டில் சிறீமாவோ பண்டாரநாயக்காவின் பிரசித்தி பெற்ற தமிழ் இன விரோத ஆட்சி ஆரம்பமாகியது.

## இருண்ட 1970கள்

சந்திரகாவின் தாயாரான சிறீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சி ஆரம்பமான 1970 முதல் 1974க்கிடை 22,374 ஆசிரியர்களை நியமித்தது. இதில் 18,300 பேர் சிங்களவர், 2507 பேர் முஸ்லீம்கள், 1807 பேரே தமிழர்கள். ஆனால் இதே காலகட்டத்தில் 3500 தமிழ் ஆசிரியர்கள் ஓய்வுபெற்றனர். இதனை ஈடுசெய்யும் அளவுக்குக்கூட தமிழர்கள் நியமிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல இக்காலகட்டத்தில் தமிழர்தாயகத்திற்கு வெளியே மட்டுமல்ல தமிழர் தாயகத்திற்குள்ளேயும் சிங்கள மொழி மூலம் கல்வியை மாற்றுவதற்கான முயற்சியாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும் முயற்சிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் தமிழர்களிடையே நிலவிய சாதியப்பிரச்சனைகளைச் சாட்டாக வைத்து பௌத்தத்தையும் பௌத்த கல்வியையும் தமிழ் பிரதேசங்களில் கற்பிப்பதற்கான அரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவைகள் வடக்கு – கிழக்கு தாயகம் வாழ் தமிழர்களின் கடும் எதிர்ப்பைச் சந்தித்ததும் அல்லாமல் தமிழ்மொழி, தமிழ் கலாச்சாரம் என்பவற்றைப் பேண வேண்டிய நெருக்கத்தையும் ஏற்படுத்தியது. இந்த தமிழ் மொழியைப் பேணுதல் எனும் உணர்வே தமிழ் தேசியமாக வெளிப்பட்டு சிங்கள தேசியத்தில் இருந்து தனது தனித்துவத்தை இனங்காட்டியது. இதனால் இலங்கைத்தீவில் தமிழ், சிங்கள தேசஇனங்கள் தங்கள் மொழி, கலாச்சார தாயகம் என்பவற்றை தனித்தனியாகப் பேண வேண்டிய அரசியல் தேவை ஏற்பட்டமைக்கு இலங்கைத் தீவின் சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்கள் கடைப்பிடித்த கல்வி இன ஒதுக்கல் கொள்கையே மூலகாரணியாயிற்று.

## தாயார் சிறீமாவின் தரப்படுத்தல் தனிமைப்படுத்தல்

சிங்களப் பெரும்பான்மை அரசாங்கங்கள் கல்வியூட்டும் மொழியாக சிங்களத்தை ஆக்க எடுத்த




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயற்சிகள் தமிழ்த்தேசியத்தினால் 1950–கள் முதல் 1970–கள் வரை தடுக்கப்பட்டது. இதனால் 1970களில் உயர்கல்வி மறுப்புமூலம் தமிழர்களின் கல்விமேம்பாட்டை தடுப்பதற்கான முயற்சிகள் சந்திரிகாவின் தாயார் சிறீமாவால் திட்டமிட்ட முறையில் அமுலாக்கப்படத் தொடங்கியது. தரப்படுத்தல் என்ற பொதுப்பெயருடன் புகுத்தப்பட்ட இந்த இன ஒதுக்கல் கொள்கை தமிழர்களை பொருளாதார வளர்ச்சியிலிருந்து தனிமைப்படுத்தல் என்பதை இலக்காகக் கொண்ட பாராளுமன்ற கொடுங்கோன்மையாகும்.

முதலில் 1970–களில் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞான, மருத்துவ, பொறியியல் துறைகளில் இருமொழிக் கொள்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி பல்கலைக்கழக போதனாமொழியாக சிங்களமும் தமிழும் அறிமுகம் செய்யப்பட்டன. இந்நரத்தில் பல்கலைக் கழகத்திற்கு திறமை அடிப்படையில் தெரிவான 160 பேரில் 100 பேர் தமிழர்கள் என்ற உண்மைக்கு மாறான வதந்தி சிங்கள பௌத்த பேரினவாதிகளால் பரப்புரை செய்யப்பட்டு திறமை அடிப்படையிலான பல்கலைக் கழக அனுமதிமுறை மாறப்பட்டு சிங்கள மாணவர்கள் அதிகம் இடம்பெறக் கூடிய முறைகள் புகுத்தப்படல் வேண்டுமென்ற கோரிக்கை பௌத்த சிங்கள பேரினவாதிகளால் எழுப்பப்பட்டது. இதையடுத்து வந்த நான்கு வருடங்களிலும் நாலு வேறுவேறான பல்கலைக்கழக அனுமதி முறைகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அரசாங்கத்தினால் திணிக்கப்பட்டன.




1973–ல் தரப்படுத்தல்.

1974–ல் தரப்படுத்தலும் மாவட்ட ஒதுக்கீடும்.

1975–ல் தரப்படுத்தலுடன் கூடிய 100% மாவட்ட ஒதுக்கீடு.

1976–ல் 70% தரப்படுத்தலுடன் 30% மாவட்ட ஒதுக்கீடு.

இவ்விதமாக நான்கு விதமான தரப்படுத்தல் முறைகள் கைவிடப்பட்டதாகவும் இவை எல்லாவற்றினதும் மையநோக்கு தமிழ் மாணவர்களுக்கு உயர்

**மாவட்ட ஒதுக்கீடு என்னும் சொற்றொடர் கூடவே சேர்க்கப்பட்டு பின்தங்கிய மாவட்டங்களுக்கு தாம் உதவுவது போன்று சர்க்கரைப்பூச்சுடன் தரப்படுத்தல் என்ற விசம் தமிழ் மாணவர் சமுதாயத்தின் மேல் திணிக்கப்பட்டது.**

கல்வியை மறுத்தல் என்ற இன ஒதுக்கல் கொள்கையேயாகும். ஆயினும் மாவட்ட ஒதுக்கீடு என்னும் சொற்றொடர் கூடவே சேர்க்கப்பட்டு பின்தங்கிய மாவட்டங்களுக்கு தாம் உதவுவது போன்று சர்க்கரைப்பூச்சுடன் தரப்படுத்தல் என்ற நிலை தமிழ் மாணவர் சமுதாயத்தின் மேல் திணிக்கப்பட்டது. இதனால் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி வீழ்ச்சியடைய சிங்கள மாணவர்கள் அனுமதி அதிகரித்துச் சென்றது.

பொறியியல்துறை மாணவர்கள் அனுமதி 1970–ல் 40.8% ஆக இருந்து 1973–ல் 24.4% ஆகவும், 1976–ல் 13.2% ஆகவும் வீழ்ச்சியுற்றது. விஞ்ஞானத்துறையில் 1970–ல் 35% இருந்து 1978–ல் 15% ஆக வீழ்ச்சியுற்றது. மருத்துவத்துறையில் 1970–ல் 37%மாக இருந்த தமிழ் மாணவர் தொகை 1974–ல் 26%மாகவும் 1975–ல் 20%மாகவும் இன ஒதுக்கல்நிலை அடைந்தது. பல்கலைக் கழகத்தின் சகல தொழில் சார் பட்டப்படிப்புத் துறைகளிலும் பல் மருத்துவம், கால்நடை மருத்துவம், விவசாயம் உட்பட தமிழர்கள் புறக்கணிப்புக்கு உள்ளாகினர். இதேவேளையில் பேராசிரியர் C.R.de சில்வாவின் ஆய்வுப்படி இந்த தரப்படுத்தல்களால் சிங்கள மாணவர்களே முழு அளவிலான நன்மையைப் பெற்றனர். 1974–ல் சிங்கள மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி விஞ்ஞான கற்கைத் துறைகளில் 75.4%மாகவும் 1975–ல் 80%மாகவும் அதிகரிக்க கலைப்பீட சிங்கள மாணவர் அனுமதி 85%ஆல் அதிகரித்தது என தெரியவருகிறது. இது குறித்து விளக்கிய சிங்களவரான பேராசிரியர் C.R.de சில்வா இனப்பாகுபாடுகளினால் தமிழர்களுக்கு அளப்பரிய சேதங்கள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுவிட்டதெனவும்; இதனைப் பல்கலைக்கழக அனுமதி மேலும் கூர்மைப்படுத்தி தமிழ்த் தேசியத்தை தமிழர்கள் வளர்க்க வைத்துள்ளதாகவும் பல்கலைக்கழக அனுமதி முறையே தமிழ் இளைஞர்களை ஒன்று திரட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியினரை தனியான அரசுக்கான பிரகடனத்தை விடுக்கச் செய்ததெனவும் கூறியுள்ளார்.

தனியரசுக்கான கோரிக்கையின் தேவைகளில் ஒன்றான இந்த பல்கலைக் கழக அனுமதியில் தரப்படுத்தல் எனும் இன ஒதுக்கல் கோட்பாடு இன்றுவரை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவது ஒன்றே சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதில் அக்கறையற்ற அரசாகவே என்றும் இருந்து வருகிறது என்பதற்குத் தெளிவான சான்றாக உள்ளது.

இது குறித்து கல்வித்துறைப் பேராசிரியர் சந்திரசேகரன் பின்வருமாறு கூறியுள்ளார்:–

"இன்றைய பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைப்படி திறமைச் சித்திக்கு 40வீதமும், மாவட்ட அடிப்படையில் 55 வீதமும், பின்தங்கிய மாவட்டங்களுக்கு 5 வீதமும் எனும் முறை நடைமுறையில் உள்ளது. வெட்டுப்புள்ளி முறை மூலம் மாவட்டங்களுக்கான தெரிவுப் புள்ளிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இதன் பின்னர் 1991–ல் 1200 தமிழ் மாணவர்கள் அனுமதி பெற்றவிடத்தில் 1993–ல் 700 தமிழ் மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். இதே காலப்பகுதியில் மருத்துவத் துறைக்கான அனுமதி 135 தமிழ் மாணவர்களில் இருந்து 70 ஆக வீழ்ச்சி கண்டது. பொறியியல்துறையில் 140தமிழ் மாணவர்களில் இருந்து 104 ஆக குறைவடைந்தது. கலைத்துறையில் 290 தமிழ் மாணவர்களில் இருந்து 230 ஆகவும், வர்த்தகத்துறையில் 180–ல் இருந்து 80 ஆகவும் படுவீழ்ச்சி கண்டன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் "இந்த வீழ்ச்சிக்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்ட சூழ் நிலைகளால் யாழ்மாவட்டம் பெற்று வந்த பல்கலைக்கழக அனுமதியினை அத னால் நிரப்ப முடியாத சூழ்நிலையே" என்பதையும் பேராசிரியர் சுட்டிக் காட்டி யுள்ளார். இவ்வருடத்தில் 12,500 மாண வர்கள் பல்கலைக்கழக அனுமதியினைப் பெற இருப்பதாகவும் அதில் 2200 தமிழ் மாணவர்களாவது இருக்கக் கூடிய தன் மையை இன்றைய பல்கலைக்கழக அனு மதிமுறை வெளிப்படுத்திய போதிலும் செயல்முறையில் மிகமிகக் குறைவாகவே தமிழ் மாணவர் அனுமதி அமையும் எனப் பேராசிரியர் எடுத்து விளக்கி இதற்காக யாழ்மாவட்டத்தை பின் தங் கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டு மென ஒரு ஆலோசனையும் தெரிவித்து இருந்தார். பேராசிரியரின் ஊகம் சரி யானது என்பதை பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் கடிதம் உறுதி செய்துள் ளது. பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர் களின் கடிதம் பின்வருமாறு:–

கல்வி ஆண்டு 97/98க்குரிய வெட்டுப் புள்ளிகளை 15.01.98 அன்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வெளியிட் டது. இதில் தமிழ்மாணவர்கள் புறக் கணிக்கப்பட்டுள்ளனர்.

உதாரணமாக மருத்துவத்தை எடுத் துக் கொண்டால் அதற்கான வெட்டுப் புள்ளி யாழ்ப்பாணத்திற்கு 275 ஆகும். இது கொழும்புடன் ஒப்பிடும் பொழுது குறைவுபோன்ற மாயையே ஏற்படுத் தும். ஆனால் உண்மை அதுவல்ல.

ஏனெனில் 95/96 கல்வியாண்டில் மருத்துவத்திற்கு 65 மாணவர்கள் தெரி வானார்கள். ஆனால், தற்போதோ 27 மாணவர்கள் மட்டுமே தெரிவாகியுள் ளனர். அதாவது, கடந்த வருடத்திலும் பார்க்க சரி அரைவாசியிலும் குறைவான வர்களே அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான காரணமாக திறைமை அடிப் படையில் மாணவர்கள் தெரிவானது குறைவு என்ற நொண்டிச் சாட்டு கூறப் படுகிறது. இந்தமுறை யாழ் மாணவர் கள் குறைவாகச் செய்தமைக்கான கார ணத்தை யாவரும் அறிவார்கள். இவ் வெட்டுப்புள்ளிக்குரிய 96–ம் வருட பரீட்சார்த்திகள்தான் ரிவிரச2 நடவடிக் கையால் இடம்பெயர்ந்து பெரும் துன் பம் அடைந்தவர்கள்.

8 மாதங்களிற்கு மேலாக உணவோ, வீடோ, அடிப்படை வசதியோ இன்றி கொப்பிகளோ, விளக்கெரிக்க மண் ணெண்ணையோ இன்றி பெருந்துன்பம் அடைந்தவர்கள்; இன்றும் பலர் தொடர்ந்தும் வன்னியில் சிறீலங்காவின் தடைகளினால் கஸ்டப்படுகிறார்கள். மேலும் இம்முறை 96 செப்டம்பர் பரீட்சை எழுதியவர்களே முதன் முத லில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள். ஏனையவர்களைப் போல் இவர்களை நோக்குவது மனிதாபிமானத்துக்கே அவ மானமாகும். அத்தோடு யாழ் மாவட் டத்தில் மருத்துவர்களின் தேவையை அனைவரும் உணர்வார்கள். இங்கு வட பகுதி மருத்துவ பற்றாக்குறையை நீக்க வெளிநாடு மற்றும் தென்னிலங்கை மருத்துவர்களை அழைத்தும் அவர்க

**'கல்வி தமிழின அழிப்புக்கான ஒரு கருவியாக' சிறீலங்காவால் கடந்த 28 ஆண்டுகளாக தெட்டத்தெளிவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.**

ளால் தேவையின் ஒரு சிறு பகுதியைத் தானும் ஈடுசெய்ய முடியவில்லை. மேலும், யாழ்ப்பாணத்தில் இருந்து எந்த வொரு சந்தர்ப்பத்திலும் 45க்குக் குறை வான மருத்துவர்கள் தெரிவானது இல்லை. ஆகவே இம்முறை யாழ் மாவட்ட மருத்துவபீட வெட்டுப்புள்ளி யைக் குறைக்க வேண்டும். என்பது பாதிக்கப்பட்ட மாணவரின் கருத்து.

ஆனால், வெட்டுப் புள்ளியைக் குறைக்கும்படி கோருவதினாலோ அல் லது பின்தங்கிய மாவட்டமாக அறிவிக் கும்படி கோருவதனாலோ தமிழ் மாண வர்களின் உயர்கல்விக்கு நிரந்தரமான தீர்வை ஒருநாளும் பெறமுடியாது. ஏனெ னில், "கல்வி தமிழின அழிப்புக்கான ஒரு கருவியாக" சிறீலங்காவால் கடந்த 28 ஆண்டுகளாக தெட்டத்தெளிவாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, தமிழர்களை சிறீலங்கா தனது குடிமக் களாகக் கருதாது இரண்டாந்தர பிரஜை களாக கருதியதன் எதிரொலியே இந்த பல்கலைக்கழக அனுமதி தொடர்கதை.

இன்று பல்கலைக்கழக அனுமதி மட்டுமல்ல தமிழர்களின் ஆரம்பகல்வி கூட சிறீலங்கா அரசாங்கத்தால் அழிக் கப்பட்டு வருகிறது. நாகர் கோவிலில் பள்ளி மாணவர்கள் மீது குண்டு வீசி கொன்றழித்த இனக்கொலை சம்பவத் திற்கு மனிதாபிமான அடிப்படையில் சம்பவத்திற்கு இதுவரை மனிதாபிமான அடிப்படையில் கூட மன்னிப்பு கோராத கோர ஜனாதிபதியாக சந்திரிகா பண் டாரநாயக்கா உள்ளார். சந்திரிகா பண் டாரநாயக்காவே சிறீலங்காவின் பாது காப்பு அமைச்சராகவும் முப்படைகளின் தளபதியாகவும் பதவியேற்றிருக்கிறார். ஆகவே சிறீலங்காப் படைகளினால் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு அழிப்புக் கும் சந்திரிகாவும் முழுப்பொறுப்பாள ராக உள்ளார். அவரிடம்போய் பல் கலைக்கழக அனுமதிக்கு நீதி கேட்பது ஓநாயிடம் ஆடு நீதி கேட்ட கதையா கவே அமையும்.

மேலும் இன்று பள்ளிக்கூட மாண வர்களுக்கு கல்வியைச் சாதாரணமாகத் தொடரக்கூடிய உளவியல் தன்மை அங்கு காணப்படும் இராணுவச் சர் வாதிகார ஆட்சியினால் அடியோடு இல்லை, இந்த அடிப்படையான உண்மை உலகுக்கு உணர்த்தப்பட்டு சிறீ லங்காப் படை விலகல் ஏற்பட்டால் மட்டுமே தமிழ் மாணவர்கள் சுமுக மான முறையில் கல்வியில் நாட்டம் காட்ட முடியும். தமிழ் மாணவர்களின் பெற்றோர்கள் பிள்ளைகளை பாட சாலைக்கு அனுப்பிவிட்டு அவர்கள் பாலியல் வன்முறைகளுக்கு ஆளாவார் களோ, காணாமல் போய்விடுவார்களோ, தெருவில் சுட்டு வீசப்படுவார்களோ, சிறீ லங்காப் படைகளினால் கைதாக்கி இழுத்துச் செல்லப்படுவார்களோ என ஏங்கித் தவித்து சாகாமல் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலைக்கு காரணமான படைகளின் ஆக்கிரமிப்பு உடனே விலத்தப்பட்டாலே தமிழ் மாண வர்களால் கல்வி வளர்ச்சிபெற முடி யும்.

இதனை சர்வதேச நாடுகளுக்கு எடுத்து விளக்கி பாதிக்கப்பட்ட எமது மாணவ சமுதாயத்திற்கு உடன் நிவார ணம் கிடைக்க உழைக்க வேண்டிய பொறுப்பு உலகெங்கும் புலம்பெயர் தமிழர்களாகிய நமக்கு உண்டு. மேலும், கடந்த 28 ஆண்டுகளாக தமிழ் மாண வர்களை திரும்பிப் பார்க்காத சிறீலங்கா இனியும் திரும்பிப் பார்க்கப் போவ தில்லை. எனவே, தமிழர்களது பிரச்ச னைகளை எடுத்து நோக்கி தீர்க்கக் கூடிய தமிழர்களது அரசு தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்டாலே இந்நிலை மாறும் என்பதையும் உலகிற்குத் தெளிவாக எடுத்து விளக்கி, தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் அதற்கான தமி ழீழத் தேசிய விடுதலைப் போராட்டத் தையும் அங்கீகரிப்பது ஒன்றே தமிழர் களுக்கு அனைத்தையும் சீராக்கும் என் பதை நாம் உலக மக்களிடம் வலியுறுத்த வேண்டும். ★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# மனித உரிமை சீர்குலைவு

பெருந்தொகையான தமிழ் மக்கள் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தப்பட்டு அவர்களின் மனித உரிமை பறிக்கப்பட்ட 1990–ம் ஆண்டில் நான் பாராளுமன்றம் சென்றேன். 1994–ம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து வடகிழக்கு மாவட்டத்தில் எந்த ஒரு அரசியல்வாதிக்கும் கிடைக்காத கூடிய அளவு தொகையான 43.900 வாக்குகளைப் பெற்று திரும்பவும் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டேன்.

நான் தற்போது த.வி.கூட்டணியின் பாராளுமன்ற தொகுதித் தலைவனாக கடமையாற்றி வருகிறேன். இந்த இயக்கத்தில் வேறு அரசியல் கட்சிகளுடன் கருத்து தொடர்புள்ள, இலங்கைப் பாதுகாப்பு படையினருடன் கடமையாற்றுகின்ற 17 தமிழ் அங்கத்தவர்களில் 5 அங்கத்தவர்கள் என்னுடன் கடமையாற்றுகின்றார்கள்.

நான் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் என்ற முறையில் ஒரு வருடத்தில் 8 மாதங்கள் என் பகுதிக்கு நேரடியாகச் சமூகமளிக்கின்றேன். ஆகையினால், எனது மாவட்டத்தில் மனித உரிமை சீர்குலைவு பற்றி தெளிவாகத் தெரிந்து கொண்டவன். இலங்கைப் பாதுகாப்புப் படையினராலும், மூஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமுகமாக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பாதுகாவலர்களாலும், இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் பணமும் ஆயுதமும் கொடுத்து உதவிய சில தமிழ் தீவிரவாதிகளாலும் எனது மாவட்டத்தில் உள்ள மக்களின் உரிமை கொடூரமான முறையில் பங்கப்படுத்தப்பட்டது என்பதை சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இத்துடன் ஒன்றுமறியாத அப்பாவி மக்களின் அழிவு, கற்பழிப்பு, சித்திரவதை, பாதுகாப்புப் படையினரால் பாதுகாப்பில் வைக்கப்பட்ட மக்கள் காணாமற் போவது, தமிழ் பொதுமக்கள் வசிக்கும் இடங்களுக்குக் குண்டு வீசுதல், செல் அடித்தல், இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களில் பத்துப் பேருக்காவது உணவு, மருந்து கொடுக்க மறுப்பது இப்படிப்பட்ட சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்த நாட்டில் நடக்கும் வன்முறைகள் சிலவற்றை நீங்கள் அறிந்து உணர வேண்டும் என்பதற்காக மட்டும், அரசாங்கப் பாதுகாப்புப் படையினரால் சம்பவித்த வன்முறைகளை இங்கு எடுத்துக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டினேன். இங்கு கூறிய எல்லா அசம்பாவிதங்களும் பாராளுமன்றத்திற்கும், ஜனாதிபதி சந்திரிகா அவர்கட்கும், உதவிப் பாதுகாப்பு மந்திரிக்கும், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் உட்பட எல்லா வெளிநாட்டுத் தூதரகங்களின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது. ஆனால், எந்தவிதமான நடவடிக்கைகளும் கவனத்திற்கு எடுக்கப்படவில்லை. மேற்கூறப்பட்ட எல்லா அசம்பாவிதங்களும் வட கிழக்கில் நடக்கும் எத்தனை கொடூரமானதும் ஆழமானதும் என்பதை எடுத்துக் காட்டுகிறது என்ற போதிலும் அந்தக் கொடூரமான மனித உரிமை சீர்குலைப்பின் அதிகரிப்பைத் தடுப்பதில் நீதி நியாயம் இல்லாது போய்விட்டது.

இதுவரை எந்த ஒரு குற்றவாளியும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்படவில்லை. கொடிய குற்றம் செய்தவர்கள் கூட தண்டிக்கப் படவில்லை என்பது கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். அவசர காலச் சட்டம், தீவிரவாத தடுப்புமுறை என்பவை பாதுகாப்பு படையினருக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளாகும். இதன் விளைவு பாதுகாப்புப் படையினர் இரக்கமில்லாது அர்த்தமில்லாத ஒழுங்கு முறைகளை அதாவது கொலை, கொடூரம், சாட்சியாளர்களைப் பயமுறுத்தி துன்புறுத்தல் ஆகியனவற்றை நடத்துகிறார்கள். அத்துடன் அரசாங்கத்தினால் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியவில்லை அல்லது தண்டிக்க வேண்டாம் என கருதப்பட்டு வருகிறது.

அரசியல் தலைவர்களாலும், ஜனாதிபதி சந்திரிகாவினாலும் கொடுத்த வாக்குமூலங்களும், கட்டளைகளும் பாதுகாப்புப் படையினரால் நடைமுறையில் பயன்படுத்தப்படவில்லை. இவர்கள் தண்டிக்கப்படாததால் குற்றங்கள் கூடி வருகின்றன. வன்முறைச் சம்பவங்கள் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ள மறுப்பதும், தனி விசாரணையின் முடிவுகளை அலட்சியப்படுத்துவதும், விபரங்களை வெளியிடாது கட்டுப்படுத்தலும் அரசாங்கமும் படையினரும் மற்றைய உலக நாடுகளில் இருந்து உதவி பெறுவதும் பாதுகாப்புப் படையினரின் வன் செயலுக்கு ஊக்கமளிக்கிறது. பிரத்தியேகித்துக் கூறப்போனால் அமெரிக்க அரசாங்கம் ஆயுதங்களை விற்பனை செய்து உதவுவதுடன் இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கு ஆயுதங்கள் பிரயோகிக்கும் விசேட கற்பித்தலுக்கும் உதவியளிக்கின்றது.

## 1990 முதல் 1993 வரை நடைபெற்ற வன்முறைகள்

*1990–ம் ஆண்டு ஆனி மாதம் 11–ம் திகதி அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் மேற்கொண்ட ஆறுமாத தற்காலிக போர் நிறுத்தம் முடிவடைந்தது.*

**கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13, 14ம் திகதிகளில் டில்லியில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு சர்வதேச மாநாட்டில், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.....**



1990–ம் ஆண்டு ஆனி மாதம் 23–ம் திகதி இலங்கைப் பாதுகாப்புப் படையினர் மட்டக்களப்பு மாவட்டத்தைக் கைப்பற்ற பயங்கர ஆயுதப் போர் நடத்தினார்கள்.

1990–ம் ஆண்டு ஆனிமாதம் 23–ம் திகதிக்கும் ஆடி மாதம் 15–ம் திகதிக்கும் இடையில் 600க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தப்பட்டார்கள்.

இறந்த சடலங்கள் ரயர் (Tire) உடன் சேர்த்து எரிக்கப்பட்டன. அரைகுறையாக எரிந்த சடலங்களை மட்டக்களப்பு மாவட்ட வீதிகளிலும் முக்கியமான இடங்களிலும் மக்களின் காட்சிக்காக வீசப்பட்டிருந்தன. பொதுமக்களில் யாராவது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டால் அவர்கட்கு இப்படிப்பட்ட கொடூரமான நிலைமை ஏற்படும் என்பதை இவ்வாறு எச்சரிக்கை செய்தார்கள்.

இதேபோன்ற சம்பவம் 1989–ம் ஆண்டிலிருந்து 1990–ம் ஆண்டுவரை அரசாங்கப் படையினருக்கும் J.V.P. அங்கத்தவர்களுக்கும் தென் இலங்கையில் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் நடந்ததென தெளிவாக்கிக் காட்டப்பட்டுள்ளது.

* 1990–ம் ஆண்டு ஆவணி மாதம் 11–ம் திகதி சித்தாண்டி இந்து ஆலயத்தில் இருந்த 2000 அகதிகளை இலங்கைப் படையினர் சுற்றிவளைத்து அவர்களில் 32 அப்பாவிப் பொது மக்களைப் கைது செய்து கொண்டு சென்றார்கள். அவர்கள் இதுவரை எங்கே? அவர்கட்கு என்ன நடந்தது? என்பது யாருக்கும் தெரியாது. அவர்கள் பாதுகாப்பிடத்தில் வைத்தே கொல்லப்பட்டு விட்டார்கள் என நம்பப்படுகிறது.
* 1990–ம் ஆண்டு ஆவணி மாதம் 20–ம் திகதி சாவுகாடி என்னும் தமிழ்க் கிராமத்தில் முஸ்லிம் பாதுகாவலர்கள் புகுந்து குழந்தைகள் பெண்கள் உட்பட 32 அப்பாவி மக்களைக் கொன்றார்கள்.
* 1990–ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5–ம் திகதி மட்டக்களப்பில் உள்ள வந்தாறுமூலை என்னும் இடத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் இருந்து 148 தமிழ் இளைஞர்கள் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் முன்னிலையில் அரசாங்க பாதுகாப்பிடத்தில் வைத்துப் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டார்கள் எனக் கருதப்படுகிறது.
* 1990–ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9–ம் திகதி நான் அகதிமுகாமுக்குச் சென்று அரசாங்கப் படையினரால் கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்களின் பெயர் விபரமெல்லாம் பெற்றுக் கொண்டேன். இந்தப் புள்ளிவிபரங்களை பாராளுமன்றத்தில் உதவிப் பாதுகாப்பு மந்திரியிடம் ஒப்படைத்தேன். இறந்த ரஞ்சன் விஜயரட்னாதான் விசாரணை செய்ததாகவும் எந்த ஒரு இளைஞனும் அகதி முகாமில் இருந்து பாதுகாப்புப் படையினரால் கடத்திச் செல்லப்படவில்லையென்று மறுத்துவிட்டார்கள். 2 மாதங்கட்குப் பின்பு மந்திரிசபையின் செயலாளரிடமிருந்து எனக்கு கடிதம் கிடைத்தது. அக்கடிதத்தில் புரட்டாதி மாதம் 5–ம் திகதி 31 இளைஞர்கள் பாதுகாப்பிடத்திற்கு அரசாங்கப் பாதுகாப்புப் படையினரால் கூட்டிச் சென்றதாகவும், 24 மணித்தியாலயத்தில் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் பாராளுமன்றத்திற்குச் சென்று அந்த 31 இளைஞர்களும் வீட்டுக்குத் திரும்ப



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லை என்று கேட்டபோது கிடைத்த பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த இளைஞர்களை தங்கள் இயக்கத்திற்குக் கூட்டிச் சென்றுவிட்டார்கள் என்பதாகும்.

* 1993–ம் ஆண்டுக்கு முன்பு கூறப்பட்ட 148 அப்பாவி இளைஞர்களும் 4 அரசாங்கப் படையினரால் கொல்லப்பட்டார்கள் என்று தெரிவித்திருந்தும் இதுவரை அவர்கட்கு முதலில் இருந்த அரசாங்கத்தினாலோ அல்லது தற்போதுள்ள அரசாங்கத்தினாலோ எந்த விதமான தண்டனையும் கொடுக்கப்படவில்லை.

## கொழும்பில் பொல்கொட ஏரியில் கொலை

* 1995–ம் ஆண்டில் 27 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு கொழும்பு நகரத்தில் உள்ள வெவ்வேறு ஏரிகளில் சடலங்கள் வீசப்பட்டுள்ளதாக விசேட படையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இக் கொலைக்குக் காரணம் மேற்கூறப்பட்ட 4 பாதுகாப்புப் படையினரில் ஒருவர் என்றும் அறிவிக்கப்பட்டது. இக் கொலை சம்பந்தமாக நீதிமன்றத்திற்குக் குற்றவாளிகள் 4 தடவை விசாரணைக்காக அழைக்கப்பட்டும் அரசாங்கக் கட்சியினர் நீதிமன்றத்திற்கு வந்த காரணத்தால் இந்த வழக்கு 1997–ம் ஆண்டு பங்குனி மாதம் 13–ம் திகதி நிராகரிக்கப்பட்டது. தற்போது குற்றஞ்சாட்டப்பட்ட பாதுகாப்புப் படையினர் சேவையில் ஈடுபட்டுள்ளார்கள். அரசாங்கம் இறந்த சடலங்களை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லையென்று பொய் கூறி அந்த சம்பவத்தைக் கைவிட்டு விட்டதாக நம்பப்படுகிறது.

*1990–ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9–ம் திகதி மட்டக்களப்பின் சில கிராமங்களின் பொது மக்கள் அரசாங்க பாதுகாப்பு படையினரால் பொது வீதிக்கு அழைக்கப்பட்டு 10 வயதுக்கு உட்பட்ட 33 குழந்தைகள், 68 பெண்கள் உட்பட 181 கிராமவாசிகள் கடத்திச் செல்லப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டார்கள். இதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

* 1991–ம் ஆண்டு ஆனி மாதம் 22–ம் திகதி மட்டக்களப்பில் உள்ள கொக்கட்டிச்சோலை என்னும் கிராமத்தில் 67 அப்பாவிப் பொதுமக்கள் அரசாங்கப் படையினரால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள். அந்தக் கிராமத்தில் நடைபெற்ற நிலக்குண்டு வெடிப்பில் (நிலக்கண்ணி வெடி) 3 அரசாங்கப் படை வீரர்கள் இறந்ததன் காரணமாகவும் அதற்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் இச் சம்பவம் அரசாங்க பாதுகாப்புப் படையினரால் நடாத்தப்பட்டது. 67 சடலங்களும் நிலக்கண்ணி வெடி வெடித்த இடத்தில் வைத்து எரிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் பற்றி இறந்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு நான் தகவல் கொடுத்தேன். விசாரணையின் முடிவில் கப்டன் குடில்கம என்பவர் குற்றவாளியாக காணப்பட்டு சேவையில் இருந்து நீக்கப்பட்டார். ஆனால் அவருக்கு 2 மாதங்களின் பின் உயர்பதவி கொடுக்கப்பட்டது.

* 1992–ம் ஆண்டு ஆவணி மாதம் 9–ம் திகதி மைலாந்தனை என்ற கிராமத்தில் 36 பொதுமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டதுடன் 35 பொதுமக்கள் படுகாயமும் அடைந்தார்கள். பொலிசாரினால் பிடிக்கப்பட்டு பொலநறுவை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

* 1992–ம் ஆண்டு ஆவணி மாதம் 22–ம் திகதி புதுக்குடியிருப்பு என்னும் கிராமத்தில் முஸ்லிம் பாதுகாவலர்களினால் 16 அப்பாவித் தமிழ் மீனவர்கள் கொல்லப்பட்டதுடன் 15 பேர் படுகாயமடைந்தனர். இன்று வரை இந்த அசம்பாவித சபவத்திற்கு எதிராக எந்தவிதமான சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## எனது வாழ்க்கையில் கொடூரமான பயமுறுத்தல்

நாட்டில் நடக்கும் அசம்பாவிதங்களை பலருக்கும் தெரியப்படுத்துவதால் நான் பலமுறை பயமுறுத்தப்பட்டுள்ளேன். இருந்தும் நான் எனது வாழ்க்கையைப் பொருட்படுத்தாது இச் சம்பவங்களைத் தெரியப்படுத்தி வருகிறேன்.

## 1994 - 1995 வரை

இந்த வருடத்தில் பாதுகாப்பு படையினரால் நடாத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறைந்து காணப்பட்டது. காரணம் வெளிநாடுகள் எதிர்ப்புக் காட்டியதுடன் உதவி செய்ய மறுத்ததாக தெரிவித்தமையாகும்.

## 1995–ம் ஆண்டின் நடுப் பகுதி

இந்த வருடத்தின் நடுவில் அரசாங்கப் பாதுகாப்புப் படையினரால் நடைபெற்ற அசம்பாவிதங்கள் அதிகரிக்கத் தொடங்கி 1996 – 1997 இல் மிகமிக அதிகரித்தது. இந்த நேரத்தில் சித்திரவதை செய்தல், கற்பழித்தல், கொலைசெய்தல் என்பன அதிகரித்தது. குண்டு வீசல், செல் அடித்தல் அதிகரித்ததனால் பொது மக்கள் இடம்பெயர்ந்து விவசாயம், மீன் பிடித்தல் போன்ற தொழில்களைச் செய்ய முடியாமல் கஷ்டப்பட்ட போதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வசதியோ மருந்து வசதியோ அளிக்க அரசாங்கம் முன்வரவில்லை.



**1997 பங்குனி மாதம் நடைபெற்ற சில சம்பவங்களை எடுத்துக் கூறுகிறேன்.**

மட்டக்களப்பு நகரத்தில் பங்குனி மாதம் 8–ம் திகதி காலை 6 மணிக்கு கடை திறப்பதற்காக போய்க்கொண்டிருந்த 22 வயது கோமேஸ் அன்ரனி ராஜ் என்பவர் பொலிசாரினால் கடத்திச் செல்லப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டான்.

அதே நகரத்தில் வேறு ஒரு 21 வயது இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டான்.

பங்குனி 11–ம் திகதி கல்லடி என்னும் கிராமத்தில் இருந்து 18 வயது இளைஞன் ஒருவன் மாலை 4 மணிக்கு அவனுடைய வீட்டில் இருந்து கறுப்பு முகமூடி அணிந்த ஒருவன் நம்பர் இல்லாத வெள்ளை வானில் வந்து கடத்திச் சென்றதாகவும் அந்த இளைஞனின் வீட்டார்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறினர். முகமூடியணிந்து வந்தவன் பொலிஸ் அதிகாரியெனக் கண்டுபிடித்ததாகவும் அதே பொலிஸ் அதிகாரி முன்பு நடந்த இரண்டு கொலைகளையும் செய்தார் எனத் தெரிந்து கொண்டனர். 7 மணியளவில் அந்த இளைஞனின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் இருந்து கிடைக்கப்பட்டதாகவும் தெரியப்படுகிறது.

நான் இந்தக் கொடிய சம்பவத்தை மேலதிகாரிக்கு எடுத்துச் சென்றபோது அந்த இளைஞனின் கையில் துப்பாக்கி இருந்ததாகவும் பொலிசாரைச் சுட எத்தனித்ததாகவும் பொலிஸ் அதிகாரி தன்னை பாதுகாக்கும் முகமாக இளைஞனைச் சுட்டுக் கொன்றதாகவும் இந்த இளைஞன் புலிப்படையின் ஒரு அங்கத்தவன் என்றும் கூறினார்கள்.

1997 பங்குனி மாதம்17–ம் திகதி மட்டக்களப்பில் இருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள தன்னாமுனை என்னும் இடத்தில் இரண்டு சகோதரிகள் (வேலன் ராசம்மா விதவை 38 வயது, நல்லையா தரிசினி 28 வயது) நாலு இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்டார்கள். 150 பாதுகாப்புப் படையினரை விசாரணை நடத்திய போது ஒருவர் மாத்திரம் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டார். ஆனால், அக்குற்றவாளியும் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

* 1997 பங்குனி மாதம் 22–ம் திகதி இருதயபுரம் என்னும் கிராமத்தில் வசிக்கும் மேர்வின் ஒக்கிர்ஸ் என்ற 52 வயதுப் பெண் அவருடைய இல்லத்தில் பொலிசாரினால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். அதே சமயம் அவரின் கணவர் கிங்ஸ்லி ஒக்கிர்ஸ் (55 வயது) என்பவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## 3 பிள்ளைகளின் தாயான கோணேஸ்வரி என்பவர் பொலிசாரினால் கற்பழிக்கப்பட்டார்

1997 வைகாசி மாதம் 17–ம் திகதி 35 வயது முருகேசப்பிள்ளை கோணேஸ்வரி என்பவர் பொலிஸ் குழுவினரால் கற்பழிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். அத்துடன் பிரேத பரிசோதனையில் விபரம் வெளிவராதிருக்க கிறனைற் வெடியை அவரின் வயிற்றில் எறிந்திருந்தார்கள்.

இந்த சம்பவத்தை நான் ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஜனாதிபதி பெண்ணின் உடலைப் பரிசோதனைக்கு அனுப்பும்படி உத்தரவிட்ட போதிலும் விசாரணையில் யாரும் தண்டிக்கப்படவில்லை.

## கற்பழிப்புச் சம்பவங்களின் தொகை அதிகரிப்பு

கடந்த இரண்டு ஆண்டுகளாக கற்பழிப்புச் சம்பவங்களின் தொகை அதிகரித்து வருகிறது. அதிக சம்பவங்கள் நடைபெற்றாலும் ஒரு சில சம்பவங்கள் மாத்திரம் மக்களுக்கு தெரியவருகிறது. தமிழ் சமுதாயத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டுவிட்டால் அந்தப் பெண் சமுதாயத்தில் இருந்து விலக்கி வைக்கப்படுகிறாள். எந்தவொரு ஆண்மகனும் அந்தப் பெண்ணை மணந்துகொள்ள முன்வரமாட்டான். அதனால் பெண்கள் நடக்கும் சம்பவங்களை மறைத்து விடுகிறார்கள்.

1997 ஆனி மாதம் 14–ம் திகதி 3 விவசாயிகள் பயிருக்கு நீர் பாய்ச்சிவிட்டு ராங்கை (Tank) பூட்டச் சென்ற போது அவர்கள் இராணுவத்தினரால் பாதுகாப்பிடத்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டார்கள். அவர்களின் மனைவிமார் இராணுவ முகாமுக்கு சென்று தங்கள் கணவன்மாரைப் பற்றி விசாரித்த போது தங்களுக்கு எதுவும் தெரியாது எனக் கூறினார்கள். இதனால் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பது தெரியவருகிறது. அதிகமான கிராமவாசிகள் குண்டு வீச்சு, செல்லடி என்பவற்றிற்கு பயந்து தங்கள் கிராமத்தின் அருகே உள்ள இந்து ஆலயத்திற்கோ அல்லது கிறிஸ்தவ ஆலயத்திற்கோ சென்று இரவைக் கழித்து விட்டு காலையில் வீடுதிரும்புவார்கள். அதைவிட்டு இந்த மாவட்டத்தில் வாழும் ஒவ்வொரு தமிழரின் வீட்டுக் கதவிலும் அங்கு வசிக்கின்ற அங்கத்தவர்கள் அத்தனை பேரின் பெயரும் அடையாள அட்டையின் இலக்கமும் ஒட்டப்படல் வேண்டும். இந்தச் சட்டம் அங்கு வாழும் முஸ்லிம் மக்களுக்கோ அல்லது சிங்கள மக்களுக்கோ அவசியமில்லை. வீட்டில் வசிக்கும்தமிழ் அங்கத்தவர்களின் பெயர்கள் அடுத்துள்ள பொலிஸ் நிலையத்தில் பதியப்பட வேண்டும். சிலவேளையில் ஒரு தமிழரின் வீட்டுக்கு அவரின் சொந்தக்காரர் அல்லது சினேகிதன் வந்து இரவு தங்க வேண்டி நேரிட்டால் அடுத்துள்ள பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அறிவிக்காவிடின் ஏதும் சம்பவங்கள் நடந்தால் இவர்கள் பொலிஸ் பாதுகாப்பு நிலையத்திற்குக் கொண்டு போகப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவதுடன் சிலவேளை சித்திரவதைக்கும் ஆளாக்கப்படுவர்.

இலங்கை அரசாங்க பாதுகாப்புப் படையினர் ஆண்களும் பெண்களும் உட்பட மக்களைக் கைது செய்து அவர்களுடன் தகாத முறையில் நடந்து கொள்வதுடன், தொடர்ந்து சித்திரவதையும் செய்துவருகிறார்கள். சித்திரவதை செய்யும் முறைகள் குதிக்காலில் பொலிஸ் (Baton) தடியால் அடித்தல், எரித்தல், காலில் கயிறு கட்டி தலை கீழாகத் தொங்கவிடுதல், முகத்தில் மிளகாய்த் தூள் எறிதல், நீர் உள்ள பொலித்தீன் பையில் தலைகீழாகத் தொங்கும் முகத்தை உள்வைத்துக் கட்டி சுவாசத்தைத் தடைப்படுத்தல் ஆகியனவையாகும்.

## மற்றைய மாவட்டத்தின் மனித உரிமை சீர்குலைப்பு

மக்களின் மனித உரிமை சீர்குலைப்பு பாதுகாப்புப் படையினரால் நடாத்தப்பட்டது. எனது மாவட்டத்தில் மாத்தி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரம் நடந்தவைகளை எடுத்துரைத்தேன். ஆனால், இதே அசம்பாவிதங்கள் வட கிழக்கின் மற்றைய மாவட்டங்களிலும், யாழ்ப்பாணத்திலும் கொழும்பு நகரத்திலும் நடைபெற்று வருகின்றன.

*1996–ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அரசாங்கப் படையினர் கால் வைத்த சில மாதங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் காணாமற் போனதுடன் அதிகமான பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள்.*

## தமிழ் மக்கள் விமான நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்டார்கள்

கடைசியாக மக்களுக்கு ஏற்பட்ட அநியாயம் பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு பயணத்திற்காக தமிழ் மக்கள் சென்றதும் அவர்களின் பாஸ்போட், கையில் உள்ள முக்கிய கையிருப்பு பத்திரங்கள் அதிகாரிகளால் பார்வையிடும் போது ஏதும் தவறு தோன்றினால் அவர்கள் பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு சட்டதிட்டங்களின் கீழ் பராமரிக்கப்பட்டுவர். அதே நேரத்தில் சிங்கள மக்களிலோ அல்லது முஸ்லிம் மக்களிலோ யாராவது தவறு கண்டுபிடிக்கப்பட்டால் விமான நிலையத்தில் உள்ள இமிக்கிரேசன் (Immigration) பகுதியினர் தீர்மானம் எடுத்துக் கொள்வர். இப்படிப்பட்ட நடவடிக்கை தமிழ் மக்களுக்கு மாத்திரம் இடம்பெறுகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் புதிய நிலப்பாதை அமைக்கும் திட்டம் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் உருவாக்கப்பட்டது. இதனால் 2,00,000 பொதுமக்கள் இடம்பெயர நேர்ந்தது. பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவுக் காட்டில் அலைந்து திரிகிறார்கள். பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இராணுவ முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு இடம்பெயர்ந்த பொதுமக்கள் திரும்பவும் தங்கள் சொந்த இடங்கட்குப் போய் குடியிருக்க அரசாங்கப் படையினரோ அல்லது அரசாங்கமோ அனுமதிக்கவில்லை. இம்மக்கள் படையினரால் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டதுடன் ICRC, UNHCR, NGOS ஆகியவர்களையும் கூட முகாமுக்கு வரமுடியாது தடுத்து வருகிறார்கள்.

## தீர்மானம்:-

எனது தீர்மானத்தில் இருந்து அரசாங்கத்தின் (War for Peace) 'சண்டை சமாதானத்திற்காக' என்ற கொள்கை தோல்வியடைகின்றது. ஏனென்றால், அரசாங்கப் படையினரால் நடாத்தப்படும் தொழிலில் சிறிய உயர்வு காணப்பட்டாலும் பொது மக்களுக்கு அதிக தொந்தரவுகள் ஏற்படுவதுடன் அவர்களின் மனித உரிமைகளும் பறிக்கப்பட்டு வருகிறது. தமிழ் மக்கள் அரசாங்கத்திடம் வைத்த தன்நம்பிக்கை இழக்கப்பட்டு வருகிறது.

அதனால் நான் அமெரிக்க அரசாங்கத்திடம் கேட்கிறேன் இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடி இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக்கு ஆதரவு அளிக்குமுகமாக கீழ் தரப்பட்டுள்ள சில வேண்டுகோள்கட்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்த நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒத்தாசை புரிய வேண்டும்.

1. அப்பாவிப் பொதுமக்களுக்கு தீங்கு விளைவித்த குற்றவாளிகளும் தற்போது தீங்கு விளைவிக்கின்ற குற்றவாளிகளும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அவசரகாலச் சட்டம், தீவிரவாத எதிர்ப்பு (Emergency Law & Anti Terrorism) ஆகிய இரண்டு சட்டங்களும் மாற்றப்பட்டால் ஒழிய மனித உரிமைகள் கிடைப்பதில் எந்தவிதமான உயர்வும் கிடையாது.
2. பத்திரிகையாளர்களையும் (Media), NGO ஆட்களையும் பாதிக்கப்பட்ட இடங்களைப் போய்ப் பார்வையிட அரசாங்கம் ஒரு தடையுமின்றி அனுமதிக்க வேண்டும்.
3. போதுமான அளவு உணவும் மருந்தும் வடகிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பி உதவ அனுமதிக்க வேண்டும். அத்துடன் NGO ஆட்கள் எதுவித தடையுமின்றி அங்கு போய் உதவி செய்யவும் அனுமதிக்க வேண்டும்.
4. வவுனியா அகதிமுகாமில் தங்கியிருக்கும் பொதுமக்களை அவர்களின் சொந்த இடங்களுக்குப் போய்ச் சேர அனுமதிக்க வேண்டும்.
5. பொது உலக நாட்டுக்குழு ஒன்று வடகிழக்கில் அமைக்கப்பட்டு அவர்களால் அங்கு நடக்கும் அசம்பாவிதங்கள் அறிவிக்கப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்படும் வரை அமெரிக்க அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு செய்யும் உதவியை தடுத்து வைக்க வேண்டும். பிரத்தியேகமாக அரசாங்கப் பாதுகாப்புப் படையினருக்கு அளிக்கும் ஆயுத உதவி.

*1993 – 1994* இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறைவாக இருந்ததன் காரணம் இதே நடவடிக்கை வேறு ஒரு வெளிநாட்டு குழு ஒன்றினால் எடுக்கப்பட்டமையாகும்.

★

## தமிழர் மீதான சித்திரவதைகள் ஒத்திகை நடவடிக்கையாம்

கொழும்பில் 24-ம் திகதியன்று நள்ளிரவு முதல் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்களைக் கைது செய்து கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கிய சிறீலங்காப் பாதுகாப்பு அலுவலர்கள் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை ஒரு ஒத்திகை நடவடிக்கை என கூறியுள்ளனர்.

நள்ளிரவு முதல் காலை வரையாக சுமார் 8 மணி நேரமாக கொழும்புக்கான நுழைவாயில்கள் யாவும் மூடப்பட்டு இராணுவமும் பொலிசாரும் கூட்டாகப் பாரிய தேடுதல்களை மேற்கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைது செய்து இழுத்துச் சென்றது தெரிந்ததே.

மனிதாபிமானமற்ற முறையில் உயர்பதவி வகிக்கும் உத்தியோகஸ்த்தர்கள் உட்பட அனைவரையும் கைது செய்த படையினர் அவர்களில் பலரை பிரபல சித்திரவதைக் கூடமான 4-ம் மாடிக்குக் கொண்டு சென்று அங்கே வைத்து தண்ணீர் நிரப்பிய இரும்புக் குழாய்களாலும் தடிகளினாலும் கடுமையாக தாக்கியதுடன் கை, கால் நகங்களைப் பிடுங்கியும் பிறப்புறுப்புக்களை அடித்து நொருக்கியும் கற்பனை செய்யமுடியாத சித்திரவதைகளை இவர்கள் மீது பிரயோகித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும், இந்நடவடிக்கை பற்றிக் கருத்து தெரிவித்த சிறீலங்காப் பாதுகாப்பு அலுவலர்களும் அமைச்சின் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்கவும் இது எதிர்காலத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடைபெற்றால் அதனை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட ஒத்திகை நடவடிக்கை எனக் கூறியுள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்ட பலரை விடுதலை செய்துவிட்டதாக அரசு பிரச்சாரம் செய்கின்ற போதிலும் தொடர்ந்தும் பலர் அடைத்து வைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதாகவே ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழரின் சுயகௌரவத்தின் சின்னமாக புலிகளை முழு உலகமும் ஏற்றுள்ளது!

**சிறிலங்கா பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகால சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானா ஆற்றிய உரையின் ஒரு பகுதி...**

நமது நாடு ஒரு வினோதமான நாடு. நமது அரசாங்கம் ஒரு விசித்திரமான அரசாங்கம். நாம் சமாதானம் சமாதானம் என்று பேசிக்கொண்டே போரை நடத்திச் செல்வதில் அசகாய சூரர்கள். யாரும் கேட்டால் சமாதானத்தைக் கொண்டு வருவதற்காகத்தான் நாம் போர் புரிகிறோம் என்று அவர்கள் சொல்லிச் சொல்லி, அதுதான் உண்மையென்றும் நாம் நம்பத் தொடங்கிவிட்டோம்.

நமது "சமாதானப்புறா" பொழியப்படும் குண்டுகளினால் எழுப்பப்பட்டு வருகின்ற புகை மண்டலத்துள் சிக்கி தனது திசையைத் தொலைத்துவிட்டது. ஒரு பைத்தியம் பிடித்த பருந்தைப் போல நமது புனிதமான சமாதானப்புறா இரத்தவாடையை ருசித்துப் பறக்கிறது.

ஆனால் நமது அரசியல்வாதிகளும், அரசாங்கமும், நரமாமிசப் பட்சணிகளின் வேதத்தைப் பின்பற்றுகிறார்களா என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பதவிக்கு வந்த ஒரு வருடத்தில் சமாதானத்தைக் கொண்டுவருவோம் என்று பறையடித்து வந்த பொது முன்னணி அரசாங்கம் மூன்று வருடங்கள் முடிந்த பின்னும் சமாதானத்தை பிரசவிக்க முக்கி முனகிக்கொண்டிருக்கிறது.

போரை நடத்தவேண்டுமென்ற போக்கிரித்தனமான வெறியினால் புற்றுநோய் கண்டு ஊதிப்புடைத்திருக்கும் வயிற்றை வெளிப்புறமாகப் பார்த்து சமாதானக் குழந்தை கருக்கொண்டுள்ளது என்ற நினைப்பில் முக்கித் தக்கிப் பிரசவ வலியை ஏற்படுத்திப் புற்றுநோயைப் பெறுவதற்கே அரசாங்கம் முனைகிறது.

போரை ஒரேயடியாக நிறுத்திக் கொள்ளவும் முடியாது. தொடர்ந்து போர்களை நடத்திக் கொண்டு இருக்கவும் முடியாத ஒரு இரண்டும்கெட்டான் நிலைமையில் பொது முன்னணி அரசாங்கம் நன்றாக மாட்டிக் கொண்டுள்ளது.

சென்ற 1997–ல் மே மாதம் 13–ம் திகதி வன்னி – கிளிநொச்சி பாதையைத் திறப்பதற்கான யுத்தத்தை ஆரம்பித்த பதில் பாதுகாப்பு அமைச்சர் ஒரு மாத காலத்துள் பாதையைத் திறந்து விடுவதாக மார்தட்டிப் பேசினார். எட்டு மாதங்களாகப் போகின்றது.

ஆனால், இந்தப் போரரோ வெல்ல முடியாத போராகும். இது விடுதலைப் புலிகளுக்கு எதிராக சில ஆயிரம் தமிழ் பயங்கரவாதிகளுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற போர் என்ற தப்புக்கணக்கைப் போட்டு அரசாங்கம் இந்தப் போரை நடத்தி வருகிறது.

ஆயுதம் தாங்கிய சிறுபான்மைத் திராவிட இளைஞர் சிலருன் கொட்டத்தை அடக்க இராணுவப் பலம் கொண்ட பெரும்பான்மை ஆரிய இளைஞர் படை மேற்கொள்ளும் ஒரு கோஷ்டி மோதலாக அரசாங்கத்திலுள்ள இனவாத வெறியர்கள் இந்தப் போரை எடுத்துக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இதனை சிங்கள கௌரவத்தை மேம்படுத்தும் ஒரு சில்லறை நடவடிக்கையாக அரசாங்கம் கருதுகிறது. ஆனால், இது அவ்வளவு சுலபமான, அற்பமான விடயமல்ல.

இன்று நடைபெறுகின்ற யுத்தம் – இந்த அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கின்ற போர் – விடுதலைப் புலிகளுக்கு எதிரானவை என்று எடுத்துக் கொள்வது தவறானது.

இந்தப் போரும் யுத்தமும் இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களின் மன உணர்வுகளுக்கு எதிராக, மான உணர்வுகளுக்கு எதிராக, அவர்களது அடிப்படை அபிலாஷைகளுக்கு எதிராக, ஒடுக்க முயற்சிக்கப்பட்ட அவர்களது உணர்ச்சிகளுக்கு எதிராக சம அந்தஸ்துக்கான உரிமைப் போராட்டத்திற்கு எதிராக, மேற்கொள்ளப்படுகின்ற போர்களும் யுத்தமுமாகும்.

மேற்சொன்ன உணர்வுகளின் – உரிமைகளின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான்; விடுதலைப் புலிகள் மட்டும்தான் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயங்கக்கூடாது.

இந்த நாட்டின் கௌரவத்தை மதிக்கின்ற சிறுபான்மைத் தமிழர்களின் சின்னம் விடுதலைப் புலிகள்தான் என்பதை முழு உலகமுமே ஏற்றுக் கொண்டுள்ளது.

அதை மறுப்பதோ நிராகரிப்பதோ சிறுபிள்ளைத் தனமானது, விளைவுகளைப் பற்றிய முன்யோசனை இல்லாதது.

"இன்று நடைபெறுகின்ற யுத்தம் தமிழர்களுக்கு எதிரானது அல்ல. அது விடுதலைப் புலிகளுக்கு எதிரானது" என்று எந்த அரசாங்கம் கூறினாலும் அது வெறும் ஏமாற்றும் பேச்சாகும்; தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் பேச்சாகும்.

அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் நடத்த முற்படும் தேர்தல்கள் – உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் – எதற்காக நடத்தப்படப்போகின்றன?

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களினால் அரசாங்கம் யாழ்.மாவட்ட மக்களுக்குப் புதிதாக என்ன நன்மையைத்தான் செய்ய முடியும்?

அரசாங்கத்தின் இராணுவம் ஒரு நாளைக்கு யாழ்ப்பாணத்தில் இல்லாவிட்டால் இன்று யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுகின்ற கட்சிகள் அனைத்தும் வாலைச் சுருட்டிக்கொண்டு கொழும்புக்கு ஓடி வந்து விடும். போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் நிலைமை அந்தோ பரிதாபமாகப் போய்விடும்.

அது மாத்திரமல்ல, யாழ்.மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பூரணமாக மீளத் திரும்பியபாடில்லை. கொழும்பு, திருமலை, வவுனியா, மன்னார் போன்ற பகுதிகளில் பயணத்திற்காகக் காத்துக் கிடக்கின்றனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் அங்கு தேர்தல் நடத்த அரசு முடிவு செய்திருப்பது வேதனையளிக்கின்றது. வடபகுதி மக்களுக்கு இன்று தேவையானது தேர்தல் அல்ல. அமைதி ஒன்றுக்காகவே அவர்கள் ஏங்கி நிற்கின்றனர்.

தேர்தலுக்கான மேற்பார்வையாளர்களுக்கும் தட்டுப்பாடு, வாக்காளர்களும் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அரசு அவசர அவசரமாகத் தேர்தலை அரங்கேற்ற முனையும் நோக்கம் வெளி உலகுக்கு வட – கிழக்கில் நிலைமை சீரடைந்துவிட்டது என்று காட்டி வெளிநாடுகளிலிருந்து உதவிகளை பெறவே.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மை நிகழ்வு

# புதைகுழியில் 36 சடலங்கள்

அம்பாறை மாவட்டம் கல்முனையில் இருந்து வடக்குத் திசையாக பிரதான வீதியூடாக ஒருமைல் தாண்டி வந்தால் வீதியின் வலப்புறத்தில் விரிந்துகிடக்கும் காணி எங்கும் பரந்து கிடக்கும் கட்டடங்கள் யாவும் கல்முனைப் பட்டினத்திற்கான அரசாங்க வைத்தியசாலையாகும். இதற்கு நேராக வளைந்து நெளிந்து செல்லும் செம்மண் பாதையொன்று மணல்சேனை, நற்பட்டிமுனைச்சேனைக்குடியிருப்பு, புங்கடிவெட்டை, மத்திய முகாம் நோக்கிய உள்பாதையாகும். இதில் இருந்து குத்துமதிப்பாக 500யார் தொலைவில் தாளவட்டான் சந்தி (ராஜ் தியேட்டரடி) உள்ளது. இதனூடாகச் செல்லும் பிரதான பாதையும் இக்கிராமங்களை ஊடறுத்தே செல்கின்றது. இதில் மணல்சேனை மட்டும் நற்பட்டிமுனைக்குப் பின்னால் இருப்பதால் இந்தப் பிரதான வீதியின் ஆக்கிரமிப்பிற்கு மணல்சேனை உட்படவில்லை.

1988–ம் ஆண்டு மாசி மாதப்பனி தன் இஷ்டப்படி பெய்து கொட்டிக் கொண்டே இருந்தது. விடிந்தும் படுக்கையை விட்டு எழும்ப மனமில்லாது சிறுவர்கள் தங்களை முற்றிலும் போர்த்தி இருந்த போர்வையை சரியாக உள்ளதா என்று சரிபார்த்துக் கொண்டு கை கால்களையும் மடக்கி வயிற்றுக்குள் வைத்துக்கொண்டு படுக்கையின் ஒரு மூலையில் ஒதுங்கிப் படுத்துக்கொண்டு இருக்கின்றனர். நற்பட்டிமுனைக் கிராமம், மணல்சேனைக் கிராமம் என்பன எழுத வாசிக்க மட்டும் சிரமப்பட்டுப் படித்தவர்களையும், நன்கு படித்த மேதைகளையும், ஒரு நாள் வயிற்றுப் பொழுதுக்குக் கூலி வேலை செய்யும் மக்களையும், தங்கள் தலைவிதியைத் தங்கள் தலையிலே தாங்களே எழுதியது போல் மாட்டுப்பண்ணைத் தொழில் புரிபவர்களும், விவசாயிகளும், மற்றும் பெரும் முதலாளிகளும் கலகலப்பாக வாழ்ந்து வரும் ஒரு கிராமமாக இருந்தது.

இந்த வகையில் பார்க்கப் போனால் பச்சை மயிலின் வீடு பரவாயில்லை. பச்சைமயிலர் தனக்குக் கீழ் பத்துப் பதினைந்து சுருட்டுத் தொழிலாளிகளை வேலைக்கு வைத்துக்கொண்டு ஏதோ எனத் தனது தொழிலை நடாத்திக் கொண்டு இருந்தார். அன்று அதிகாலை பெரிய தொழிற்சாலைகள் இயங்கும் இரைச்சலுடன் மதயானைகள் பிளிறிவிடுவது போல் கரிய கரிய வாகனங்கள் சேனைக்குடியிருப்பு, நற்பட்டிமுனை கிராமங்களைச் சுற்றி வளைத்து அந்தக் காலை வேளையின் அமைதியைக் கலைத்தன.

அக்கரைப்பற்றில் இருந்து வந்த S.T.F.இனரும் களுவாஞ்சிக் குடியில் இருந்து விரைந்த S.T.F.இனரும் இந்தச் சுற்றிவளைப்பைத் திட்டமிட்டபடி மேற்கொண்டனர். S.T.F.இனரின் சுற்றிவளைப்பில் இருந்து துணிச்சலான இளைஞர்கள் ஒரு சிலர் பக்கத்திலுள்ள சிறியகுளம், பெரியகுளம் ஊடாக நீலாவணை, கல்லாறு, பாண்டிருப்புக் கிராமங்களுக்கும் ஓடினர். மணல்சேனைப் பகுதியில் உள்ள ஒரு சில இளைஞர்களை கண்டபடி சுட்டுக்கொன்று மேலும் தப்பியோடாத வகையில் சுற்றிவளைப்பை மேற்கொண்டு ஒவ்வொரு வீடு வீடாகச் சோதனையிட்டு அதில் இருந்த ஆண்களையெல்லாம் அருகில் உள்ள கோயில் வளாகத்திற்குக் கொண்டு சென்றனர். இதன் அடிப்படையில் பச்சைமயிலர் வீட்டிற்கும் வந்து அங்கு சுருட்டுச் சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருந்த குணரெட்ணம் வாத்தியாரின் மகன் பத்மன் உட்பட 15 இளைஞர்களையும் பிடித்துக்கொண்டு அந்த வளாகத்திற்கு கொண்டு சென்றனர். இந்த இடத்தில் எனக்குத் தெரிந்த பத்மனைப் பற்றிக் கொஞ்சம் கூறத்தான் வேண்டும். பத்மன் படித்தவன். கறுப்பாக இருந்தாலும் கவர்ச்சியான உடல் தோற்றத்தைக் கொண்டவன். அவன் கழுத்தில் எந்த நேரமும் தொங்கிக் கொண்டிருக்கும் தங்கச் சங்கிலியும் இடது கையில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும் மொண்டியா மணிக்கூடும் அவனுக்கு மேலும் அழகு சேர்ப்பதாகவே இருந்தது. பத்மன் தனது படிப்புக்கேற்ற தொழில் கிடைக்கவில்லை என்றாலும் எந்தத் தொழிலும் தமக்குச் சம்மதமே என்ற நோக்கோடு அம்பாறை கஞ்சிகுடிச்ச ஆற்றுப்பகுதியில் பெருந்தோட்டம் (மரக்கறித் தோட்டம்) செய்திருந்தான். வாரம் தோறும் விற்பனைக்காக மரக்கறி வகைகளைக் கொண்டு செல்லும் போது அவ்வழியில் முகாமிட்டிருக்கும் S.T.F.இனருக்கு இலவசமாக ஒரு பறியில் மரக்கறி கொடுத்துவிட்டுத் தான் போவான். இதன் காரணத்தால் அங்குள்ள S.T.F.இனரை தனது கைக்குள் வைத்துக்கொண்டான்.

பத்மனுக்குப் பழக்கப்பட்ட அதே S.T.F.இனர் தான் அன்றைய தின சுற்றிவளைப்பிற்கு வந்தனர். பத்மனும் தனக்குத் தெரிந்த S.T.F.இனர் வந்திருப்பதால் பயம் இல்லை என்ற நினைவோடுதான்

## சூரியனை நோக்கி

நிம்மதியில்லா இரவுகள்
உறவுகள் தொலைந்து விட
உணர்வுகள்
இறுகப் பற்றி விட்ட ஜீவன்கள்
தூரத்தே நிதமொலிக்கும்
அழுகுரல்கள்
ஓய்வில் சென்றுவிட்ட சந்திரன்
மௌன இரவுகள் தொடர்ந்தும்
பிரக்ஞையற்ற பார்வை
தொலைவு சென்று விட்ட
எண்ணங்கள்
மனம் மட்டும் வரவேற்க
இரவை துரத்தும்
சூரியனை நோக்கி

– சேரனின் தொண்டன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தான். அன்று அதே S.T.F.இனரில் ஒருவன் தான் முதன்முதலில் பத்மனை தெரிவு செய்தான். அதன்பின் ஒன்றன் பின் ஒன்றாக சுருட்டுத் தொழிலாளர் 15 பேரையும் மற்றும் மணல்சேனை, புங்கடிவெட்டைப் பகுதியில் இருந்து கொண்டு வந்தவர்களில் 10 பேரையும் நற்பட்டிமுனைக் கிராம வீடுகளில் தெரிவு செய்யப்பட்ட 10 பேருமாக 35 இளைஞர்களைப் பிடித்துக்கொண்டு அங்கு பிடித்து வைத்திருந்த ஏனைய தமிழர்களின் முன்பாக கைகள் கட்டப் பட்டு கடுமையாக அடித்துச் சித்திர வதை செய்த பின் இராணுவ வாகனத் தில் ஏற்றிக்கொண்டு வாகனம் அக்கரைப் பற்றுப் பகுதியை நோக்கி விரைந்தது. அக்கரைப்பற்று S.T.F. முகாமில் S.T.F. இனர் மனித வேட்டைக்குச் சென்று வந்த களைப்பு நீங்க மதுவும் உணவும் தயார் நிலையில் இருந்தது. மதிய உணவை முடித்துக் கொண்டனர். தம்பி லுவில் சின்னமுகத்துவாரம் கடற்கரை யில் கைது செய்யப்பட்ட அனைத்து இளைஞர்களும் இறக்கப்பட்டனர். அரு கில் இருந்த தென்னந்தோட்டக்கார இளைஞர் ஒருவரையும் வயோதிபர் ஒருவரையும் அழைத்து இரண்டு பெரிய குழிகள் வெட்டப்பட்டது. வெட்டிய பின்பு குழி வெட்டிய இளைஞனது கண்ணும் கையும் கட்டப்பட்டு 20 இளைஞர்களை ஒரு குழியிலும் 16 பேரை இன்னொரு குழியிலுமாக ஒரே நேரத் தில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டது. துப் பாக்கிச் சத்தம் தம்பிலுவில் 30 ஏக்கர் கிராமத்தையே அன்று கதிகலங்க வைத் தது குழி வெட்டிய மற்றொரு வயோ திபர் ஐயாவை கடுமையாகத் தாக்கிய பின் இந்தச் சம்பவத்தை எவருக்கும் சொல்லக் கூடாது என்று சொல்லி மிரட்டி அனுப்பினர்.

ஒரு வாரத்தின் பின் பத்மனுடன் கூட மரக்கறி கொண்டு செல்லும் மூத்த வனை; பத்மனுக்கு பழக்கப்பட்ட; பத்ம னைக் கைது செய்து சுட்டுக் கொன்ற S.T.F. ஆமி 'மூத்தவன், என்ன மாதிரி நம்ம பத்மன் செத்துப்போச்சு; என்ன பாவம்; அது நாங்க செய்யேல்ல. எங்க ளுக்கு தெரிஞ்சா விட்டிருக்க மாட்டோ' என்று சிரித்தபடி கூற மூத்தவனும் 'ஓம் மாத்தையா ஓம். நீங்கள் அதைச் செய்ய மாட்டீங்க எண்டு எங்களுக்குத் தெரியுந் தானே' என்று அவனை மனதுக்குள் திட்டித் தீர்த்தபடி இக்கதி நாளைக்கு நமக்கும்தான் என்ற நினைப்புடன் செல் கிறான்.

**- காந்தன்**

# கிராமிய அரங்கில் ஆற்றுகைகள்

- மு. கனகரட்ணம் -

ஒருவன் தனது இருப்பை வெளிப்படுத்துவதற்காக அமைவது கலை இலக்கியம். கடந்த காலத்தை மறந்து ஒருவன் புதியது படைக்க முடியாது. இதன் அடிப்படையில் நாடகத்தை நோக்குவோம்.

மனிதனது வாழ்கின்ற காலத்துவாழ் நிலையிலிருந்து நாடகங்கள் வெளிப் படுகின்றன. இங்கு ஒருதேசம் வளர்கிறது கருத்துக்களும் உருவாகிறது. அந்த வீச்சின் ஓட்டத்தில் அரங்கிற்கான ஆற்றுகைகள் அமைவது அவசியமாகிறது. தான் வாழ்ந்த காலத்து நிகழ்வுகளைப் பதிவு செய்வதற்கும், மக்களின் சுதந்திர வாழ்வை உருவாக்குவதற்கும் நாடகம் ஒரு ஊடகமாக அமைதல் வேண்டும். நாம் வாழ்கின்ற காலத்துப் பதிவுகளை கலை இலக்கியங்களுக்கூடாகப் பதிவு செய்ய வேண்டிய கடப்பாடு எம்முன் விரிந்துகிடக்கிறது.

எமது இன்றைய சந்ததிக்கும் எதிர்காலச் சந்ததிக்கும் நம்பிக்கையூட்டக் கூடிய கலைப்படைப்புக்களை உருவாக்க வேண்டிய பாரிய கடமை இன்றைய சமூகத்தில் வாழும் அறிவுசார் மானிடர் அனைவருக்கும் உரிய தலையாய கடப்பாடாகும்.

மேற்கூறிய அடிப்படையில் கிராமங்களின் இறந்தகால நிகழ்ச்சிகள் கலைப் படைப்புக்களை நோக்கின் இறந்தகாலத்தில் மூன்றாந்தரச் சினிமாவின் தாக்கத்தால் உந்தப்பட்டவர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்து விடயத்தை கூற முற் பட்டுள்ளார்கள். அவ்வகையில் சில நாடகங்களை வரிசைப்படுத்திக் கூற முடியும்.

இறந்த காலத்தில் சற்று முன் நகர்ந்தால் மனித வாழ்வின் போராட்டம் சார்ந்ததாக படைக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க சமூக ஒடுக்கு முறை களுக்கெதிரான படைப்புகள் ஆற்றுகைக் கலையாக வெளிவந்துள்ளன. அந்தச் சமூகச் சூழலில் வாழ்ந்தவர்களின் ஆழமான சரியான பார்வையே இதற்குக் காரணமாகும். உன்னதமான கலைப் படைப்புக்கள், தேசப் பற்றுடனான தமிழீழத் தேசியத்தின் ஆளுமையோடு வெளிவருவதைக் காணக்கூடியதாக வுள்ளது. அப்படியான படைப்புக்களை நிரற்படுத்தியும் கூறலாம். மேடை நாடகங்கள், தெருவெளி நாடகங்கள் (தெருக்கூத்து), கிராமிய ஆட்டக்கலைகள், (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம்) கிராமங்களில் பங்கெடுக்கின்றன. தமிழீழத் தேசத்தின் தேசிய விடுவிப்பிற்குத் தரமான படைப்புக்களும், அர்ப்பணிப்புக்களும் நடைபெறுவதை இன்று காணக்கூடியதாக உள்ளது.

நாடகம் ஒரு பாட நெறியாகப் பல்கலைக்கழகத்தில் உருவாகியதன் பின்னும் நாடக ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் கிராமத்தில் தேசப்பற்றுடன் வெளிவரும் படைப்புக்களை கருத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. நகரம் சார்ந்தவர்க ளின் படைப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மட்டும் நாடக உலகின் ஆரோக்கியத்திற்கு நன்றன்று. நாடக ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் ஆழமான நேரிய பார்வையோடு நாடகம் பற்றிய ஆய்வுகளை கிராமத்திலிருந்து தொடங்க வேண்டியதன் அவசியம் தெளிவாகிறது.

கிராமத்திலிருந்து நகரத்திற்கு போவதா?

நகரத்திலிருந்து கிராமத்திற்குப் போவதா?

கேள்விகள் இரண்டும் எம் முன் விரிந்து கிடக்கிறது. மேற்குலக நாடகங்க ளைக் கற்க வேண்டியதும் கற்றதை ஆய்வு செய்ய வேண்டியதும் அவசியம் தான். தான் வாழ்கின்ற சமூகவாழ்நிலையிலிருந்து பார்க்கும் பார்வைதான் சிறந்ததாகும்.

ஆக புதிய பரிமாண வளர்ச்சியில் நாடகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கிராமங்களில் கலைஞர்கள் ஒன்றிணைந்து உருவாக்கும் நாடகங்களும் அவற் றிற்கான முயற்சிகளும் பாராட்டுதற்குரியதாகும். தேச நலன் கருதி எடுக்கும் முயற்சிக்கு அனைவரும் தங்களின் பங்கினைச் செலுத்த வேண்டும். இம்முயற் சிகள் கைகூடும் பட்சத்தில் தமிழீழ தேசத்தின் விடுவிப்பும், பண்பாட்டு விடுவிப் பும், சமூகவிடுவிப்பும் என்பது ஒரே காலப்பகுதியில் எமக்குக் கிட்டும். ஆர்வர் களும், ஆய்வாளர்களும் இதை எவ்வாறு அணுகப் போகின்றார்கள் என்பத னைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# அபத்தமான அர்த்தத்தோடு ஓர் ஆக்கிரமிப்பு

"பௌத்த மதம், சிங்கள இனம், இலங்கை மண் ஆகிய மூன்றும் ஒன்று கலந்து 2500 ஆண்டு களைப்பூர்த்தி செய்யும் வரலாறானது நவீன காலத்தின் மிகப்பெரியதும் தனித் துவம் வாய்ந்ததுமான ஒரு நிகழ்வாகும்" என்ற வாக்கியத்துடன் தனது முதற்பக் கத்தை ஆரம்பித்த "விகாரையில் புரட்சி" என்ற நூல் D. C. விஜயவர்த்தனாவால் பௌத்தத்தின் 2500 ஆண்டுகால நினை வைக் குறிக்கும், புத்த ஜெயந்தியை யொட்டி எழுதப்பட்டது. புத்த ஜெயந் தியையொட்டி எழுதப்பட்டாலும், இந் நூலில் "இலங்கை சிங்கள பௌத்தத்திற் காக புத்தரால் தெரிவு செய்யப்பட்டது." என்ற கருத்து வலியுறுத்தப்பட்டாலும் சிங்கள மக்கள் மத்தியில் இது முக்கியத் துவம் பெற்றதோடு ஆழமான தாக்கத் தையும் இது ஏற்படுத்தியது. இதன் விளைவு 1953–ல் இது வெளிவந்த ஒரு சில ஆண்டுகளில் ஏற்பட்ட இனக்கல வரத்திலிருந்து தெரிய வந்தது. இத்த கைய சிங்கள, பௌத்த நிலையை இலங் கையில் உறுதிப்படுத்த எத்தனிக்கும் சிங்கள இனத்தின் அர்த்தமற்ற அபி லாசைதான் தமிழினத்தின் தாயகபூமி மீதான அரக்கத்தனமானதும், சூழ்ச்சி கரமானதுமான ஆக்கிரமிப்பை புரிய வைத்தது.

1956 – ல் இந்நாட்டின் அரசகரும மொழியாக சிங்களமொழி கொண்டுவரப் பட்டதும், "சிறீலங்கா என்ற பெயர்மாற் றமும், தேசியக் கொடியாக வாளேந்திய சிங்கமும், பின்னர் இணைக்கப்பட்ட அரசமரக்கிளையும், எழுபதில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தலும், 1972 – ல் அமைந்து முதலாம் குடியரசு யாப்பில் இரண்டாந்தரப் பிரஜை என்ற அந்தஸ்த் தும், இலங்கையின் முதன்மையான மதம் பௌத்தமதம் என்பதும், இது போன்ற இங்கு குறிப்பிடாத சிங்கள அரசின் ஏனைய செயற்பாடுகளும் மேற் சொன்ன கருத்திற்கு சாட்சியமளித்து உறுதி செய்வதாக அமைகின்றது. இவ் வாறான பௌத்த சிங்கள பேரினவாத உணர்வின் அடித்தளத்தில் இருந்து தமி ழர் தாயகம் மீதான ஆக்கிரமிப்பை அடையாளம் காண்பதுவே இக்கட்டு ரையின் நோக்கம்.

"இலங்கைத் தீவானது மிகப்பழைய காலந்தொட்டே இருவேறு இனங்களால் வெவ்வேறு பகுதிகளில் உரிமை கொண்டாடப்பட்டுள்ளது. இத்தீவின் நடுப்பகுதியும், தென்பகுதியும் வளவை யாற்றிலிருந்து சிலாபம் வரையான மேற் குப் பகுதியும் சிங்கள இனத்தவரால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இத் தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் மலபார் (தமிழர்) மக்களின் ஆட்சிக்குட் பட்ட பகுதியாகும். இவ்விரு தேசிய இனங்களும், இவ்விரு பகுதியினரும் மதத்தாலும், மொழியாலும் வாழ்க்கைப் பண்பாட்டாலும் முற்றிலும் வேறுபட்ட வர்களாவர்'' இது கி.பி. 1796 – ல் இலங்கை பிரித்தானியர் கையில் வந்த போது அதன் முதலாவது தேசாதிபதி யான நோத் பிரபுவின் காரியதரிசியான கிளைகோன் அவர்கள் 1799–ல் வெளி யிட்ட குறிப்பு, இதைவிட வரலாற்று ஆய்வாளர்களான பேராசிரியர் இந்திர பாலா, ரகுபதி, தெரனியாகல ஆகியோர் விஜயன் வந்ததாக கூறப்படும் காலத் திற்கு முன்பே வடக்கு கிழக்கு பகுதிக ளில் இராசதானிகளைக் கொண்ட அரசுகள் இருந்ததாக தொல்லியற்சான்று கள் மூலம் உறுதிப்படுத்துகின்றனர். எப்படியோ இலங்கைத் தீவில் இரண்டு தேசிய இனங்கள் உண்டென்பது உறுதிப்படுத்தப்பட்டதொன்றே.

பிரித்தானியாவின் காலனித்துவத் தின் கீழ் அவர்களின் நிர்வாகத் தேவைக் கேற்ப இவ்விரு இனங்களையும் ஒன்றி ணைத்த புதிய எல்லையொன்று உரு வாக்கம் பெற்றது. பின் காலனித்துவம் காலாவதியாகிப் போன காலகட்டத்தில் (சுதந்திரம் கொடுத்த காலம்) தனது

கு. கவியழகன்

குடியேற்ற நாடுகளின் எல்லைகளைப் பிரித்தானியா தனது நவகாலனித்துவ நலன்களுக்கு ஏற்ப அதன் எல்லைகளை தீர்மானித்தது. இது பிரித்தானியாவின் நோக்கு நிலையில் இருந்து வரையறை செய்யப்பட்டதே தவிர சொந்த நிலத்துக் குரிய மக்களின் இறைமைக்கேற்ப வரை யறை செய்யப்பட்டதல்ல. அவ்வாறான தொரு எல்லையின் உருவகமே இலங்கை என்ற ஒரு நாடு. இன்னொரு நாட்டின் நலன்களின் தேவைக்கேற்ப கூட்டு வாழ்க்கையின் எல்லை பற்றியும் ஆட்சி முறை பற்றியும் எடுக்கப்படும் தீர்மானம் சொந்த நாட்டின் மக்களுடைய வாழ் வியல் தேவைகளை அவற்றின் உரிமை களை திருப்தி செய்ய உதவப்போவ தில்லை என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியது.

பிரித்தானியாவின் நலன்களை பிரதி பலிப்பதற்கு சிங்கள பெரும்பான்மை யினரிடம் ஆட்சி உரிமையை கையளிப் பது சாதகமானது என்ற வகையில் ஒப் படைக்கப்பட்ட ஆட்சி, மறுவளத்தில் சிங்கள இனம் விரும்பும் இலங்கை மீதான ஏகோபித்த உரிமையை நிலை நாட்டுவதற்கும் தமது வரலாற்றுப் பகைவர்களாகக் கருதும் தமிழர்களை ஓரம் கட்டுவதற்குமான சிங்களத்தின் கையில் கொடுத்திருந்தது. அந்நாளில் இருந்து தமிழ்நிலம் மீதான திட்டமிட்ட ஆக்கிரமிப்பை நாம் அடையாளம் காண லாம்.

இவ்வாறு அமைந்த தமிழ் நிலம் மீதான ஆக்கிரமிப்பானது பின்வரும் இலக்குகளைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டதாகும்.

01. ஒரு தேசிய இனத்தின் பண்பாகத் திகழும் தொடர் நிலப்பரப்பைத் துண் டாடி விடுவதன் மூலம் தேசிய இனத் திற்கான அடையாளத்தை அழிப்பது.

02. தமிழர்களைப் பிற்காலத்தில் வந்து குடியேறி, சிதறி வாழும் ஒரு மக்கள் குழுவாக காட்டுவதன் மூலம் சுயநிர்ணய அந்தஸ்த்துக்குள்ளாக்குவது.

03. தமிழ் நிலங்களைத் துண்டாடு வதன் மூலம் கூட்டு வாழ்க்கைக்கான சந்தர்ப்பத்தை ஒழித்து ஒருமைப்பாட்டு உணர்வை அல்லது தமிழ்த் தேசிய உணர்வை இல்லாமற் செய்வது.

04. சிங்கள மொழிக்கும், சிங்களக் குடியேற்ற பிரதேசத்திற்கும் அரசாங்கத் தால் கொடுக்கப்படுகின்ற கல்வி, தொழில் அபிவிருத்தி போன்ற வாய்ப்புக்களால் சிங்களப் பெரும்பான்மை இனத்திற்குள் தமிழரைக் கவர்ந்து இழுப்பதன் மூலம் அவர்களின் மொழி, கலாச்சாரம் என்



www.tamilarangam.net

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பவற்றை இழக்கச் செய்வது. தமிழினத் தூய்மையை (தனித்துவத்தை) அருகிப் போகச் செய்வது அல்லது சிதைப்பது.

05. சிங்களப் பெரும்பான்மை இனத்துடன் சேர்ந்து உருவாக்கப்படுகின்ற புதிய தேர்தல் எல்லைகளால் பாராளுமன்றில் தமிழ்ப் பிரதிநித்துவத்தை வெகுவாக குறைப்பது அல்லது அழிப்பது.

இத்தகைய ஆபத்தானதும் சூழ்ச்சிகரமான திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பேரினவாத அரசுகள் திட்டமிட்ட குடியேற்றங்கள், எல்லை மாற்றங்கள், அபிவிருத்தித் திட்டங்கள், கிராம விஸ்தரிப்பு திட்டங்கள், இனக்கலவரங்கள் என்ற போர்வையின் கீழ் தமது குறிக்கோள்களைச் செயற்படுத்தினர்.

இவ்வாறு தமது குறிக்கோள்களை அடைவதற்காகச் சிங்கள மக்களைக் குடியேற்றுவதோடு நின்றுவிடாது அவ்வாறு குடியேற்றப்படும் பிரதேசங்களுக்கு புதிதாக சிங்களப் பெயர்களைச் சூட்டியும், பௌத்த விகாரைகளைக் கட்டியும், ஏனைய சிங்களத் தொகுதிகளோடு பெருந்தெருக்களை இணைத்தும், புதிய சிங்களத் தேர்தல் தொகுதிகளை உருவாக்கி (சேருவெல, அம்பாறை) அவ்வாறான பிரதேசங்கள் சிங்களவர்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதைக் காட்ட முனைவதோடு அவற்றைப் பாடசாலை வரலாற்றுப் பாடத்தினூடாக மாணவர்களுக்குத் திணிப்பதிலும் அரசு தீவிரமாக ஈடுபட்டு வந்தது. இவ்வாறு சிங்களப் பேரினப்பட்ட குடியேற்றங்கள்.

## குடியேற்றத் திட்டங்கள்

### திருகோணமலை

1. கல்லோயாக் குடியேற்றத் திட்டம்
2. உல்கித்த குடியேற்றத் திட்டம்
3. மாதுறு ஓயா குடியேற்றத் திட்டம்
4. கோமறாங் கடவெல குடியேற்றத் திட்டம்

### அம்பாறை

1. சங்கமம் குடியேற்றத் திட்டம்
2. அம்பலின் ஓயா குடியேற்றத் திட்டம்
3. நாவலாறு குடியேற்றத் திட்டம்

### வவுனியா

1. உலுக்குளம் குடியேற்றத் திட்டம்
2. பாவற்குளம் குடியேற்றத் திட்டம்
3. மாமடுவ குடியேற்றத் திட்டம்
4. மடுக்கந்த குடியேற்றத் திட்டம்

### முல்லைத்தீவு

1. வெலியோயா குடியேற்றத் திட்டம்

### மட்டக்களப்பு

1. நாமல்வத்தை குடியேற்றத் திட்டம்
2. சாகபுர குடியேற்றத் திட்டம்
3. திகாமடு வெல குடியேற்றத் திட்டம்
4. மாகாதிவுல்வெவ குடியேற்றத் திட்டம்
5. கந்தளாய் குடியேற்றத் திட்டம்
6. சேருவேல குடியேற்றத் திட்டம்
7. வெண்டரசபுர குடியேற்றத் திட்டம்
8. பதவியா குடியேற்றத் திட்டம்
9. மொறவெவா குடியேற்றத் திட்டம்
10. மொறவீவா குடியேற்றத் திட்டம்
11. வாசல்கடவெல குடியேற்றத் திட்டம்
12. தெகிவத்தை குடியேற்றத் திட்டம்
13. அல்லை குடியேற்றத் திட்டம்

இவ்வாறான குடியேற்றங்கள் மூலம் சிங்கள அரசு தனது இலக்குகளில் ஈட்டிய வெற்றியினை வடக்கு கிழக்கில் இனவாரியான குடிசனப்பரம்பலில் ஏற்பட்ட மாற்றத்தின் ஊடாக அவதானிப்பது பொருத்தமானதும் சுலபமானதுமாகும்.

மேலுள்ள பட்டியலைப் பார்ப்போமானால் 1921–ல் 100 சிங்களவர்களுக்கு 33 தமிழர்கள் என்றிருந்த இருப்பு 1981–ல் 100:12 என்ற விகிதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாறானதொரு வீழ்ச்சிக்கு இரு காரணங்கள் இருக்க முடியும் என்றே நம்பப்பட்டது.

01. சிங்களவரைவிட தமிழரின் சனத்தொகை வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்க வேண்டும்.

02. தமிழர்கள் பெருமளவில் இப்பகுதியிலிருந்து குடிப்பெயர்வினை மேற்கொண்டிருக்க வேண்டும்.

உண்மையில் இவை இரண்டுமே சரியானதுதான். தமிழர்களின் எழுத்தறிவு விகிதம் கூடுதலாக இருந்தாலும் ஒப்பீட்டளவில் வாழ்க்கைத்தரம் உயர்ந்து காணப்பட்டதாலும் குடும்பக்கட்டுப்பாட்டின் தேவை உணரப்பட்டிருந்தது. இதனால் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவாகவே காணப்பட்டது. குடிப்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்கள தமிழ் இன ஒப்பீடு பட்டியல் 01

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | 100 தமிழருக்கு சிங்களவர் |
|---|---|---|---|
| 1921 | 12,500 | 4,60,000 | 100:03 |
| 1981 | 2,74,600 | 13,65,300 | 100:20 |

மேலுள்ள பட்டியல் மூலம் 1921–ல் 12,500 சிங்களவர் மட்டுமே வடக்கு கிழக்கில் இருந்தனர். இவர்கள் குறிக்கப்பட்ட பிரதேசத்தில் என்றில்லாமல் வியாபார நோக்கங்களிற்காக வடக்கு கிழக்கு முழுவதும் ஆங்காங்கே இருந்தார்கள் என்பதை அதன் தொகையிலிருந்து புரிந்து கொள்ள முடியும். அதாவது, 100 தமிழருக்கு 03 சிங்களவர் என்ற விகிதத்தில் இவர்களின் இருப்பு இருந்தது. ஆனால், குடியேற்றங்களின் பின்னான காலமான 1981 இன் 100 தமிழருக்கு 20 சிங்களவர் என்ற விகிதத்தில் சிங்களவரின் இருப்பு இருந்தது. இவ்வாறான உயர்விற்கு அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களே வழிவகுத்தது என்பதை மேலே உள்ள குடியேற்றப் பட்டியல் மூலம் புரிந்து கொள்ள முடியும். வடக்கு கிழக்கு மாகாணத்தின் நிலைமை இவ்வாறு இருக்க நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட இன விகிதாசார மாற்றத்தை சற்று அவதானிப்போம்.

பெயர்வு என்பதை கவனிப்போமானால் இனக்கலவரம் என்ற போர்வையில் தமிழர்கள் விரட்டி அடிக்கப்பட்டது உண்மை. இது இனவாரியாக சனப்பரம்பலில் பெருமாற்றத்தினை ஏற்படுத்தக்கூடியதல்ல. ஏனெனில், 1981–ற்கு முந்தியகாலப் பகுதியில் வெளிநாடுகளுக்கான பெருமளவு குடிப்பெயர்வுகள் இடம்பெறவில்லை. ஆக விரட்டியடிக்கப்பட்ட தமிழர்கள் வடக்கு கிழக்கு பகுதிகளிலேயே தஞ்சம் புகுந்தனர். இது பெருந்தொகையில் நடைபெற்றிருக்குமேயானால் வடக்கு கிழக்கில் தமிழர்களின் செறிவு விகிதம் அதற்குத் தக்களவு உயர்ச்சியைக் கண்டிருக்கவேண்டும். அவ்வாறு இல்லையென்பதை பட்டியல் 01 எடுத்துக்காட்டுகிறது. ஆனால், மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டு 3 40 000 பேரும் அவர் சந்ததியினரும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். எனவே இவையிரண்டுமே பட்டியல் காட்டும் வீழ்ச்சிக்குக் காரணம் என்ற முடிவுக்கு வரலாமா? அப்

வடக்கு கிழக்கு தவிர்ந்த மாகாணங்களின் சிங்கள தமிழ் இன ஒப்பீடு பட்டியல் 02

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | 100 சிங்களவருக்கு தமிழர் |
|---|---|---|---|
| 1921 | 28,01,700 | 9,59,600 | 100:33 |
| 1981 | 1,07,65000 | 13,31,500 | 100:12 |



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எங்களை நாங்களே ஆளும் உரிமை எமக்கு வேண்டும்

**— ஐ. நா. செயலாளருக்கு மகஜர்**

'சர்வதேச மனித உரிமை சாசனத்தின் காவலர் என்ற முறையில் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் நேர்மையான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து நிரந்தர சமாதானத்தை நிலை நிறுத்த சிறீலங்கா அரசை வற்புறுத்த வேண்டும்' என கோரும் மகஜர் ஒன்றை ஐ. நா. செயலாளருக்கு அனுப்புவதற்காக மட்டக்களப்பில் கையெழுத்து வேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் கையொப்பம் பெறப்பட்டுவரும் இந்த மகஜரில், 'சிறீலங்கா அரசு தெரிவிப்பதுபோல் உண்மையில் இராணுவ நடவடிக்கை புலிகளுக்கு எதிராக நடத்தப்படவில்லை. அரசு எங்களுக்கும், எங்கள் சந்ததிக்கும், எமது எதிர்காலத்திற்கும் ஊறு விளைவிக்கும் யுத்தத்தையே தொடுத்துள்ளது.

யுத்தகளப் பகுதிகளான வடக்கு கிழக்கில் தமிழர் காணாமல் போதல், பாலியல் வல்லுறவுக்குட்படுதல், சித்திரவதை, கொலை ஆகியன நாளாந்த நிகழ்வுகளாகி விட்டமை மட்டுமல்லாது ஏனைய பகுதிகளிலும் தமிழர்களுக்கு எதிரான துன்புறுத்தலும் பயமுறுத்தலும் தவறாமல் இடம்பெறுகிறது.

தமிழர்களாகிய எம்மை புலிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதாக அரசாங்கம் கூறுகிறது. அக்கூற்றை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

எங்களை நாங்களே ஆளுவதற்கும் எங்கள் தலைவிதியை நாங்களே நிர்ணயிக்கவும் உரிமை வேண்டும்' எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படி வருவதாயின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த தமிழர் செறிந்து வாழ்ந்த பிரதேசங்களான புத்தளம், நீர்கொழும்பு மற்றும் காலி, மொறட்டுவ போன்றவை எப்படி சிங்களவரின் நிலமாக மாறியது? அத்துடன் வடக்கு கிழக்கில் தமிழரின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1921ற்கும், 1981ற்கும் இடையில் ஏறத்தாள மும்மடங்காக இருக்க ஏனைய பிரதேசத்தில் வெளியேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கையைச் சேர்த்தாலும் இருமடங்கையும் எட்டவில்லையே! எனவே, பட்டியல் காட்டும் வீழ்ச்சிக்கு மேற்குறித்த இரு காரணங்களையும் விட மூன்றாவதாக ஒன்றிருப்பது தெளிவாகிறது. மூன்றாவது காரணம் 'சிங்கள மொழிக்கலாச் சாரத்திற்குள் தமிழர்களை உள்வாங்கி அரசு திட்டமிட்ட ஒரு இனமாற்றத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது' என்பதைத் தவிர வேறொன்றில்லை என்பதை மேற் சொன்ன விடயங்களில் இருந்து புரிந்து கொள்ளலாம். புத்தளம், நீர்கொழும்பு போன்ற தமிழ் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் சிங்கள மொழியைப் பேசுகின்றவர்களாக இன்று மாறியிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவ்வாறு மாற்றியதன் மூலம் அந்நிலப்பரப்பு சிங்களவரின் நிலமாகி இருக்கிறது. இன்றும் கூட தென் பகுதிகளில் உலாவும் தமிழ் பெயர்களையுடைய தமிழர்கள்கூட சிங்களம் தெரிந்தும் தமிழ் தெரியாதவர்களாக இருப்பதை நாம் காணலாம். இவ்வாறானதொரு மாற்றத்தையே சிங்கள அரசு வடக்கு கிழக்கில் ஏற்படுத்த விளைந்தது.

இவ்வாறு அரசும் பல்வேறு முனையிலான திட்டத்தின் வெற்றியினை நாடளாவிய இனவாரியான குடிசனப்பரம்பலின் மூலம் தெரிந்து கொள்ளமுடியும்.

நாடளாவிய சிங்கள தமிழின ஒப்பீட்டுப் பட்டியல் 03

| ஆண்டு | சிங்களவர் | தமிழர் | 100 சிங்களவருக்கு தமிழர்கள் |
|---|---|---|---|
| 1921 | 28,14,200 | 11,19,700 | 100:40 |
| 1981 | 1,09,85,600 | 26,96,800 | 100:25 |

மேலுள்ள பட்டியலின் மூலம் 1921–ல் 100 சிங்களவர்களுக்கு 40 தமிழர்கள் என்ற விகிதத்தில் இருந்த குடிசன அமர்வு 1981–ல் 100:25 என வீழ்ச்சி கண்டிருப்பதன் மூலம் அரசு தன் சூத்திரதாரமான திட்டத்தில் எந்தளவு தூரம் முன்னற்றத்தைக் கண்டுள்ளது என்பதனை அவதானிக்கலாம். இங்கே 1981–லிருந்து 1997 வரையிலான 19 வருடகால மாற்றம் புள்ளிவிபரங்கள் இல்லாத காரணத்தால் ஆய்விலெடுக்கப்படவில்லை. ஆயினும், இன்று வடக்குக் கிழக்கில் தமிழர்களின் இன விகிதாசாரம் பெரும் வீழ்ச்சியைக் கண்டிருக்கும் என்று நம்பலாம். ஏனெனில் 1981–ன் பின்பே வடக்கு கிழக்குப் பகுதிகளில் துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம், கிராம விஸ்தரிப்புத் திட்டம் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்றது. மணலாறு வெலியோயாவானதும் அண்மையில் அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட்டதும் இதன் பின்பேயாகும்.

அன்று நிலைமை அவ்வாறிருக்க இன்றிருக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கம், திருகோணமலையின் பெரும் பகுதி நிலம் ஏற்கனவே தமிழரிடம் இருந்து பறிபோயிருந்தும் எஞ்சியிருந்த நகர்ப்பகுதியின் ஒரு பிரதேசமான 'லிங்கநகர்' இராணுவத்தால் போலிக் காணி உறுதி மூலம் அபகரிக்கப்பட்டு, தமிழ் மக்களை வெளியேற்றி சிங்கள மக்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தோடு இராணுவம் ஆக்கிரமித்துள்ள மன்னார் – வவுனியா வீதியிலுள்ள பறையனாம்குளத்திற்கு "சப்புமல்புர" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு ரூபவாகினியிலும் அறிவிக்கப்பட்டது. இது சிங்கள இனவாத ஆக்கிரமிப்பு உணர்வின் தொடர்ச்சியினை உறுதி செய்கிறது.

அன்று குடியேற்றம், அபிவிருத்தி, கிராம விஸ்தரிப்பு என்ற அர்த்தம் கற்பிக்கப்பட்டு நடந்த ஆக்கிரமிப்புக்கள் இன்று பயங்கரவாத ஒழிப்பு, புலிகளிடமிருந்த வடக்கு கிழக்கு விடுவிப்பு என்ற அபத்தமான பிரச்சாரத்தோடு நடைபெறுகின்றது. இதுவே காலத்திற்கு ஏற்ப ஏற்பட்ட வேறுபாடு.

எப்படியோ இலங்கை சிங்கள பௌத்தத்திற்கே உரிய நாடு என்ற நிலையை அடைவதற்காக இனவாத அரசுகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கத் தயங்கப் போவதில்லை என்பதையே கடந்த வரலாறும் நடப்பரசியலும் காட்டி நிற்கிறது. இந்நிலையில் தமிழினம் தனது தாயக இருப்பை, தேசிய அடையாளத்தை, தேசிய வாழ்வை தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் ஆக்கிரமிப்பு அரசுக்கெதிரான ஒரு தேசிய பலத்தைப் பெற்று தனது தனித்துவத்தை நிலைநாட்டினால் ஒழிய இது சாத்தியப்படப் போவதில்லை என்பதே இவ் ஆய்வின் முடிவாகக் கொள்ளக் கூடிய யதார்த்தமாகும்.

குறிப்பு:

மூலம் 1921, 1981 சனத்தொகை குடிமதிப்பீடு, மதிப்பீட்டில் முஸ்லீம்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை

# களநிலை யதார்த்தமும் தெற்கில் எழும் விமர்சனங்களும்

சிறீலங்கா இராணுவம் தரைப் படைத் துறை வரலாற்றிலேயே மிகப் பெருமளவிலான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து 150க்கும் அதிகமான நாட்கள் கடந்துவிட்ட நிலையில் மிக முக்கியமான கேள்வியொன்று படைத்துறை ஆய்வாளர்கள் மத்தியிலும், இராணுவ நிபுணர்கள் மத்தியிலும் காத்திரமாக எழுந்துள்ளது.

தனது படைக்கல வலுவையும் ஆளணிகளையும் ஒருமுகப்படுத்தி பலமானதொரு தாக்குதல் சக்தியைப் பிரயோகித்தும் குறிப்பிடத்தக்க வெற்றி இலக்கை இராணுவத்தால் அடைய முடியாமலிருப்பது ஏன் என்பதே அக் கேள்வியாகும்.

சிறீலங்கா இராணுவத்தின் போரிடல் வல்லமையானது ரிவிரெச, சத்ஜெய, எடிபல வரிசைகளில் வைத்துத் தர உயர்ச்சி பெற்றுவிட்டதாக கொழும்பில் கணிப்பீடுகள் வலுப்பெற்றுவிட்ட கட்டத்தில் ஜெயசிக்குறு எதிர்நோக்கும் நெருக்கடிகளும் சிக்கல்களும் புதிய போர் முனையின் தாற்பரியம் பற்றி கேள்விகளை எழுப்பியுள்ளது.

அதிலும், வவுனியாவிலிருந்து மன்னாரிற்கான தரைவழி விநியோகப் பாதையை இராணுவம் பெருமளவு சிரமமின்றி திறந்து கொண்டமையும், விடுதலைப் புலிகள் இராணுவத்தின் இந்த நகர்வை தடுத்துப் போரிடுவதில் பெரும் ஆர்வம் காட்டாமையும் – இராணுவத் தலைமைப்பீடத்தின் தந்திரோபாயமிக்க செயற்பாடுகளின் விளைவே என சிலாகிக்கப்பட்டதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கை தொடர்பாகக் கொழும்பில் எழுந்த பெரும் மனோதிடம் – இன்று வீழ்ச்சிப் போக்கைக் கண்டிருப்பதானது மேற்குறித்த முக்கிய கேள்வியின் அடித்தளமாக அமைந்துள்ளது.

இக்கேள்விக்கு பதிலாகச் சிறீலங்காவில் பல தரப்பிலிருந்தும் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இக்காரணங்கள் யாவுமே – களநிலையின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் அல்ல. ஓரளவு மாத்திரமே விளங்கிக் கொண்டமையாக உள்ளன.

இப்பதில்களைப் பிரதானமாக இரண்டு வகைகளுக்குள் அடக்கி விட முடியும்.


ஒன்று சிறீலங்காவின் பிரதான எதிர்க்கட்சிகளாலும், இராணுவத்தை கிஞ்சித்தேனும் விமர்சிக்க விரும்பாத படைத்துறை ஆய்வாளர்களிடமிருந்தும் முன்வைக்கப்படுவது. இது 'ஜெயசிக்குறு' படை நடவடிக்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கெல்லாம் ஒரேயொரு இலக்காக சந்திரிகா அரசாங்கத்தை சுட்டிக்காட்டும் காரணமாகும்.

'ஜெயசிக்குறு' நடவடிக்கையின் முக்கிய இலக்கு அரசியல் ஆதாயம் மிக்கதெனவும் இந்த அரசியல் ஆதாயத்துக்காக இராணுவம் பணயம் வைக்கப்படுவதாகவும் கூறும் இக்காரணம் இராணுவ நடவடிக்கையின் சகல பாதகங்களையும் தனது பதிலுக்குள் அடக்கிவிடுகின்றன. இம்முதலாவது பதிலை முன்வைப்பவர்கள் எவருமே இராணுவத்தை அதன் செயற்பாடுகளை முற்றிலும் விமர்சிக்காமலிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இராணுவம் சந்திக்கும் இழப்புக்களை, சேதங்களை வைத்து சந்திரிகா அரசாங்கத்தை எவ்வளவு தூரம் சாட முடியுமோ அவ்வளவு தூரம் சாடி வருவதென்பது இந்த முதலாம் வகையினரின் முக்கிய நோக்கமாகும்.

இந்த வகையில் இவர்கள் வெளியிடும் கருத்துக்கள் உண்மைத் தன்மையைக் கொண்டிருந்தாலும் கூட போர்க்கள நிலையின் யதார்த்தம் அவர்களால் உணரப்படாமலிருப்பது சுட்டிக்காட்ட வேண்டியதாகும்.

இரண்டாவது காரணத்தை முன்வைக்கும் பதில்களை அளிப்பவர்கள் பெரும்பாலும் கொழும்பைத் தளமாகக்



சிறீலங்கா இராணுவத்தின் போரிடல் வல்லமையானது ரிவிரெச, சத்ஜெய, எடிபல வரிசைகளில் வைத்துத் தர உயர்ச்சி பெற்றுவிட்டதாக கொழும்பில் கணிப்பீடுகள் வலுப்பெற்றுவிட்ட கட்டத்தில் ஜெயசிக்குறு எதிர்நோக்கும் நெருக்கடிகளும் சிக்கல்களும் புதிய போர் முனையின் தாற்பரியம் பற்றி கேள்விகளை எழுப்பியுள்ளது.

★★

கொழும்பைத் தளமாகக் கொண்ட படைத்தரப்பு ஆய்வாளர்கள் வெளியிடும் கருத்துக்கள் வெளிநோக்கில் இராணுவத்தை அதன் தந்திரோபாயங்களை விமர்சிப்பவையாக இருந்தாலும்கூட இராணுவத்தின் அடுத்த செயற்பாடுகளை நடத்தக்கூடிய அல்லது ஆலோசனை கூறும் வகையிலான விமர்சனங்களாக இருப்பதை ஆழமாக நோக்கும் எவருமே புரிந்து கொள்ளமுடியும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட படைத்துறை ஆய்வாளர்களும் வெளிநாட்டுச் செய்தியாளர்களுமாவர்.

இவர்கள் முதலாவது காரணத்தைச் சார்ந்த பதிலை அளிக்கும் அதே வேளை— இராணுவத்தையும், அதன் தந்திரோபாயத்தையும் தமது விமர்சனங்களில் சேர்த்துக்கொள்கின்றனர்.

'ஜெயசிக்குறு'படை நடவடிக்கையின் நகர்வுகள் பற்றியும் தந்திரோபாயங்கள் தொடர்பாகவும் இராணுவ ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை இவர்கள் முன்வைக்கின்றனர்.

இந்தத் தரப்பினர் அதாவது கொழும்பைத் தளமாகக் கொண்ட படைத்தரப்பு ஆய்வாளர்கள் வெளியிடும் கருத்துக்கள் வெளிநோக்கில் இராணுவத்தை அதன் தந்திரோபாயங்களை விமர்சிப்பவையாக இருந்தாலும்கூட இராணுவத்தின் அடுத்த செயற்பாடுகளை நடத்தக்கூடிய அல்லது ஆலோசனை கூறும் வகையிலான விமர்சனங்களாக இருப்பதை ஆழமாக நோக்கும் எவருமே புரிந்து கொள்ளமுடியும்.

இந்த வகையில் 'ஜெயசிக்குறு' நடவடிக்கையில் இராணுவம் சந்திக்கும் இழப்புக்களை, தோல்விகளை வைத்து இராணுவத்துக்கு இவர்கள் வழங்கும் விமர்சனங்கள் யாவுமே இராணுவத்தின் நலனை அடிப்படையாகக் கொண்டவை என்பது உணரக்கூடியதாகும்.

ஜெயசிக்குறு நடவடிக்கையில் இராணுவம் குறிப்பிடத்தக்கதொரு வெற்றி இலக்கை எட்ட முடியாமலிருப்பது பற்றிய கருத்துக்களாக, விமர்சனங்களாக உருவாக்கம் பெறுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் இந்த இரு தரப்புக்களுமே தம்மால் முன் வைக்கப்படும் கருத்துக்கள் எதனால் தோற்றம் பெற்றன என்பதை சிந்தித்தாலும் உணர்ந்தும் அதனை வெளிப்படுத்தத் திராணியற்றே இருக்கின்றனர்.

'ஜெயசிக்குறு' படைநடவடிக்கையை விடுதலைப் புலிகள் எதிர் கொள்ளும் போர்முறை புலிகளின் போரியலில் காணப்படும் வளர்ச்சி இராணுவநகர்வை தடுக்கும், நெருக்கடிக்குள்ளாக்கும் உத்திகள் போராளிகளின் மனோதிடம் போன்ற காரணிகளே.

'ஜெயசிக்குறு' நடவடிக்கையை தாமதத்திற்குள்ளாகும், நெருக்கடிக்குள்ளாகும் உண்மையான பதில்களை இந்த இரு தரப்பாரும் உணர்ந்துகொள்ளும் வரை சந்திரிகா அரசாங்கம் தனது ஆட்சி நாடகத்தை இடையூறின்றி தொடர்ந்த வண்ணமேயிருக்கும்.

# சந்திரிகாவின் காண்டங்கள் கண்டங்களைத் தாண்டுமா?

நாம் ஆட்சிக்கு வந்தால் தற்போது நிலவும் இனப்பிரச்சனை, யுத்தப் பிரச்சனை, பொருளாதாரப் பிரச்சனை, மனித உரிமைப் பிரச்சனை என எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்து இலங்கையை வளங்கொளிரும் நாடாக்கி இங்கு ஒரு புதிய சரித்திரத்தையே எழுதிக்காட்டுகிறேன் என பண்டாரநாயக்காவின் புத்திரி சந்திரிகா அம்மையார் தெரிவித்து ஆட்சியைக் கைப்பற்றினார்.

ஆட்சிக்கு வந்த இவர் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற முயன்றாரோ இல்லையோ தனது ஆட்சிக்காலத்தில் புதியதொரு சரித்திரத்தை எப்படியும் எழுதி வைத்துவிடவேண்டும் என விரும்பினார் போலும்.

இதற்கேற்றவாறு சிறீலங்காவில் நிலவும் முக்கிய பிரச்சனையாகத் திகழும் இனப்பிரச்சனை இதனுடன் தொடர்புபட்ட விடுதலைப் புலிகளை கையாளும் பிரச்சனை எவ்வாறு அமைய வேண்டுமெனத் திட்டமிட அறப்படித்த மூவருக்கு தனித்தனிக் காண்டத்தை எழுதக்கொடுத்தார்.

இவர்களில் பேராசிரியர் பீரிஸ் உடனடியாகவே தனது அரசியல் காண்டத்தை எழுதும் செயற்பாடுகளில் இறங்கினார். தெரிவுக்குழு அதிகாரப்பரவலாக்கல், அரசியலமைப்புச் சீர்திருத்தம், தீர்வுப்பொதி, பிராந்தியசபை இணைப்புப் பிரிப்பு வாக்கெடுப்பு என்று எத்தனையோ சித்து விளையாட்டுக்களைக் காட்டினார்.

நீண்டகாலம் பிடித்தாலும் ஒருவாறு தனது காண்டம் சிறப்பாக முடிந்துவிடும் கட்டத்தில் இருக்கிறது. எமக்கு விசுவாசமாக செயற்படும் தமிழ் குழுக்களையும் பிடித்து தீர்வை அமுலாக்கி விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்திவிட்டால் எல்லாம் சரி எனது பகுதி வெற்றி என நினைத்தார். நடந்தது என்ன?

இதற்கிடையில் வெளியுறவுக் காண்டத்தை எழுத கதிர்காமர் தொடங்கினார். நாடு நாடாய் சென்றார். தலைவர்கள் தலைவர்களாய் சந்தித்தார். எடுத்து எடுத்து ஓதினார். எப்படியும் புலிகளுக்கு சர்வதேசத்தில் இருக்கும் செல்வாக்கை மழுங்கடித்தால் அவர்களை சர்வதேச ரீதியில் பலவீனப்படுத்தினால் மற்ற இருவரையும் விட தான் கெட்டிக்காரன் என்பதை நிரூபித்துவிடலாம் என முயன்றார்.

ஆனால், ஜெனரல் ரத்வத்தையாரோ என்ன இருந்தாலும் யுத்தகாண்டமே இறுதிக்காண்டம் இதன் மூலம் நானே நடித்து நானே எழுதி சிங்கள மக்களின் சப்புமல் குமார ஆகிறேன் எனக் கூறி அரசியல் தீர்வோ, பேச்சு வார்த்தையோ வெளிநாட்டுக்கொள்கைகள் எல்லாவற்றையும்விட யுத்தமே சிறந்த முறை எனக்கூறி இராணுவ முன்னெடுப்பை விஸ்த்தரித்து வருகிறார்.

இந்த மூவரும் தங்கள் பகுதியே சிறந்தது எனப் போட்டா போட்டி.

ஆனால் பேராசிரியரின் பகுதி சிங்கள இனவாதிகளாலேயே தூக்கி எறியப்பட தமிழ் குழுக்கள் மனங்கோண முழுமக்கள் ஆதரவையும் இழந்து ஆட்சிக்கே வேட்டுவைக்கும் நிலைக்கு வந்தது.

கதிர்காமரின் பகுதியோ ஒரு மாதிரி அமெரிக்காவைக் கொண்டு சாதனை படைத்த போதிலும் மறுவளமாக அரசிற்கு எதிர்க்கட்சி மூலமான இந்திய அணுகுமுறை பற்றி நெருக்கடிகளைத் தோற்றுவிக்கக் கூடிய சாத்தியக்கூறு மட்டுமல்லாமல் அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்கல் செய்துள்ள வழக்கும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

ரத்வத்தையின் யுத்தகாண்டமோ அகலக்கால் வைத்துப் பல்வேறு இராணுவ நடவடிக்கையில் தொடங்கி ஜெயசிக்குறுவில் சிக்கி நிற்கின்றது.

ஆக மொத்தம் சரித்திரம் முடியும் காலம் அதாவது ஆட்சிக்காலம் முடிய ஓரிரு வருடங்கள் முடியும் தறுவாயில் அவர் செயற்படுத்த முனைந்த காண்டங்கள் எல்லாம் அவருக்கு கண்டங்களாகிவிட்டது.

இந்த நிலையில் அவர் எவ்வாறு சரித்திரத்தை முடிக்கப்போகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

— **து. சி. ராகவன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையின் பொருண்மியத்தை பேரினவாதம் ஏப்பமிடுகின்றது

இன்று போருக்கான பெருந் தொகை நிதி ஒதுக்கப்படுவது போல, அன்று – அரச பொருளாதாரத் தின் கணிசமான பகுதி சிங்களக் குடி யேற்றங்களை நிறுவுவதற்கே ஒதுக்கப் பட்டிருந்தது.

"விவசாய அபிவிருத்திக்கான குடி யேற்றத்திட்டங்கள் என்று உலகிற்குச் சொல்லப்பட்டாலும், உண்மையில் அவை, தமிழர் நிலங்களை சிங்களவர் களுக்கு உடமையாக்கும் பேரினவாதத் தின் நில அபகரிப்புத் திட்டங்களே யாகும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் ஜே. ஆர். அரசு பல்லா யிரம் கோடி ரூபாய்களை செலவிட்டி ருந்தது. இதுவும் தமிழர் நிலத்திலேயே நடந்தது. சிங்களவர்களே குடியமர்த்தப் பட்டனர். உத்தியோகபூர்வக் குடியேற் றங்களை ஒருபுறம் நடாத்திக்கொண்டு அத்துமீறிய வகையிலும் சிங்களவர்களை தமிழர் நிலத்தில் குடியமர்த்தியது.

நில அபகரிப்பே குடியேற்றங்களின் உண்மையான நோக்கம் என்பதால் அங்கே விவசாய அபிவிருத்தி பெருமள வில் நடைபெறவில்லை. அரசின் சலுகை பெற்ற மனிதர்களாக அரச பொருளா தாரத்தில், குடியேறிகள் வாழ்க்கை நடாத்துகின்றனர்.

வட – கிழக்கில் சிங்களவர்களைக் குடியமர்த்தியது போல மலையகத்திலும் சிங்களவர்களைக் குடியமர்த்தியது.

தமிழர்களின் உழைப்பில் தங்கிருந்த பெருந்தோட்டப் பொருளாதாரத்தை சிங்களவர் கைகளுக்கு மாற்ற பேரின வாதம் விரும்பியது. நுட்பமாகவும் – கவனமாகவும் மேற்கொள்ளப்பட வேண் டிய தேயிலை – இறப்பர் தோட்ட வேலை களில், வேலை அனுபவமற்ற சிங்களத் தொழிலாளர்களையும் அரசு ஈடுபடுத் தியது. அதனால், உற்பத்தித் தரம் வீழ்ச்சி யடைந்தது. அதேவேளை, அங்கு குடி யேற்றப்பட்ட சிங்களவர் நலன்பேண தோட்ட வருமானத்தில் கணிசமான பகுதி வழங்கப்பட்டது. இந்தச் சலுகை தமிழ்த் தொழிலாளர்களுக்கு வழங்கப் படவில்லை.

பெருந்தோட்டப் பொருளாதாரத்தை சிங்களவரின் கைகளுக்கு மாற்ற விரும் பிய பேரினவாதத்தின் முயற்சி, தோட் டப் பொருளாதாரத்தைச் சிதைத்தது. இது அரச பொருளாதாரத்தையும் பாதித்தது.

வட – கிழக்கு மாநிலத்திற்கு அப் பால் எந்த ஒரு பெரிய குடியேற்றத்திட் டங்களும் இதுவரை நடாத்தப்பட வில்லை என்பது இங்கே சுட்டிக்காட்டத் தக்கது. காடுகளின் பெரும்பகுதி தென் பகுதியில் இருந்தும் சிங்களவர்களைக் குடியேற்றவென அரசு அவற்றைப் பயன் படுத்தவில்லை.

குடியேற்றங்களை நிறுவும் போதும் பெருமளவு அரச பொருளாதாரம் செல விடப்பட்டது. குடியேற்றங்களைப் பராம ரிக்கவும் பெருமளவு அரசபொருளா தாரம் செலவிடப்படுகின்றது.

தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவர் கைகளில் சென்றடைந்ததில் இருந்து பேரினவாதத்தின் விருப்பங்களை நிறை வேற்றுவதிலேயே அரச பொருளாதாரத் தின் பெரும்பகுதிசெலவிடப்பட்டு வரு கின்றது. இலங்கைத் தீவைச் சிங்கள பௌத்தர்களின் தனியுடைமையாக மாற்றுவதே பேரினவாதத்தின் இறுதி இலட்சியம்.

இலங்கைப் பொருண்மிய வளர்ச்சிக் குத் தடையாக இனப்பிரச்சனை உள்ளது. இனப்பிரச்சனையைத் தீர்த்துவிட்டு தீவின் பொருண்மியத்தை அபிவிருத்தி செய்து, புதியதொரு சகாப்தத்திற்குள், இலங்கையை இட்டுச் செல்ல வேண் டும் என்ற நோக்கம் பேரினவாதத்திற்கு இல்லை. எத்தனை யுகங்கள் சென்றா லும் இத்தீவில் இருந்து தமிழினத்தைத் துடைத்தெறிந்து, இதைச் சிங்களவர் நாடாக்க வேண்டும் என்ற மகாவம்ச இலட்சியத்துடனேயே சிங்கள அரசு இன் றும் உள்ளது.

கடந்த 50 வருடங்களாக சட்ட வடி வங்கள் ஊடாகவும் – சாதுரிய அரசி யல் செயற்பாடுகள் மூலமாகவும் தமிழி னத்தின் தேசிய பலத்தை ஒடுக்க பேரின வாதம் எடுத்த நடவடிக்கைகள் அதற் குப் பெரிய வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவில்லை. மாறாக, தமிழர் தேசிய உணர்வை வளர்த்துவிட்ட கைங்கரியத் தையே அவை செய்துமுடித்துள்ளன.

இப்போது, ஒரு தீவிரமான போர் மூலம் தனது பேரினவாத இலட்சியத்தை அடைந்துவிட பேரினவாதம் துடிக்கின் றது. இரண்டு இராணுவங்கள் மோது வதுபோல, இனப்போர்பூதாகாரவடிவம் எடுத்துவிட்டது. இதனால், போருக்கென தனது பொருண்மியவளத்தையே சிங்கள அரசு அடமானம் வைத்துவிட்டது.

போரை நடாத்த அரசு செலவிடும் பணம்தான் பாதுகாப்புச் செலவீனத் திற்குள் அடங்குகின்றது. ஆனால், போரால் ஏற்பட்ட மொத்த நட்டம் வேறு கணக்கில் உள்ளது.

உதாரணத்திற்கு 1996–ம் ஆண்டின் பாதுகாப்புச் செலவினம் அதாவது போரை நடாத்தமட்டும் அரசு செல விட்ட பணம் சுமார் ஐயாயிரம் கோடி ரூபாய்கள். ஆனால், போரால் – அந்த வருடத்தில் அரச பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் 22 ஆயிரம் கோடி ரூபாய்கள் என மார்க் நிறுவனம் என்ற பொருளியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் போருக் குச் செலவிடும் பணத்தைப் போன்று நான்கு மடங்கு பணம் போரின் விளைவு களால் அழிந்து போகின்றது.

நஷ்ட ஈடுகொடுத்தல் – நிவாரணம் வழங்கல் – புனர்நிர்மாண வேலைகள் செய்தல் போன்ற போரின் விளைவுகள் காரணமாக செலவிடப்பட்ட பணமும், அத்துடன் போர் காரணமாக இழக்கப் பட்ட சுற்றுலாத்துறை – வெளிநாட்டு முதலீடு போன்ற வருமான இழப்புக்க ளும் இந்த வகைக்குள் அடங்கும்.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியால் சிறீ லங்காவின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படும் வருமான இழப்பை உதாரணத் திற்கு இங்கே பார்ப்போம். சுற்றுலாத் துறையால் மட்டும் சிறீலங்கா அரசிற்கு வருடாந்தம் 1150 கோடிரூபாய்கள் வரு மானம் கிடைக்கின்றது. இதைவிட இத் துறையில் சுமார் 75,000 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இதுதவிர, உல்லாச் பயண விடுதிகள் மீதான வரு மான வரி வருமானம் – ஊழியர்களின் வருமானவரி வருமானம் – எயர்லங்கா விமான சேவை மூலம் வருமானம் – விமானநிலையக் கட்டண வருமானம் – விமானங்களுக்கான எரிபொருள் விற்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பனை வருமானம் – மிருகக்காட்சிச்சாலை, தொல்பொருட்காட்சிச்சாலை வருமானம் – கைவினைப்பொருட்களின் விற்பனை வருமானம்... என்று பல்வகை துணை வருமானங்கள் உண்டு. உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சிகண்டால் மேற்குறித்த உபவருமானங்களும் வீழ்ச்சியடையும். இதேபோன்று வெளிநாட்டு முதலீடுகள் பாதிக்கப்பட்டாலும் அதன் உபபிரிவுகளின் வருமானங்களும் வீழ்ச்சியடைந்து தேசிய பொருளாதாரத்தை நலிவடையச் செய்து அரசபொருளாதாரத்தை படுகுழியில் தள்ளிவிட்டுவிடும்.

இனப்போரு தீவிரமடைந்த 1983–ம் ஆண்டிலிருந்து கடந்த ஆண்டுவரை பாதுகாப்புச் செலவினம் என்ற பெயரில் – போரை நடாத்தவென மட்டும் – சிங்கள அரசு, மொத்தம் இருபத்திநான்காயிரம் கோடிரூபாய்களை (24,000 கோடி) செலவிட்டுள்ளது.

இதேவேளை, இந்த 14 வருடகாலப் போராலும் மற்றும் போரின் அனைத்து வகை விளைவுகளாலும் சிறீலங்கா அரசானது மொத்த இழப்பாக இரண்டு இலட்சத்து முப்பத்துநான்காயிரம் கோடி ரூபாய்களை (2,34,000) இழந்துள்ளது.

சமுத்திரத்தை ஒத்த இந்தப் பணத்தை இலங்கைத் தீவின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தியிருந்தால் இத்தீவு எத்தகைய செழிப்புடன் இருந்திருக்கும்!

1978–ம் ஆண்டிற்குப் பின்னர் எந்த ஒரு பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் சிங்கள அரசு செய்யவில்லை. நிதியின்மைதான் காரணம்.

போர்த்தேவைகளை ஈடுசெய்யும் நிதியைப் பெறுவதற்காக இப்போது, தனது இயற்கை வளங்களையும் – மக்கள் நலன் பேணும் அரச நிறுவனங்களையும் வெளிநாட்டாருக்கு விற்க அரசு முடிவெடுத்துள்ளது.

சிறீலங்காவின் பாரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ரெலிகொம் கடந்தவருட பாதுகாப்புச் செலவினத்தை ஈடுசெய்யவென விற்கப்பட்டது என்ற தகவலை, பட்டிவீரக்கோன் என்ற பாராளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

இதேவேளை, எப்பாவெல என்ற இடத்தில் 50 ச.கி. மீற்றர் பரப்பளவில் உள்ள பொஸ்பேற் கனிவளத்தை, சந்திரிகா அரசு விற்பனை செய்யவிருக்கின்றது. புல்மோட்டையில் உள்ள இல்மனைற் கனிவளத்தை வெளிநாட்டிற்கு விற்றுக்கொண்டிருப்பது நாம் அறிந்ததே.

இந்தவருட (1998) போர்ச் செலவினத்தை ஈடுசெய்ய எயர்லங்கா நிறுவனத்தையும் – தபாற்பகுதி சேவைகளையும் – கொழும்பு துறைமுகத்தையும் தனியாருக்கு விற்கும் திட்டத்துடன் சந்திரிகா அரசாங்கம் உள்ளது என்று ஐ.தே. கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இன்னும் ஒன்று, இரண்டு வருடத்தில் விற்பதற்கென்று ஒன்றுமில்லாமல் சிங்கள அரசு ஓட்டாண்டி நிலையில் இருக்கும் என்று சிங்களத்தின் எதிர்க்கட்சிகள் கண்டன விமர்சனம் செய்கின்றன. இலங்கை ஒரு சிங்கப்பூராக எதிர்காலத்தில் மாற்றமடையும் என்று, 1970–களில் பொருளியல் நிபுணர்கள் ஆருடம் கூறியிருந்தனர். ஆனால், ஆசியாவின் நோயாளியாக இலங்கையை – சிங்கள ஆட்சியாளர்கள் – உருமாற்றி வருகின்றனர். பேரினவாதத்தின் குதிரையாக சிறீலங்கா அரசு இருக்கும்வரை, இந்த நிலையை மாற்றமுடியாது. ★

**இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை; ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப் படுத்துகின்றது. மனித உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன.**

**- தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

# பகற்கனவு

சிறீலங்காவில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை தன் சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி ஒடுக்குவதில் முனைப்புடன் செயற்பட்டவர்களில் தர்மிஸ்டவாதி எனத் தன்னைத்தானே புகழ்ந்துகொண்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனா குறிப்பிடத்தக்கவர்.

அவருக்கு முன்னர் பதவிவகித்தவர்களை எல்லாம் தூக்கிச் சாப்பிடக் கூடிய விதத்தில் எழுச்சி பெற்ற சிங்கள பௌத்த இனவாதத்தின் கொடுமுடியாகத் தன்னை வகித்துக் கொண்டு பேய் ஆட்டம் காட்டினார்.

அது காரணமாகவே சாதாரண மனிதர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளைக் கூட தமிழ் மக்களுக்கு வழங்குவதைப் பொறுத்துக் கொள்ள முடியாது எந்தப் பிசாசுடனாவது கூட்டுச் சேர்ந்து தமிழர்களின் உரிமைப் போராட்டத்தினை நசுக்குவோம் என்று கூறி அதனைச் செயலிலும் காட்டினார்.

இதன் விளைவாகவே பல நாடுகளிடம் இராணுவத் தளபாட உதவிகளும், இராணுவத் துறையைச் சார்ந்த பயிற்சிகளும் அப்போது தொடக்கம் சிறீலங்காவுக்குக் கிடைத்து வந்தன.

அன்று தொடக்கம் இன்று சந்திரிகா ரத்வத்தை கூட்டம் வரை கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு மேலாக சிறீலங்கா அரசுகளும் அவர்களின் இராணுவமும் தமிழர்களை அழித்தொழிப்பதிலும் அவர்களது உரிமைப் போராட்டத்தினை பயங்கரவாதப் பிரச்சனையாக வெளிக்காட்டி தம் அதிகார வயிற்றினை நிரப்புவதிலுமே குறியாக உள்ளன.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் படைத்தளபதி என்று ஆட்கள் மாறினாலும் அவர்களின் செயற்பாடுகளும் நோக்கமும் மாறவில்லை என்பது வரலாறு எமக்குக் கற்றுத்தரும் பாடம்.

எப்போதாவது தாம் பலவீனப்படும் போதோ வெளிநாட்டு உதவிகளில் ஏற்படும் அழுத்தங்களின் போதோ அல்லது சர்வதேசப் பிரமுகர்களுடன் கூடிக்கதைத்துக் குதூகலிக்கும் போதோ தமிழர்கள் பிரச்சனை தீர்ப்பது பற்றியும் பேச்சு வார்த்தை என்ற சங்கதி பற்றியும் எதையாவது தெரிவிப்பதும் பின்னர் அதனை மறந்துவிடுவதும் சிறீலங்காவின் இயல்பாகவே நடந்து வரும் விடயமாகும்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்தில் சாதாரண துணை நடிகராக சிறீலங்கா இராணுவத்தின் நாடக அரங்கத்தினுள் நுழைந்த அமெரிக்கா இன்று ஜனாதிபதி சந்திரிகா காலத்தில் கதாநாயகனாகி கிறீன்பரேட் மூலம் சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளில் பெரும் பங்கு வகிக்கின்றது.

சிங்கள ஆக்கிரமிப்பாளர்களும், அவர்களின் ராஜாக்களும் தமிழர்களை அழித்தொழிக்க ஒரு முனைப்பட்டுக் கொண்டிருப்பது ஒன்றும் புதினமானதல்ல.

அப்படியானால் எது புதினம் என்கிறீர்களா? சிங்கள சந்திரிகா அரசு தமிழர்களுக்குத் தீர்வுப் பொதி என்ற வகையில் எதையோ தரப்போவதாக கொழும்பில் உள்ள தமிழர்கள் சிலர் சொல்லுகின்றார்களே அது தான் வேதனை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் வாழ்வைச் சீரழிக்கும் இன்னொரு சுரண்டல்

ஐரோப்பிய நாடுகளில் தமிழர்களின் வேலை வாய்ப்புக்களின், எதிர்காலம் எப்படியிருக்கும்? இவை ஐரோப்பிய ஒன்றியத்திற்குட்பட்டதோர் நாட்டில் கிடைக்கப்பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்டதாகும்.

தொழிற்சாலை ஒன்றில் பயிலுனர் வேலைக்கு இடம்தேடி ஓர் தமிழர் சென்றார். அங்கு பயிலுனர் வேலை காலியாக இருந்தும் அந்த இளைஞரை வேலையில் சேர்க்க தனக்கு விருப்பமில்லை என்று கூறிவிட்டார் உரிமையாளராகிய ஐரோப்பியர். அதற்கு அவர் கூறிய காரணம் ஓர் தமிழரை இனியும் வேலைக் கமர்த்த தான் தயாராக இல்லை என்பதாகும். உடனடியாக அவருடன் இது பற்றிப் பேச முடியவில்லை. பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவரைச் சந்தித்து, "தமிழர் ஒருவரை எதற்காக நிராகரிக்கிறீர்கள்?'' என்று கேட்டபோது அவர் பின்வரும் காரணங்களைக் கூறினார்.

அ) என்னிடம் முன்னர் ஓர் தமிழ் இளைஞர் வேலை செய்தார். இவர் சொன்ன வேலையைச் செய்யக்கூடியவர்தான்; ஆனால் நவீன தொழில் நுட்பம் பற்றி எந்தவிதப் பிரக்ஞையுமற்றவர். அவர் மூலம் பெற்ற அனுபவம் தமிழர் தொடர்பாக என்னிடம் தவறான அபிப்பிராயத்தையே உருவாக்கிவிட்டிருக்கிறது.

ஆ) இங்குள்ள இயந்திரத்தில் ஒவ்வொரு பத்து உற்பத்திப் பொருளும் வெளியானதும் இயந்திரத்தையும்; பொருளின் அளவில் உண்டாகும் வேறுபாட்டையும் நுட்பமாகக் கவனிக்க வேண்டும். காரணம் ஒரு மணி நேரத்துக்குள்ளேயே உற்பத்திப் பொருட்களில் மெல்லிய வேறுபாடு தோன்றிவிடும். இந்த வேறுபாடு வராமல் பொருட்களைத் தயாரிக்க வேண்டுமென அந்தத் தமிழருக்கு எத்தனையோ தடவைகள் விபரித்தேன். இறுதிவரை அவரால் எனது ஆவலை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இ) பின் ஒருநாள் அவருடைய ஆசிரியரை அழைத்து, நான் எதிர்பார்க்கும் தரம்பற்றி விளக்கிக்கூறும்படி கேட்டேன். அவரும் பல நூல்களையும், புகைப்படங்களையும் காட்டிக் கடுமையாக முயற்சித்தார். பயன்தரவில்லை. உண்மையில் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றிய அனுபவம் என்பது வெறுமனே கல்வியால் மட்டுமல்ல வாழ்ந்த வாழ்வாலும் பெறப்பட்டிருக்க வேண்டியதாகும். அதை அந்தத் தமிழரிடம் என்னால் காண முடியவில்லை. இதனால் தமிழரை வேலைக் கமர்த்த அஞ்சுகின்றேன்.

ஈ) இறுதியில் ஓர்நாள் அவரை வேலையிலிருந்தும் நீக்கினேன். அவ்விதம் நீக்கியபோது, "இதுபற்றி ஏதாவது ஆட்சேபம் தெரிவிக்கிறீரா?'' என்றும் வினவினேன். அவரோ சிரித்தபடியே சென்றுவிட்டார். உண்மையில் அவரை நான் வேலையிலிருந்து நீக்கியது ஓரளவு சட்ட விரோதமானதே! ஆனால் அவரோ அது குறித்து கடுகளவும் கவலைப்படவில்லை. வேலைத்தலச் சட்டங்கள் பற்றி அவருக்கு எந்தவித அக்கறையும் இல்லையென்பதையும் இறுதியாகவே அறிந்து ஆச்சரியமடைந்தேன்.

உ) பணிவு, கீழ்ப்படிவு, உரிமைக்காக நியாயங்கேட்காமை, எதற்கும் சிரித்து அங்கீகரிப்பது போன்ற அடிமைத்தனமான சிந்தனைகள் இன்றும் தமிழரிடமிருந்து மாறவில்லை. ஆகவேதான் நான் தமிழரை வேலையில் சேர்க்க விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.

ஒரு தமிழரை வைத்து எல்லாத் தமிழரையும் எடைபோட முடியாததல்லவா? என்ற கேள்வியையும் அவரை நோக்கிக் கேட்டேன். "உண்மைதான் இருந்தாலும் அதே அனுபவத்தை இன்னொரு முறையும் பெற்றுக்கொள்வதைவிட தவிர்த்துக் கொள்வது நலம் என்று எண்ணுகிறேன்'' என்றார். இது உண்மையான அனுபவமே. ஆகவேதான் பெயர்களும் இடங்களும் குறிப்பிடப்படவில்லை.

இந்த விடயத்தை அங்குள்ள தமிழர்களுடன் பகிர்ந்து கொண்டபோது அவர்கள் இதை ஏற்கவில்லை. தமிழர்களில் பெரும்பான்மையோர் வேலைத் தலங்களில் வேலை செய்து வருவதாகவும் அவர்களை வேலைக்குச் சேர்க்க பல தொழிற்சாலைகளில் விரும்புவதாகவும் கூறினார்கள். அவர்களுடன் சில தொழிற்சாலைகளுக்குப் போனபோது, அங்கு பெரும்பான்மையோர் தமிழர்களாகவே தெரிந்தனர். பார்த்த தொழிற்சாலைகளில் ஓர் தொழிற்சாலை சற்று வித்தியாசமாகக் காணப்பட்டது. அங்கு முப்பத்திரண்டுபேர் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருந்தனர். முதலாளி மட்டும் ஐரோப்பியர்; மற்றவர்கள் அனைவருமே வெளிநாட்டவர்.

அவர்களில் 90 விழுக்காடு தமிழர். காரணம் என்ன? விசாரித்த போது பின்வரும் தகவல்களைத் திரட்ட முடிந்தது.

01. ஐரோப்பியர் அந்தத் தொழிற்சாலைக்கு வேலைக்கு வருவதில்லை; வந்தாலும் ஒரு மாதம் கூட ஒழுங்காக நிற்பதில்லை.

02. மேலதிக வேலை நேரமென்றாலும் தமிழர் மலர்ந்த முகத்துடன் வேலை செய்கின்றனர்.

03. தொழிற்சாலை விதிமுறைகள் சம்பந்தமாக அவர்கள் எந்தக் கேள்வியும் கேட்காது நன்றியுணர்வுடன் கடமையாற்றுகிறார்.

04. உடலின் ஒரு பகுதியை மட்டுமே தொடர்ந்து பயன்படுத்தும் இவ்வேலைகளை தமது உடலுறுப்புகள் சிதைவது பற்றி தெரிந்திருந்தாலும்; மாற்றுவழி இன்றி ஒரு வேலையிலேயே நீண்டகாலம் நிலைத்திருப்பது தமிழர்களே. அவர்களில் பெரும்பாலானோர் பணத் தேவையால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருப்பதால் இவை பற்றி அதிகம் சிந்திப்பதில்லையென்றும் தெரிகிறது.

இவ்வித காரணங்களின் அடிப்படையில் உடலியற் கூறுகளைப் பழுதுபடுத்தக்கூடிய இந்த உற்பத்தி நிறுவனம் தமிழர்களாலேயே தொடர்ந்தும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். வேலை புரிய முடியாத நிலையில் வட்டிக் கடன்காரருக்கும் பயந்துவாழும் ஒரு இளைஞரையும் இந்த ஆய்வின் பொருட்டு சந்தித்துக் கதைக்க முடிந்தது.

யாவற்றையும் தொகுத்து நோக்கிய போது ஓர் உண்மை விளங்கியது. அகதிகளின் வாழ்வு ஐரோப்பிய அரங்கில் பலத்த சுரண்டலுக்குள்ளாகியிருப்பதை இலகுவாக அறிய முடிந்தது. இது குறித்து சிறந்த விழிப்புணர்வை புலம்பெயர் தமிழரிடையே ஏற்படுத்த வேண்டிய பணி அரிச்சுவடியில் நிற்பதும் தெரிந்தது.

**- கி. செ. துரை**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிரிப்பூ

எனக்கு வீதியில் பயணிப்பதற்கு பெரும் சிரமமாக இருக்கிறது. புழுதியை முகத்தில் அப்பி ஒப்பனை செய்து, அழகு பார்த்து, தன் காதலைத் தெரியப்படுத்தும் வன்னிமண் வீதியில் பயணிப்பது தான் எனக்கு கடினமாக இருக்கிறது என்று எண்ணிவிடாதீர்கள். என்னவோ தெரியவில்லை. இப்பவெல்லாம் பிரயாணம் செய்வதென்றால் மனம் பெரிதாகச் சங்கடப்படுகுது. வீதியில் போகும் தெரிந்த சனம் எல்லாம் பேயறைந்த முகங்கள் போல 'உம்' என்று முகங்களை வைத்துக் கொண்டு போவதெனக்கு துண்டாப்பிடிக்கவில்லை. ஏன் இப்படிப் போகிறார்கள்? இந்த வினாவே என் மனதில் பூதாகரமாக வியாபித்திருக்கிறது. சனமெல்லாம் இழக்கக் கூடாத தொன்றை இழந்திட்டினம். என்ன இருந்தாலும் இதை இழந்திருக்கக் கூடாது.

முன்பெல்லாம் யாழ்ப்பாண வீதிகளில் போனால், நேரெதிரே தெரிந்த முகங்கள் சந்திக்கையில், பற்பசை விளம்பரங்களில் சிரிப்பது போல அழகான புன்னகைகளை சிந்தி, நாலு கதை பேசி, சுகம் விசாரித்து விடைபெற்றுச் செல்லும் போது மனதிற்கு எவ்வளவு இதமாக இருக்கும். என்னையறியாமலேயே, புதிதாக ஒரு தெம்பு அடிமனதில் பிறக்கும். அந்த உசாருடன் போன அலுவல்களை கச்சிதமாக செய்து முடித்து வீடு திரும்பினால், அந்த நாளில் வாழ்ந்ததன் பயனை அனுபவித்ததன் மனநிறைவு.

இப்ப எல்லாம் சிரிப்புக்கள் தொலைந்த முகங்களுடன் தெரிந்த சனமெல்லாம் தங்கள் மட்டில் போகிறார்கள். நான் மாங்குளம் போய்வரும் வேளைகளில் எனது வீட்டிலிருந்து மாங்குளம் வரைக்குமான வீதியில் நன்கு அறிமுகமான பத்துப்பேர்களாவது என் கண்ணில் அகப்படுவார்கள். நான் சிரிப்பதைத் தன்னும் அசட்டை செய்யாமல், முகங்களில் ஒரு ஈயாட்டம்கூட இல்லாமல், என்னை விலத்திக் கொண்டு போவார்கள். ஒன்றோ இரண்டு பேர் சாட்டுக்கு முகத்தை ஒரு ஆட்டு ஆட்டிவிட்டு என்னைக் கடந்து போகையில் மனம் 'சுள்' என்றிருக்கிறது.

எனக்கு ஒரு சந்தேகம். இப்ப, நான் யாழ்ப்பாணத்தில் இருந்ததைவிட உடம்பால் சற்று மெலிந்து கறுப்படித்துப் போய் இருக்கிறன். அது தான் இவர்கள் என்னை அடையாளம் காணவில்லையோ? எதுவாயினும் என்னுடைய சிரிப்பு மாறாதுதானே. பிறக்கும் போதே ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு விதமான சிரிப்புக்கள் அமைந்து விடுகின்றன. அந்தச் சிரிப்பை வைத்தே அடையாளம் காணலாம். அப்ப, ஏன் இவர்கள் இப்படிப் போகிறார்கள்? உலகத்தில் ஒருவரைப்போல, ஏழுபேர் இருக்கினமாம். இவர்களும் அப்படித்தான் இருக்குமோ? மொத்தத்தில் இவை அனைத்தும் என் மனத்தை சமாதானப்படுத்த நான் எடுத்துக்கொண்ட போலி நியாயங்கள் என எனக்குப்படுகிறது. நிச்சயமாக இவர்கள் வேறுயாருமல்ல, எனக்கு நன்கு பரிச்சயமானவர்கள்தான். நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், சனம் எதை இழந்திருந்தாலும் இதை இழந்திருக்கக் கூடாது. மருந்துக்குத் தன்னும் சிரிப்பைக் காணமுடியாத வீதியில் போவது எனக்கு அந்நிய தேசத்தில் பயணிப்பதான உணர்வை ஏற்படுத்துகிறது.

இப்ப நான் அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. நட்சத்திரங்கள் இல்லாத இருண்ட வானம் போல, சிரிப்பு அடியோடு வற்றிப்போன முகங்களைக் காணும் போது எனக்கு ஏதோ செய்யும். முகம் கொடுத்து கதைப்பதற்கு மனம் மறுக்கும். சிரிப்பில்லாத முகம் ஒரு முகமோ?

'மனிதனின் உள ஆரோக்கியத்திற்கு சிரிப்பு நிறையப் பங்களிப்புச் செய்கிறது' என்று எப்பவோ படித்த ஞாபகம். வாழ்க்கை வளமாயிருக்க மனம் விட்டுச் சிரித்தல் அரிய மருந்து. வேண்டிய நேரங்களில் வேண்டியளவு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படியில்லாவிட்டால், ஒரேயடியாகச் சிரித்துக்கொண்டிருக்கின்ற பொல்லாத வியாதி பிடித்துவிடும். கவலையை மறைப்பதற்கு சிரிப்பை விட சிறந்த மருந்து இருப்பதாய் எனக்குத் தெரியவில்லை.

இப்படியொரு ஆசை எனக்கு நெடுநாளாக இருக்கிறது. உங்களுக்கு அது விபரீத ஆசையாகத் தோன்றலாம். ஆனால் எனக்கு அதுவே இலட்சியம் போலவும். என்னவென்றால், சாகும் வரை சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும் என்பதுதான் முடியாத காரியமென்று நினைப்பீர்கள். அதற்காக கவலையில்லாமல் இருத்தல் என்று பொருள்படாது. கவலையில்லாத மனிதன் இருந்தால் சொல்லுங்கோ? கவலையிருந்தாலும் அதை மறந்து சிரித்து வாழுதல் வேண்டும்.

சிலவேளைகளில், என்னை நினைத்து, நானே ஆச்சரியப்படுவதுண்டு. எனக்கும் சிரிப்பு என்ற செயலுக்குமிடையில் அன்னியோந்நிய உறவு இழையோடியிருப்பதையிட்டு, பறந்துபோன பள்ளிப் பருவ பக்கங்களை புரட்டிப்பார்க்கிறனான். பள்ளிப்பருவம் அரும்பிய வேளையில், எல்லாமே அந்நியமாகத் தெரிய, வேற்றுக்கிரக வாசிபோல, அந்தப் பாலர் வகுப்பில் எனது முதல் நாள் அரங்கேறியது. நான் விழிகள் பிதுங்க, மிரண்டு போய்நிற்க,

"ஏன் ராசா உம்மாண்டியாய் நிக்கிறீங்கள்? எங்க, சிரியுங்கோ பார்ப்பம். சிரிச்சா பிள்ளைக்கு சொக்காதருவன்" என்று–

– எனது அம்மாவின் வயது மதிக்கத்தக்க ரீச்சர் சொல்ல, சொக்கா மீது கொண்ட விருப்போ என்னவோ கூச்சத்தையும் மேவி உதடுகளைப் பிரித்து நான்கு பற்களையும் காட்டினேன். அது தான் நானறிய பலபேர் முன்னிலையில் நான் சிரித்த கன்னிச் சிரிப்பு. அன்றிலிருந்து இன்றுவரை என்னிடம் சிரிப்புக்குக் குறைவில்லை. அதே காலப்பகுதியில் தான் இப்ப எனக்கு நெருங்கிய நண்பனாகிவிட்ட தயானந்தனும் பாடசாலைக்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு 'ரீச்சர்' எவ்வளவோ சொல்லிப் பார்த்தா. அவனோ ஒருபோதும் சிரிப்பதாக இல்லை. அவன் தனது பிஞ்சுப் பற்களை காட்டமாட்டேன் என்று அடம் பிடித்துக் கொண்டு நின்றான். வடதுருவம் தென்துருவம் போலதான் அவனும், அவனது சிரிப்பும். இறுதியில், 'ரீச்சர்' தயானந்தன் வாய்க்குள் முட்டை வைத்திருக்கிறான் என்று சொல்லிவிட நாங்கள் சும்மா விடுவோமா? 'முட்டை' என்று நாமமே சூட்டிவிட்டோம்.

அதே தயானந்தன், இன்றைக்கு இரண்டு பிள்ளைகளுக்கு தகப்பனாகிவிட்டான் என்றால், அதுவும் சிரிப்புச் செய்த மாயை விளையாட்டு என்றே சொல்ல வேண்டும். பாடசாலை வாழ்க்

சேந்தன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைக்கு முற்றுப்புள்ளி இடும் நேரம். நாம் ஏ.எல். பரீட்சைக்கு எம்மை ஆயத்தம் செய்துகொண்டிருந்த காலம் அது. அப்போது ஏ.எல் யூனியன் ஒன்றுகூடல் நிகழ்வு நடந்தது. பாடசாலை வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வுகளில் அதுவும் ஒன்று. அன்றைய நாள், மாணவன், மாணவி என்ற வேறுபாடின்றி, எல்லோரும் கலந்து, மகிழ்ந்துஉணவு உண்டு விபரிக்க முடியாத விதங்களில் நிலையெடுத்து, நிழற்படம் நிறையப்பிடித்து இனிதாகப் பிரிந்து செல்லும் நாள். பாடசாலை வாழ்க்கை ஆரம்பித்த காலம் தொட்டு மனதளவில் தேங்கிக் கிடந்த பல விடயங்களுக்கு அன்றைய நாள் வடிகாலும் கூட. வாழ்க்கையில் மீண்டும் வரமுடியாத அந்த நாளில்தான் நான், நண்பன் உட்பட எல்லோரும் மண்டபத்தில் கூடியிருந்தோம். இறக்குமதி செய்யப்பட்ட இசைகள் காதைப் பிளக்க, குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குபவர் சொல்லும் கட்டளைகளை ஏற்று அதற்கேற்ப நடித்தோ, ஆடியோ, பாடியோ வினோதமாக நிகழ்த்திக் காட்டுதல் வேண்டும். அந்தக் குலுக்கல் தெரிவில் தயானந்தனும் தப்பித்துக் கொள்ளவில்லை. “இங்கு கூடியிருக்கும் மாணவிகளில் ஒருத்தியைத் தெரிவு செய்து, அவளை உமக்குப் பிடித்தமானவள் என கருதி, யாரும் அற்ற வீதியில் ஒரு நாள் நேர் எதிரே சந்திக்கையில் உமது விருப்பத்தை எவ்விதம் வெளிப்படுத்துவீர் என நிகழ்த்திக்காட்டும்” என நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியவன் மூச்சைப்பிடித்துக் கூறிமுடித்தான்.



எப்படி வெளிப்படுத்துவான்? இப்படியான வேளைகளில் சிரிப்புக்கலை தான் கை கொடுக்கும். அவன் சிரிப்பு என்றே என்ன என்பதற்கு அர்த்தம் தெரியாதவன். கரையில் போட்ட மீனாக திணறப் போகிறான் என்றே நான் நினைத்தேன். நான் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக அங்கு வந்திருந்தவர்களில் அழகில் தேறக்கூடிய ஒருத்தியைத் தெரிவு செய்து எதிரே நிறுத்தினான். மறுகணம் அவளை உற்று நோக்கினான். நோக்கியவன் கண்கள் ஆயிரம் கதைகள் சொல்ல ஒரு சிரிப்புச் சிரித்தான், மின்னல் வெட்டுப்போல. அட்டகாசமாகத் தான் இருந்தது. மண்டபமே எங்கள் சிரிப்பில் அதிர்ந்தது. பின்பு நடந்த கதையைச் சொல்லவா வேண்டும். அந்தச் சிரிப்போடு மலர்ந்த காதல் நீண்டு கொண்டுபோய் திருமணத்தில் முட்டி மோதி, முடிவில் இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையுமாகி விட்டான்.

★★

எவரும் சிரித்துக் கொண்டிருப்பதை நன்கு இரசித்துக்கொண்டிருக்கும் பழக்கம் எனக்குச் சின்ன வயதிலிருந்தே இருக்கிறது. நான் அதிகமாக இரசிப்பது, எனது அம்மாவின் சிரிப்பைத்தான். அது உண்டியலில் காசு கிலுங்குவது போல ஒருவிதமான சிரிப்பு. ஆனால், நான் சின்னவனாக இருந்த போது மாமா சிரித்தால் அடி வயிற்றைக் கலக்கும். அது என்ன சிரிப்பு! ‘கிபீர்’ குண்டடித்து கட்டிடம் இடிந்து விழுகிறமாதிரிச் சிரிப்பார். நான் அதிர்ந்தே போயிடுவேன். முழு நிலாக்காலங்களில், எங்கள் வீட்டு முற்றத்தில் அம்மாவும் அயல் அட்டைச் சனங்களும் கூடி ஊர்க்கதைகள் பேசி கொக்களம் கட்டிச் சிரிப்பார்கள். நான் அம்மாவின் மடியில் புதைந்து போய் பார்த்துக் கொண்டிருப்பேன். விபரம் தெரிந்த வயதில் மதகுகளில் நண்பர்களுடன் கூடிப்பம்பல் அடித்துச் சிரிப்பது எனது வழக்கமாயிற்று. விபரம் தெரிந்த தென்பதைவிட, வாலிபப் பருவத்திற்குக் கட்டியம் கூறும் மீசை அரும்புகின்ற வயது என்பதே பொருத்தமாக இருக்கும். என்னைத்தேடி எனது சகாக்கள் வீட்டிற்கு வரும் போது, நான் இல்லாவிட்டால், அம்மா ‘அவன் எங்கையாவது நாலு பேர் சிரிச்சுக் கொண்டிருக்கிற இடத்தில் நிற்பான். போய்ப் பாருங்கோ’ என்று சொல்லி அனுப்புவா.

அக்காவும் நானும் சின்னாக்களாக இருக்கும் போது நல்லாச் சிரித்து விளையாடுவோம். அக்கா பருவம் அடைந்த பின்னர் இயல்பாகச் சிரிப்பதைக் குறைத்துக்கொண்டு விட்டாள். அல்லது குறைத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டு விட்டாள். சிலவேளை, வீட்டில் இருக்கும் போது, எங்கள் உரையாடல்களில் கலந்துகொண்டு சிரித்தாலும் வெளியில் புறப்பட்டால் சிரியா மடந்தையாகி விடுவாள். இதற்கு அக்காவில் ஏற்பட்ட பருவ மாற்றங்கள் மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியாது. எங்களுடைய ஆச்சியும் ஒரு விதத்தில் முற்றாகத் தடைக்கல்லாக இருந்திருப்பாள் என்று எனக்கு இப்போது விளங்குகிறது. “பொம்பிளை சிரிச்சாப் போச்சு பொயிலை விரிச்சாப் போச்சு” இவ்விதம் அக்கா பெரிய பிள்ளையான பிற்பாடு சிரித்தால் ஆச்சி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்க்குள் முணுமுணுக்கத் தொடங்கி விடுவா. தமிழ் மொழியில் உள்ள முதுமொழிகளுக்கு மெருகூட்டி உயிர்பிச்சை கொடுப்பதற்கு ஆச்சியைக் கேட்டுத் தான். எனினும் முதுமை முழுமையடையு முன்னர் ஆச்சி மூச்சை நிறுத்திக் கொண்டதனால் அக்காவிற்கு கடும் இறுக்கத்திற்குள் இருந்து விடுபட்டதான உணர்வை ஓரளவு ஏற்படுத்தி இருக்கும் என்றே நான் நினைக்கிறேன்.

சிரிப்புடன் எனக்கிருந்த ஐக்கியமானது, கதைப் புத்தகங்களை விட 'ஜோக்' புத்தகங்கள் மீதே அதிக நாட்டத்தை ஏற்படுத்தியது. எனது மேசை



யில் ஒன்றோ, இரண்டோ 'ஜோக்' புத்தகங்கள் இருந்தே ஆகும். எனக்குப் படித்துக் கொண்டிருக்கும் போது 'மூட்' குழம்பிற்றென்றால், ஜோக் புத்தகத்தை எடுத்து, ஒரு பக்கத்தைப் பிரித்து அதில் உள்ள ஜோக் துணுக்குகளை வாசித்தேன் என்றால் எல்லாம் சரியாகிவிடும். எனக்குக் கோபம் கொதி நிலையை அடைகின்ற வேளைகளில் இதே முறையைத் தான் கைக்கொள்ளுவேன். அல்லது முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் நின்று நிசப்தமாக சிரிப்பேன். யாழ்தேவி இராணுவ நடவடிக்கை போல கோபம் இடைநடுவில் வந்த வேகத்தில் திரும்பிப் போய்விடும். இதன் காரணமாக எனக்குக் கோபம் வருவதினால் வீட்டில் உள்ள வாய்பேசாத ஜீவன்களுக்கோ, பொருட்களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை.

யாரும் குழந்தைகள் சிரித்தபடி இருக்கும் படங்களைக் கண்டால் விடமாட்டேன். எவ்வளவு படங்களைச் சேர்த்து வைத்திருந்தேன். அதை நினைத்தால் வயிற்றைப்பத்தி எரியும். நான் இடம் பெயர்ந்த போது அவற்றை விட்டுவிட்டு வந்தது எனக்குப் பெரிய இழப்பு, இருந்தாலும் வரும்போது அவற்றில் ஒன்றை எடுத்து வந்ததும், இன்னுமொன்றை எரித்து இல்லாமல் செய்ததிலும் எனக்குப் பரமதிருப்தி. எனது படச்சேகரிப்பில் சந்திரிகா அம்மையாரின் சிரித்த முகத்துடனான படங்களையும் நான் விட்டுவைக்கவில்லை. அம்மையார் ஆட்சிக்கு வந்ததோடு ஆரம்பித்த சமாதான காலத்தில், கொழும்புப் பத்திரிகைகளில் வந்த சிரித்த முகத்துடனான நீல நிறச்சேலையில் கையசைத்த வண்ணம் காட்சி தரும் அவவின் படங்களை வெட்டி வைத்திருந்தேன். விண்ணில் இருந்து சமாதானத் தேவதையாக வானப் பெண்ணொருத்தி மண்ணுக்கு வந்ததாகவே அப்படத்தைப் பார்க்கும் போது என் நெஞ்சத்தில் தோன்றும். அப்போது எங்கள் வீட்டிற்கு வந்து போகிறவர்களுக்கு அம்மையாரைப்பற்றி குட்டிப் பரப்புரை செய்வது எனது நாளாந்த கடமைகளில் ஒன்றாகிவிட்டது. மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததோடு அந்தப் படத்திற்கு சனியன் பிடித்தமாதிரி. அந்தப் படமும் நானும் கீரியும் பாம்பும் போலாகிவிட்டோம். தமிழினத்தை பழிவாங்கப் போகும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில், அவர்களின் குருதியை உதடுகளில் அப்பி, வெள்ளை முலாம் பூசிய பற்களைக் காட்டி அரக்கி ஒருத்தி சிரிப்பதாக நாளடைவில் அப்படம் எனக்குத் தோற்றமளிக்கத் தொடங்கியது. வெறுப்பின் உச்சக்கட்டமாக, இடம்பெயர்ந்து வருவதற்கு முதல்நாள் அந்தப் படத்தை எரித்து அழித்து விட்டேன். அதேவேளை, வரும்போது தலைவரின் சிரித்தபடி காட்சி தரும் படம் ஒன்றை மறக்காமல் கையோடு எடுத்து வந்துவிட்டேன். இப்ப என்னிடம் அந்தப் படமும், 'மண்ணுக்காக' படத்தில் தாய் இரு கைகளிலும் ஏந்திவைத்திருக்கச் சிறுமி ஒருத்தி சிரிப்பாளே, அந்தச் சுவரொட்டியும், வேறுசில படங்களும்தான் கைவசம் இருக்கிறது. நான் நித்திரையால் எழும்பும் போது சிரித்த முகத்தில் முழிக்க வேணும் என்பதற்காகவே, நான் படுத்தெழும்பும் இடத்திற்கு எதிரே உள்ள சுவரில் ஒரு வெள்ளைக்கார குழந்தை சிரித்தபடி இருக்கிற 'பிரேம்' போட்ட படம் ஒன்றை மாட்டி வைத்திருக்கிறேன்.

★★

யாழ்ப்பாணத்தில் சிரிப்புக் கலைகளஞ்சியமாகத் திகழும் ஓர் இடத்தைச் சொல்லவும் என்று என்னைக் கேட்டால், பல்கலைக்கழகம் என் மனக்கண்ணில் விரியும்; சிரிப்புக்குப் பஞ்சமில்லாத இடம்; கவலைகளை மறந்து மணிக்கணக்காகச் சிரித்துக்கொண்டே இருக்கலாம்; புதுப்புது வகையான சிரிப்புக்களின் ஊற்றும் கூட. அங்கு நிலாவரைக் கிணறுபோல இலகுவில் சிரிப்பின் ஆழத்தை அறிந்து கொள்ள முடியாது. நான் அங்கு படித்த இரண்டு ஆண்டுகளில் அனுபவரீதியாக, சிரிப்பு பற்றி நிறைய விடயங்கள் அறிந்து கொண்டேன். இரண்டு செயல்களுக்கும் பற்கள் அவசியமாகிறது. ஒன்று சிரித்தல், மற்றது உணவை அரைத்து உண்ணுதல். சிரிப்பதும் சுவையான உணவை இனங்கண்டு உண்ணுவதும் கலைகளே. எனவே தான் பல்லினால் செய்கின்ற இரு கலைகளின் சிறப்பிடமாக விளங்குவதால் 'பல்கலைக்கழகம்' எனப் பெயர் வந்ததோ என பொழுதுபோக்காக பொருள் காண்பதுண்டு. இங்கு தேவைகளுக்கேற்ப பயன்படுத்தப்படும் சிரிப்புக்களும் வேறுபடும், சிறப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமாயின் வழிந்து போகும் சிரிப்பை கையாளுவதையும், ஒருவனையோ ஒருத்தியையோ வாழ்க்கைத் துணையாக்குவதற்கு ஒருவிதமான சிரிப்பையும், வேறுதேவைகளுக்கெனின் வேறொரு சிரிப்பு புழக்கத்தில் உள்ளதையும் நான் பல தடவைகளில் கண்டிருக்கிறேன். வெகுமதிகள் கருதாத சிரிப்புக்கள் ஏராளம்.

ஒவ்வொருவரும் சிரிக்கும் தன்மையை வைத்து அவர்களது குணநலன்களை இனங்கண்டு கொள்ளலாமாம். இது சிரிப்பு பற்றிய ஆராய்ச்சியில் எனக்கு கடைசியாகக் கிடைத்த தகவல். எனது ஆராய்ச்சியில் பரிசோதனைக் களமான பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். பல்வேறுபட்ட பிரதேசங்களில், இருந்து வருபவர்களை ஒரேயிடத்தில் சந்திக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டதனால், அவர்களின் சிரிப்புக்களையும் குணநலன்களையும் ஆராய்ந்து கண்டறிவதில் எனக்கு கடினமெதுவும் இருக்கவில்லை. மிகக் குறுகிய காலத்தில் ஒவ்வொருவரும் சிரிக்கும் சிரிப்புக்களை இன்னவகை என்றும் அவற்றுக்கு இன்னன்ன குணநலன்கள் உண்டென்றும் துல்லியமாக கூறக்கூடிய திறமையை வளர்த்துக் கொண்ட எனக்கு பெரும் சங்கடமாகிப் போய்விட்டது. 'லெக்சர்' இல்லாத நேரங்களில் 'ஸ்ரோன் பென்சில்' என்னை சுற்றி ஒரு கூட்டமே அமர்ந்துவிடும். "இவள் சிரிப்பது எந்த வகைச் சிரிப்படா? ஆள் எப்படியடா? என்று ஆளையாள் மாறிக் கேட்கத் தொடங்கி விடுவார்கள். முடிவில், சிரிப்புக்கலை பற்றி ஆயிரம் பக்கங்களுக்குக் குறையாமல் ஆராய்ச்சிக் கட்டுரை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுதும்படி எல்லோரும் வேண்டுகோள் விட்டளவுக்கு நான் சளைக்காமல் கூறியவைகளில் அனேகமானவை அவர் களது நினைப்புடன் பொருத்தப்பாடாய் அமைந்திருக்கிறது என நினைக்கிறேன்.

சிரிப்பு பற்றிய நீண்ட ஆராய்ச்சியில், எனது மூளை இருவகையான சிரிப்புக் களை இனங்கண்டு பிரசவித்திருக்கிறது. முன்னர் சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் நிலவிய பனிப்போர் மாதிரி, தமக்கிடையே மனங் களில் வெறுப்புகளை வளர்த்துக் கொண்டே முகங்களில் வெளிக்காட்டா மல், உத்தியோகபூர்வமான விடயங்க ளில் மட்டும் உறவுகளை வைத்துக் கொண்டு, சினேகபூர்வமான உறவுக ளைத் தூண்டிவிடும் வகையினருள் ஒரு வர் தாழ்ந்து போகிறார் எனில் மற்றவர் அவரைப் பார்த்து ஒருவிதமான நசல் சிரிப்பு சிரிப்பார். அந்த வகைச்சிரிப்புக்கு நான் சூட்டிய பெயர் 'பனிச்சிரிப்பு'. மற்றையது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள் சிரிக்கும் சிரிப்பு. அந்தவகைச் சிரிப்புக்கு 'சந்திரி காச் சிரிப்பு' எனப் பெயர் வைத்துள் ளேன். இந்த இரண்டுவகைச் சிரிப்பு சிரிக்கிறவர்களுடன் பழகுவதற்கு நான் தயங்குவதுண்டு. அவர்கள் பற்றியதான நீண்ட உறவுக்குப் பின்னரே அவர்களு டன் உறவுகளை நிலைப்படுத்தி கொள் கிறேன்.

சிரிப்பு பற்றியதான கவலை ஒன்று எனக்கிருக்கிறது. ஆச்சி, அப்பு மாதிரி அந்தச் சிரிப்புச் சிரிக்கும் வயது வரை நான் எல்லோரும் உயிரோடு இருப் போமா? அவையள் சாப்பிட்ட மர வள்ளிக்கிழங்குக்கு எங்கட கோதுமை மா ஈடாகுமா? அந்தச் சிரிப்பு அதுதான் பொக்கைவாய்ச் சிரிப்பு. அதுவரை இருந்து விட்டால், சிரிப்புக் கலையில் முழுமையடைந்த மனநிறைவு எனக்கி ருக்கும். பொக்கைவாய்ச் சிரிப்பு என்ற தும் ரதியக்காவின் ஆச்சிதான் என்கண் முன்னே வந்து நிற்பாள். ரதியக்காவின் வீட்டிற்குப் போனால் முதலில் தரிசிப் பது ஆச்சியைத்தான். எப்படி ஆச்சி என் றால், கூப்பிட்டு அருகில் இருத்தி, ஒரு பகிடிக் கதை சொல்லி, பற்கள் இல்லாத வாயால், கடைவாயினால் வெற்றிலைச் சாயம் வழிய ஆச்சி சிரிப்பது அழகாக இருக்கும்.

தொண்ணூறு காலப் பகுதியில், முல்லைத்தீவை இராணுவம் புகுந்து ஆக்கிரமித்ததோடு அவர்கள் யாழ்ப் பாணம் வந்து குடியேறினார்கள். அப்ப தான் ரதியக்கா குடும்பம் எனக்கு அறி முகமானது. எல்லோருடனும் சேர்ந்து பழக, விருந்தினர்களை உபசரிக்க, இக் கட்டான வேளைகளில் தானே முன் வந்து உதவ என எல்லாவற்றிற்கும் ரதி யக்காவுக்கு நிகர் அவவேதான். உலக விடயங்களை விளங்கப்படுத்தும்போது ஆசிரியராகவும், மருத்துவம் பற்றியதான உரையாடலின் போது வைத்தியராகவும், அரசியலை அலசும் போது அரசியல் வாதியாகவும், மாறிவிடுவா. ரதியக்கா மூலமாகத்தான் நாட்டு நடப்புக்களையும், உலக விடயங்கள் பலவற்றையும் தெரிந்து கொண்டேன். அவவின் பேச்சில் எப்படி யாவது ஒரு முறை தன்னும் அவர்களின் சொந்த இருப்பிடத்தின் அருமை பெருமைகள் பற்றி வந்து போகும். அடி பட்டு மாறாத பழம் நோவாக இடப் பெயர்வின் தாக்கம் அவவிடம் இருப் பதை பல சந்தர்ப்பங்களில் நான் உணர்ந்திருக்கிறேன். தான் அதிகம் சிரிக் காமல், மற்றவர்களை வயிறு குலுங்கச் சிரிக்கவைப்பது ரதியக்காவின் சிறப்பி யல்பு. அதுவே அவவின் மீதான மதிப்பை மேலும் வளர்த்தது. ரதியக்காவின் கடைக்குட்டி புவனா, வலுத்த சுட்டி. புவனாவுக்கு விடுகதையில் தனிப்பிரியம். எனக்குச் சிரிப்பு எப்படியோ அப்படி அவளுக்கு விடுகதை.

நான் அங்கு போகும் ஒவ்வொரு முறையும் குறைந்தது பத்து விடுகதை களாவது கேட்பாள்; நான் தெண்டித்து ஐந்து விடுகதைகளுக்காவது விடை சொல்லிப்போட்டிடுவேன். மிகுதிக்கு அவளிடமே விடைகளைக் கேட்டறி வதுண்டு. நான் விடை சொல்ல முடி யாமல் விழிபிதுங்க நின்றால் அவளுக்கு ஒரே கொண்டாட்டம். பிஞ்சுப் பற் களால் மழலைச் சிரிப்பைப் பொழி வாள். அவள் சிரிப்பைச் சுவைப்பதற் காக, நான் சில விடுகதைகளுக்கு விடை தெரிந்தாலும் தெரியாததுபோல நடித் திருக்கிறேன். ஒட்டு மொத்தத்தில் ரதி யக்கா வீட்டிற்கு போய் வந்த நாட் களில், வயிறுகுலுங்கச் சிரிக்காது மீண்ட நாட்கள் மிகக்குறைவு.

ரதியக்கா குடும்பம் கூட, 'சூரியக் கதிர் 1'உடன் வன்னிக்கு இடம்பெயர்ந்து வந்த பின்னர், சிரிப்பைத் தொலைத்து விட்டதும் எனக்கு ஆகக் கூடுதலான பாதிப்பை உண்டுபண்ணியது. தள்ளா டும் வயதில், இடப்பெயர்வுக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஆச்சி மூச்சை நிறுத்திக் கொண்டதோடு பொக்கை வாய்ச்சிரிப்பும் செத்துப் போயிற்று. முன்புபோல புவனாக்குட்டி விடுகதை களில் நாட்டமில்லாதவளாய் வாடிப் போயிருப்பாள். ரதியக்கா 'போமலுக்கு' வலிந்து சிரித்து விட்டு சிந்திப்பவள் போலாகிவிடுவாள். மூன்றாம் பிறை பார்த்தது போல எப்பவாவது இருந்து விட்டு அவர்களிடம் முந்திய சிரிப்பைக் காணலாம். இதனால் நான் அங்கு அடிக்கடி போவதை நிறுத்திவிட்டு.

என்னுடைய ஊர்க்கிணறுகளில் கோடைக்கு நீர் குறைந்து மாரிக்கு நிரம்பி வழிவது போல, சண்டைகள், விமானத்தாக்குதல்கள், இடப்பெயர்வு களின் போது சனங்களின் முகங்களில் சிரிப்புகள் சற்றுக் குறைந்தும் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தைக் காலங்களில்



பூத்துக் குலுங்கியும் காணப்படுவது வழக்கமாயிற்று. ஆனால் இப்பவெல் லாம் இந்தச் சனங்களின் முகங்களில் சிரிப்புப் பூக்காமல் போனது ஏன்? பெரும் பிரயத்தனப்பட்டு சிரிப்புக்காக் 'கின்னஸ்' புத்தகத்தில் எனது பெயரை பதிய வைத்தாலும், இந்த வினாவுக்கான விடையை வாழுங்காலத்தில் அறியாமல் போய்விடுவேன் என்றே நினைத்திருந் தேன். ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில் இதற்கான விடை கிடைக்கும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

★★

முல்லைத்தீவு இராணுவமுகாம் அழிப்பிற்கு பிற்பாடு நான்கு மாதங்க ளிற்கு மேலாகிவிட்டது. ரதியக்காவின் வீட்டிற்குப் போகாமல்விட்டு, அன்று தற்செயலாக அந்த வழியால் போன படியால் அக்காவீட்டிற்குப் போக நேரிட் டது. வீட்டில் ஒரே கலகலப்பாக இருப் பதை வீதியில் நின்றே உணரக்கூடியதாக இருந்தது. தண்ணீர் இறைக்கும் இயந்தி ரத்தில் தயார் செய்யப்பட்ட 'ஜெனரேட் டர்' ஒன்று வளவின் மூலையில் வைக்கப் பட்டு இயங்கிக் கொண்டிருந்தது. 'ஹோலில்' இருந்த ரீ.வியில் படம் ஓடிக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிந்தது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏதாவது கொண்டாட்டம் ரதியக்கா எப்படியும் எனக்கு தெரியப்படுத்தியிருப்பாவே, என நான் ஆதங்கப்பட்டிருக்கையில், புவனாக்குட்டி என்னைக் கண்டு படலைக்கே வந்துவிட்டாள்.

“மாமா, நாங்க மொல்லத்தீவுக்கு நாளைக்குப் போறம். இனி எங்கட சொந்த வீட்டிலதான் இருப்பம். மாமா கட்டாயம் அங்க வருவீங்க தானே” என்று துடக்கித் துடக்கிச் சொல்லிமுடித்த புவனாக்குட்டி கையில் பிடித்து உள்ளே கூட்டிச்சென்றாள்.

ரதியக்காவின் முகம் எவ்வளவு செந்தழிப்பாக இருந்தது. ரதியக்காவின் கணவனும், மூத்த இரு பிள்ளைகளும், அயலவர்களும் ரீ.வியில் ஓடிக்கொண்டிருந்த படத்தில் மூழ்கிப் போயிருந்தனர். யாழ்ப்பாணத்தில் கண்டதைவிட அவர்கள் முகங்களில் இனம்புரியாத மகிழ்ச்சி இழையோடியிருப்பதை நான் இனங்காணத்தவறவில்லை. புவனாக்குட்டி சொன்னதையே ரதியக்காவும் சொல்லி, ‘ஓயாத அலைகள்’ படம் ஓடிக்கொண்டிருப்பதாயும் அதில் தங்கள் வீடும் ஓர் இடத்தில் தெரிவதாயும் கூறி மகிழ்ந்தாள்.

புவனாக்குட்டி ஓடிவந்து எனது மடியில் அமர்ந்து கொண்டாள். இம்முறை அவள் என்னிடம் விடுகதை கேட்கவில்லை. என்னைத் தன்னிடம் கேட்கும்படி வற்புறுத்தினாள். அவளது அன்புத்தொல்லை தாங்கமுடியாமல் அவ்விடத்திலேயே ஒரு விடுகதையை தயார் செய்துவிட்டன்.

“இழக்கப்பட்டதினால் இழந்தது, மீட்கப்பட்டதனால் பூத்தது. அது என்ன பூ?”

புவனாக்குட்டி திருதிருவென முழுசத் தொடங்கிவிட்டாள். உண்மையில் அது விடுகதையா என்பதில் எனக்கே சந்தேகம். பின்னர் ‘சிரிப்பு’ என நான் விடையை சொன்னால், அவள் சிரித்தே விட்டிடுவாள். ஒருவாறாக மறுமுறை முல்லைத்தீவு வீட்டிற்கு வரும்போது விடையைச் சொல்வதாக அவளைச் சமாளித்துவிட்டேன்.

அவர்கள் எல்லோரையும் விட எனக்கே எல்லைமீறிய மகிழ்ச்சி. என் மனதில் ஊதிப்போயிருந்த வினாவுக்கு பதில் ரதியக்காவின் வீட்டிலேயே இலேசாகக் கிடைத்துவிட்டது. எங்கட மண்ணில் இருக்கின்ற ஒவ்வொரு மக்களின் முகங்களிலும் சிரிப்புப் பூத்துக்குலுங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என்ற நம்பிக்கை என் மனதில் முளை கொள்ள ‘ஓயாத அலைகள்’ படம் ஓடிக்கொண்டிருந்த ரீ.வித் திரையில் என் கண்களைப் பதித்தேன். அத்தருணத்தில், முல்லைத்தீவு முகாமைத் தாக்கி அழித்து எம்மவர்களால் கைப்பற்றிய ‘ஆட்லறிக்கு’ அருகில் புன்னகை சிந்திய படி தலைவரும் பொங்கிவரும் சிரிப்போடு போராளிகளும்........

# உருமாற்றம் பெறும் புத்தரின் அகிம்சா தர்மம் பௌத்த பீடாதிபதிகள் சித்து விளையாட்டு

1996-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ந் திகதி பண்டாரநாயக்கா நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அதி வணக்கத்துக்குரிய மூன்று (நிக்கயா) பௌத்த பீடாதிபதிகளின் தலைமையில் கூடிய மகா சங்கத்தின் மகா நாட்டில் கேமனதாகத் தீர்மானிக்கப்பட்டு பின்வருமாறு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

1) கடந்த பத்து வருடங்களாக தமிழ் பிரிவினைவாதப் பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட படுகொலைகளையும் சொத்து அழிவுகளையும் நிறுத்துவதற்கு சமாதான ரீதியாக எடுக்கப்பட்ட அரசாங்க முயற்சிகள் முழுமையாகத் தோல்வியடைந்தன. நாட்டின் சமாதான சட்ட ஒழுங்குகளை நிலைநிறுத்த வேண்டியது அரசின் கடமையாகும். மகாசங்கத்தின் இம்மாநாடு, முழுமையாக பயங்கரவாதத்தை அழித்து சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் சமாதானமாகவும் சகஜமாகவும் இணைந்து வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசாங்கத்தின் கவனத்திற்கு மகாசங்கத்தின் இம்மாநாடு கொண்டுவருகிறது.

2) தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள யாப்பு திருத்தங்கள் பற்றிய பிரேரணைகள், தமிழ் பிரிவினைவாதிகளின் ஏகோபித்த இலட்சியமான ஒரு சுதந்திரத் தமிழீழத்தை அமைப்பதற்கு வழிகோலுகிறது. இந்த சூழ்நிலையில் இம்மகாசங்க மாநாடு, பிரேரிக்கப்பட்டுள்ள யாப்புத் திருத்தங்கள் பற்றிய தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்துவதுடன் இப்பிரேரணைகள் அமுல்படுத்தப்படக்கூடாது எனவும் உரிமையுடன் கோருகிறது.

3) தமிழர் பிரச்சனையைத் தீர்க்கவும், தமிழர்களுக்கு சரித்திர ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகளைத் திருத்துவதுமே இந்த யாப்புத் திருத்தத்தின் நோக்கம் என அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ள வேளையில், தமிழர்கள் அவர்கள் தமிழ் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக எந்த வகையில் துன்புறுத்தப்பட்டு அநீதிக்குட்பட்டார்கள் என்பதையும், மக்கள் தொகையில் 74 சதவிகிதம் கொண்ட சிங்களவர்கள், அவர்கள் சிங்களவர்கள் என்பதால் எவ்வகை விசேட சலுகைகளை அனுபவித்தார்கள் என்பதையும் அரசு பிரகடனப்படுத்த வேண்டும். மேலும், மாற்று திட்டங்கள் என்று கூறும்போது இம்மாநாடு, எந்தப் பிரச்சனைகளில் மாற்று யோசனைகள் தேவைப்படுகின்றன என்பதையும் அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

4) சிறீலங்காதான் உலகிலேயே ஒரே ஒரு முற்று முழுதான சிங்கள பௌத்த நாடாகும். எனவே மகாசங்கத்தின் இம்மாநாடு, நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரத் திட்டங்களைத் தீர்க்கும்போது சிங்கள பௌத்த தனித்துவ அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறது.

5) ஏறத்தாள 2500 ஆண்டுகளுக்குமேல் தொடர்ச்சியாக மகாசங்கமும் ஆட்சியாளர்களும், பௌத்த சாசனத்தையும் பௌத்த கலாச்சாரத்தையும் பாதுகாத்ததுடன் புத்தரின் விழுமிய செய்திகளை பிற உலகிற்கும் பரச்சாரப்படுத்தியது. இன்று பௌத்த சாசனம் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியுள்ளது. எனவே இம் மகாசங்க மாநாடு பௌத்த சாசனத்தையும், பௌத்த பாரம்பரியத்தையும் இலங்கையில் பாதுகாக்க சர்வதேச பௌத்த சமுதாயத்தின் ஒத்துழைப்பைக் கோருகிறது.

ஆட்சியினருக்கு சங்கடம் ஏற்படும் போதெல்லாம் அறிவுரை வழங்கிய மகாசங்கத்தின் சரித்திர பூர்வ செயற்பாடுகளை இம்மாநாடு சுட்டிக்காட்டி மீள் மதிப்பீடு செய்ததுடன், நாட்டின் ஐக்கியத்தையும் எல்லைப் பரப்புகளையும் அரசுக்கு வெளிப்படுத்தியுள்ளது. இதன் பிரதிபலிப்புக்கள், மகா சங்கத்தின் கருத்துக்கள் இப்பிரச்சனைக்குத் தீர்வு விரும்பும் எல்லோரினதும் பாரிய சிந்தனைக்கு உரியவை என்பதை தெளிவுபடுத்தியுள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உறுதி

அன்றும் வழமை போலவே விடிந்தது. ஆனாலும் முகங்களில் வழமையைவிட ஏதோ ஒரு மாறுதல் தெரிந்தது. சேவல் கூவியது. ஏழு தேவதைகள் எனப்பட்ட புளுணிகள் ஆரவாரித்தன. இன்னும் பெயர் தெரியாத குருவிகள் இன்னிசைக் கானங்களை எழுப்ப பசு ஒன்று பால் கறக்க எஜமானை அழைத்தது. ஆனாலும் ஏதோ ஒரு மாறுதலான நாளின் ஆரம்பம் என்றே மனம் சொல்லிக்கொண்டு இருந்தது.

ஓ! சில நாட்களாகவே தொலைந்து போய்விட்டதாகவே கருதும்படி காணாமற் போயிருந்த ஆதவன் கீழ்வானைச் சிவக்கப் பண்ணியவாறு எழுந்து கொண்டிருந்தான்.

அப்போதும் இலைகள் அசையும் போதெல்லாம் நீர்த்துளிகள் மண்ணை நோக்கிப் பாய புல்லின் இதழ் நுனிகள் அவ்விளஞ்சூரிய ஒளியில் மின்னும் நீர்த்துளிகளைச் சுமந்தவாறிருந்தன. நிலமோ இன்னும் சேறாகவே இருந்தது.

மனைவி எனக்கு முன்பே எழுந்து தேனீர் தயாரித்தது மட்டுமல்லாது என்னையும் எழும்பி கடன்கள் முடித்து வருமாறு கட்டளை இட்டதன் பலன்தான் நான் இரசிக்க முடிந்த மழைக்காலக் காலைக் காட்சி.

தேனீர் அருந்தி முடிந்ததும் உடைகளை மாற்றிக் கொண்டு தெருவிற்கு இறங்கி எனது துவிச்சக்கர வண்டியை மிதிக்கத் தொடங்கினேன். வீதிகள் சேறாகவும் குன்று குழிகளெல்லாம் நீர் நிறைந்தும் அலங்கோலப்பட்டிருந்தது. நெளிந்து வளைந்து சாகசம் செய்வது போல ஒருவாறாகச் சென்றுகொண்டிருந்தேன். விசுவமடுச் சந்திக்கு சற்று அப்பால் பிரதான வீதியை மூடியபடி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

தனியார் கல்வி நிறுவனத்திற்குப் போய்க் கொண்டிருந்த மாணவியர் சிலர் முகம் சிவக்க நீரூடாக தமது வண்டிகளை உருட்டியபடி வந்து திரும்பி கோபமாக ஒரு பார்வையை எறிந்து விட்டு விர்ரென விரைந்தனர். அப்பால் நீருக்கருகில் நின்ற சில இளைஞர்கள் ஏதோ பகிடிவிட்டிருக்க வேண்டுமென்பது உடனே புரிந்தது.

"காவாலியள்" என்று மனதிற்குள் திட்டியபடி அப்பாலே சென்று பயணத்தை பொன்னம்பலண்ணர் வீடு நோக்கித் தொடர்ந்தேன். சிந்தனை சிதறடித்தது சென்றவாரம் நோக்கி...

"எடே கண்கெட்ட கடவுள் கிணறுகள் வறண்டு போச்சு. மழை? ஊகூம் அறிகுறியே இல்லை. காலம் கெட்டுப் போச்சு. அறுந்த கடவுள்" என்று திட்டியபடி இருந்தார் பொன்னம்பலண்ணர்.

ஓ! பொன்னம்பலண்ணை வித்தியாசமான ஒரு ஆண்; கோண்



டாவிலிலை பிறந்து வளர்ந்து; வாழ்ந்த ஊராகக் கொண்டவர். யாழ்ப்பாணம் பலாலி வீதியில் வரும் ஒருவர் அவரது வீடெது? என்று விசாரித்தால் உடனேயே அடையாளம் காட்டிவிட ஒரு சிறுவனாலே கூட முடியும். அந்தளவுக்கு பிரபலமாக காரணம் அவரது தொழில் முழுநேர விவசாயியாகவும் இல்லாமல் முழுநேர வியாபாரியாகவும் இல்லாமல் காலத்திற்கேற்ப தன்னை மாற்றியமைத்தவர் தான் அவர்.

"கோண்டாவில் பிரதேசத்தில் சிறந்த விவசாயி யார்? அப்பிரதேசத்தில் சிறந்த புகையிலை, சுருட்டு விற்பனையாளர் யார்? என்ற கேள்விகளுக்கு ஏகோபித்த விடையாக அமையப்போவதும் அவரின் பெயரே.

குறை என்று சொல்ல எதுவுமே இல்லை. நிறைவான குடும்பம் மூத்த மகன் காலத்தின் கோலமாக கனடா, மகள் ஒருத்தி ஜேர்மனியில் வாழ்க்கைப் பட்டதால் அங்கே, மற்றொரு மகளும் நோர்வே ஆக ஊரிலே அவரும் மனைவியும் இளையமகனும், மூத்தமகன் குடும்பமும்தான்.

நிறைவான அவரது வாழ்க்கையில் சோதனை ஆரம்பித்தது தொண்ணூற்று ஒன்றில்தான். விமானக் குண்டு வடிவிலே வந்த காலன் மனைவியைக் கவர வீடும் நொருங்கி கற்குவியல் போலாகியது. திகைத்துப் போனாலும் இந்தக் காலப்பகுதியில் இளையவன் குமணன் காலத்தின் தேவை கருதி தனது பங்களிப்பைச் செலுத்தச் சென்றுவிட்டான். பொன்னு அண்ணருக்கு மகனை எண்ணிக் கவலைதான். ஆனாலும் அவன் தன்னையும் காலத்தையும் வீணாக்கவில்லை. பயனுள்ள பணியில் தானே தன்னை இணைத்துள்ளான் என தன்னைத்தானே தேற்றியபடி மகன் குடும்பத்துடன் இருந்தார்.

இத்தனைக்கும் அவர் கலங்கவில்லை என்றால் அதற்குக் காரணம் அவரது பொதுக் கண்ணோட்டமே. ஏனென்றால், தமிழனாக அதுவும் தமிழீழத்தில் உள்ளவனுக்கு சோதனைகள் வரும் என்பது அவருக்குத் தெரியும். சாதனைகளை வெல்லும் வழியும் தெளிவாகத் தெரியும். ஆகவே கலங்கவில்லை.

சோதனைகளை வெல்லுவதற்காக அவர் வேண்டியவற்றை செய்ய அவர் எப்போதுமே தயங்கியது கிடையாது. தென் தமிழீழத்தால் தொண்ணூறுகளிலும் அதற்கு முன்னரும் வந்தவர்களுக்கு ஏராளமான உதவிகள் செய்தார். ஆரம்பகாலம் முதல் இவரது வீட்டிற்கு ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் போய் வருவது வழமை. அவர்களுக்கும் தேவையுணர்ந்து அவர் உதவி செய்ய பின்னிற்பதில்லை. மூத்தவன் குகன் கனடாவிலிருந்து இவருக்கு காசு அனுப்புவது நின்றபோது யாரோ இவரின் காதில்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்ட செய்தி அவன் அகதிகள் புனர் வாழ்விற்காகத் தனது உழைப்பைச் செல விடுகிறான் என்றபோது பெருமைப் பட்டுக் கொண்டார், "காசு எனக்குத் தேவையானது கிடக்கு, அவன் தம்பி விரும்பிற மாதிரி செய்யட்டும், பயனுள் ளதாய் செய்தால் சரி" என்பதே மக னைப் பற்றி கூறியோருக்கான அவரது பதில்.

காலச் சுழற்சி வலிகாமத்தால் வெளி யேறி கிளிநொச்சி தருமபுரத்தில் தனது வியாபார நண்பரின் காணியில் குடிசை போட்டு இருக்கும் அளவிற்கு அவரைத் தள்ளிவிட்டது.

நெத்தலியாற்றுக்கு அண்மையான தனது குடிசையில் மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் என உறவுகளுடன் நீட்டி நிமிர்ந்து படுக்க எழும்ப முடிகி றதே என்பதிலும் மூன்று வேளையும் குறைவிலாத உணவு உண்கிறோமே என் பதிலும் மனம் நிறைந்தவராக முன் போலவே தனது பகிடிக்கதைகளுடன் வங்கியால் எடுத்த பணத்தைப் பிச்சை யெடுப்போருக்குக் கொடுத்துக் கொண்டி ருக்கிறார்.

நெத்தலியாற்றுப் பாலத்தில் ஆட்கள் குழுமி நின்று சத்தமாகக் கதைத்துக் கொண்டிருந்தும் அவர்களைப் பார்த்த படியே சிந்தனையில் இருந்தாலும் எதிரே வந்த வாகனம் என்மீது தெருக்குழியி லிருந்த தண்ணீரை அடிக்கும் என்பதை எதிர்பாராமல் வாகனத்திற்கு வழி வில கியபோது சேற்றுநீரால் அபிசேகம் ஆகியபோது முற்றாக முழுப்புலனை யும் என்னை நோக்கி இழுக்க வேண்டிய தாயிற்று. அத்தோடு பொன்னம்பலத்தா ரின் கடந்தகால நினைவுகள் நின்று போக நெத்தலியாற்றுப் பாலத்தில் நின்று கீழே நுரைத்துப் பொங்கிப்பா யும் ஆற்றலை பார்த்துவிட்டு அப்பாலே சென்றேன்.

துவிச்சக்கர வண்டியை தெருவி லேயே விட்டுப்பூட்டிய பின் வெள்ளத் துள் அவரின் காணிநோக்கிச் செல்ல முயன்ற போது அவர் என்னைக் கண்டு கொண்டு விட்டார்.

ஏய்! செல்லையா உதிலை கிடங்கு சேறும் கிடக்கு. உங்க நில் நான் வாறன் என்றபடி தனக்குப் பழகிய பாதையா னதால் தடுமாற்றமின்றி வந்தார்.

என்னடாப்பா இது வெயில் எண் டாலும் நெருப்புமாதிரி. இப்பபாத்தியே ஐந்தாறு நாளா சோனாவாரி மழை உங் கட பக்கமும் காணியளுக்க வெள்ளமோ என்றபடி வீதியில் ஏறி இடுப்பிலிருந்த பேரனை இறக்கிவிட்டார்.

"இல்லையண்ணை தண்ணி வடிஞ்சி ருக்கும். அங்க காணியளுக்க இல்லை நீங்கள் இப்ப.... என்று நான் இருந்து குடுத்த கைக்கு குறைவில்லை செல் லையா. அவன் காணிக்காரன் தன்ர கல்வீட்டிலை இரு எண்டு கொஞ்ச நஞ்சமே வில்லங்கப்படுத்தினவன். நானில்லோ தனிய இருப்பமெண்டு கொட்டில் போட்டது மழை துவங் கேக்கை வந்து " நீ நடபிள்ளை தம்பி வாங்கோ எண்டு மகளையும் மருமக னையும் கிளப்ப வேறு வழியில்லை நானும் கிளம்பிவிட்டன். சாமான் பிரச் சனையில்லை. உனக்குத் தெரியும்தானே. ஒரு பானை இரண்டு சட்டி ரெண்டு உடுப்பு பையன் கையோட கொண்டு போட்டம் சாதாரணமாகக் கூறினார்.

தற்போது அவர்களிருந்த வீடு நோக்கி நடக்கையில் நான் அண்ணை கேக்கிறனெண்டு கோவியாதையுங்கோ எல்லாருமா யாழ்ப்பாணம் போனா அங்கு இந்த வெள்ளப்பிரச்சனையில்லை. அல்லாட்டி கொழும்பிலையாவது போயிருக்கலாம்தானே முடிக்கவில்லை.

'எட செல்லையா நீ என்னப்பா சுய நினைவோடதான் இருக்கிறியோ இல் லாட்டி எட இப்படி எத்தினை கஷ்டம் இன்னும் வரட்டும். எல்லாம் மனந் தான்ராப்பா நீ குழம்பிப்போனாய். என்னைப்பற்றித் தெரியும் உனக்கு முந்தி உதாலை போகாதை எண்டு சொன்ன ஆமிக்கு அடிச்சு என்ரை ரோட்டிலை நான் போவன் என்று சண்டை போட் டதும் அவங்கள் என்னை அடிச்சுத் துவைச்சுப் போட்டதும் தெரியும். அப்ப உடம்பு ஏலும் இப்ப ஏலாது.

"ஓமண்ணை உடம்பு ஏலாத நேரம் ஏன் கஷ்டப்படுவான் எண்டுதான் நானும்..."

"நிப்பாட்டப்பா இப்ப அங்கை யாழ்ப் பாணத்திலை இதாலை போகாத எண்டு எங்கட ஊரிலை எங்களை ஆளுறான் அவன். அங்கை போய் அவமானப் படச் சொல்லிறியோ? அல்லது முந்தி மாதிரி சண்டை பிடிக்க அவன் அடிச்சு கிளறித் தாக்க சாகச் சொல்லுறியோ நான் போக மாட்டன்; மருமோனும் தன் மானமுள்ளவர் போகமாட்டார் என் றார்.

நான் தைக்கு ஊர் போக முடிவு. ஏனென்றால், வன்னிக்கஷ்டம் என்று சொல்லவந்த விசயம் சொல்லப்படவே இல்லை. ஏனென்றால், பொன்னம்பல அண்ணரின் கூற்றுக்களினால் என்னுள் ளும் பிறக்கத் தொடங்கியிருந்தது உறுதி.

★

## களைப்பு, மனச்சோர்வு என்று அதிகாரிகளை மாற்றுகிறீர்கள் சிப்பாய்களின் நிலை என்ன?

### சிங்களப் பத்திரிகை சாடல்

'படை அதிகாரிகள் பலரும் யுத்தத்தில் களைப்படைந்திருப்பதாலும் மனச் சோர்வு அடைந்திருப்பதாலுமே படைத்துறையில் மாற்றம் கொண்டுவரப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அப்படியாயின் சாதாரண சிப்பாய்களின் மனநிலை பற்றி என்ன அக்கறை கொள்ளப்பட்டிருக்கிறது' என கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று அரசைச் சாடியுள்ளது.

அது மேலும் குறிப்பிடுகையில், 'கொழும்பில் இருந்துகொண்டும், யுத்தப் பிரதேசத்தில் இருந்து அதிகளவு தூரத்தில் இருந்துகொண்டும் கட்டளைகளை மட்டும் பிறப்பிக்கும் அதிகாரிகளுக்கு களைப்பும், மனச்சோர்வும் ஏற்பட்டுள் ளதாகக் கூறப்பட்டு மாற்றம் செய்யப்படுகிறது. ஆனால், முன்னரங்கங்களில் உண்மையிலேயே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் சாதாரண சிப்பாய்களின் மனச்சோர்வு, களைப்பு என்பன பற்றி என்ன அக்கறை செலுத்தப்படுகிறது; அவர்களுக்கு மாற்றம், லீவுகள் கொடுப்பது பற்றி சிந்திக்கப்பட்டதா' எனக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் கட்டளைப்பீடம் மாற்றுவதில் ஜனாதிபதியே பெரும் பங்குவகித்ததாகவும்; இம்மாற்றம் தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்ச ரான ரத்வத்தைக்குப் பூரண திருப்தியில்லை எனவும் மற்றொரு கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது.

இக் கட்டளைப்பீடத்தில் 'ரிவிரச' நடவடிக்கையில் பங்காற்றிய அதிகா ரிகளே கூடுதலாக உள்ளதாகவும் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ நிலநலமும்; வளமும் சேர்ந்திலங்கும் தமிழர் தாயகமான தமிழீழத்தில், சிங்களவர்களைக் குடியமர்த்தித் தமிழ் நிலத்தைக் கூறுகள் செய்து தமிழ் இனத்தின் குடியாண்மைக் குறைத்திடலையும்,

★ சிங்கள மொழியே அரசு மொழியென்று நாடாளுமன்றத்தினூடாக சட்டத்தைத் தோற்றுவித்து; தமிழ் மொழியின் மாண்பைச் சிதைத்திடலையும் இலங்கை அரசு தன் குறியெனக் கொண்டது.

சிங்கள அரசின் இந்தச் செயல்களினால் தென் தமிழ் நிலம் விழுங்கப்பட்ட போது....

# எங்கள் நிலத்தில் சிங்கள யானைகள்

வெண்திரைகளை அள்ளி வீசிக் காலிமுகக்கடல் பொங்கி எழுவது போலவே, தமிழ் மொழியைத் தம் உயிரெனக்கொண்ட அறிஞரும், தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன் அமைதிவழிப்போராட்டத்திற்கென்று தமிழரசுக்கட்சியின் வேண்டுதலை ஏற்றுத் தமிழீழப் பகுதிகளிலிருந்து கொழும்பு வந்த மூன்னூற்றுக்கு மேலான தொண்டர்களும், தமிழ் இனமான உணர்வுடன் ஒருங்கு திரண்டு காலிமுகத் திடலில் அமைதிப்போர் காத்தனர்.

வரிசை வரிசையாக அமர்ந்திருந்து எம்மை எவர் தடுத்திடினும் அஞ்சுகிலோம் எனும் உணர்வுடனும், தம்மைத் தாக்க வரும் அரசுக்காவல் துறையினரின் தடியடித்தாக்குதல்களுக்கும் வீரத்துடன் தோளுயர்த்தி ஈடுகொடுப்போம், எனும் இறுமாப்புடனும்; கூட்டத்தார் அமைதியுடன் அமர்ந்திருந்தார்கள்.

அநியாய மமதை படைத்த ஆட்சியினர் வெடிகுண்டு வீசி எமை அழித்திட்டாலும், தீந்தமிழ்க்காய் இங்கமர்ந்து அமைதிப்போர் செய்வோமென உறுதியுடன் இருந்த தமிழர்களை நோக்கிக் கூக்குரலிட்டவாறு, கைகளில் சிங்கக் கொடிகளுடனும், இரும்புச் சங்கிலிகளுடனும் ஊர்வலமாகச் சிங்கள வன்முறையாளர்கள் கடுகி விரைந்து வந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்றத்துள்ளே அமர்ந்து சிங்கள மொழியே நாட்டின் அரசு இயல் மொழியென்று ஆணை கொணர்ந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இக்காட்சி கண்டும் காணாதாராய் மகிழ்வுடன் தம் மதிய உணவை உண்டு கழித்திட்டார்கள்.

கடலே பொங்கிவந்து நீதியைக் கூறினும் ஏற்றுக்கொள்ளத் தயங்கும் சிந்தையராக விளங்கிடும் ஆட்சியாளர்களின் – கொடுநெறியை எதிர்த்து நீதி நெறியில்லா ஆட்சியியலை உலகு அறியும் வகையாக கொழும்பு நகரில் மட்டுமன்றி தமிழீழத்து நகர்கள் எங்கும் மாபெரும் பேரணிகள், கடையடைப்பு, எதிர்ப்புக் கூட்டங்கள், அமைதிவழிப்போராட்ட நிகழ்வுகள் எனத் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் வழிநடத்தலுடன் அற்றைப் பொழுதில், குறிப்பாக கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நகரங்களில் நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

**1956.06.05 - செவ்வாய்க்கிழமை**

ஊர் உறங்கும் போதில், பதினாறு மணிநேரங்களாக உசாவி இருபத்தொன்பது பேரின் எதிர்ப்புக்களுடனும், அறுபத்தாறு உறுப்பினர்களின் ஆதரவுடனும், பண்டாரநாயக்கா தலைமையிலான அரசு, சிங்கள மொழியே அரசகருமமொழி என்ற ஆணையைத் தோற்றுவித்ததினால் தமிழீழ மக்கள் கொதிப்படைந்த உள்ளத்தினராயினர்.

ஆங்கிலேயர் படையாண்ட சில்லாண்டுக் கொடுமையிலும் மிக்கதாக இடும்பைத்தரும் கொல்படையாம் சிங்களர்கள் குடியமர்வுகளையும், சிங்கள அரசின் மொழித்திணிப்புரையையும், எதிர்த்திட எழுந்த தமிழர், நாடளாவிய வகையில் தம் மறுப்புணர்வைக் காட்டிடத் திரண்டெழுந்தார்கள்.


1947–ம் ஆண்டு முதல் 1956–வது ஆண்டு முடிவிற்குள்ளாகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லோயாக் குடியமர்த்தற் திட்டத்தினூடாக மூவாயிரத்திற்கும் மேலாகச் சிங்களக் குடும்பங்கள் சகல வசதிகளுடனும் குடியமர்த்தப்பட்டதாலும்;

திருகோணமலை மாவட்டத்தே அல்லைத்திட்டம், கந்தளாய் குடியமர்வுத் திட்டமென்ற பெருங்குடியமர்த்தற் திட்டங்களூடாக, நாலாயிரத்து ஐநூற்றுக்கும் மேலான மக்களை தமிழர் எதிர்ப்புக்களையும் மீறி சிங்கள அரசு குடியமர்த்திட்டத்தாலும்;

வெந்த புண்பட்ட தமிழ் மக்கள் சிங்கள அரசை நஞ்செனவெறுத்து நெஞ்சால் ஒறுத்தனர். இவற்றின் விளைவாக அன்றைய தினத்தில் தமிழீழமே ஆரவாரம் கொண்டது.

நகரெங்கும் கறுப்புக் கொடிகள் உயர்த்தப்பட்டு பறந்து கொண்டிருக்கையில் கொழுத்தும் வெயிலின் கடுமையையும் மீறிச் சிறு கொழுந்துகளான, குழந்தைகளும் முற்றவெளியில் அமர்ந்து அறுநூறு பேர்வரை அமைதிப் போர் செய்த போதில்; ஏராளமான பெண்கள் கலந்துகொண்டு தம் எதிர்ப்புணர்வை அரசுக்குக் காட்டிவந்தனர்.

இடையிடையே மட்டக்களப்பு வாவியில் விழுந்து வீசிய காற்று மக்கள்மீது





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டவண்ணமிருந்து மக்கள் உடலுக்கு சுகம் கொடுத்தது. பகல்பொழுது முழுவதும் கடைகள் கொள்வாரின்றி மூடிக் கிடந்தன. நகரத்திலேயுள்ள மீன் அங்காடியிலும், மரக்கறி அங்காடியிலும், வியாபாரம் செய்யும் சிங்களவர்களும் தத்தமது கடைகளைப் பூட்டிவிட்டுத் தம் இல்லத்தேகினர்.

இந்நிலை இவ்வாறாக,

கொழும்பு வீதிகளில் இரும்புச் சங்கிலிகளுடனும், கொடிகளுடனான கம்புகளுடனும் வலம்வந்த சிங்கள வன்நெறியர்கள், காலி முகத்திடலில் அமைதியாக இருந்து அமைதிவழிப் போராட்டத்திலிருந்த தமிழ் மக்களை நோக்கி விரைந்தனர்.

ஒருவர் மாறி ஒருவர் வெறுங்கையினராக இருந்த தமிழர்கள் மீது தடியடித் தாக்குதலை ஆரம்பித்தனர். சிங்களவர்களின் வெறியாட்டத்தில் ஓரிரு மணி நேரங்களுக்குள்ளாகவே பலர் மயங்கினர். பெருங்காயங்களும் உற்றனர்.

கள் அகப்பட்ட பொருளைக் கையிலெடுத்துக் கொண்டு இரவோடு வந்தவர் போக ஏனையவர்கள் பகலிலேயே தென் தமிழீழத்தையும் நோக்கி வந்த வண்ணமிருந்தனர். நாடெங்கும் தோன்றிய வன்முறைத் தீயில் நூற்றுக்கணக்கான தமிழ் இல்லங்கள் கருகிச் சாம்பரானது. உடமையையும், தம் உடனிருந்தார் உயிரையும், இழந்துபோன தமிழ் மக்களுக்கு அரசின் கூலியாட்கள் செய்திட்ட கொடுமை அறிந்து கொதித்த தமிழ் மக்கள் தமிழீழமெங்கும் பொதுக் கூட்டங்களையும், பேரணிகளையும் நிகழ்த்திய போது மட்டக்களப்பிலுள்ள சிங்களவர்களில் சிலர் தம் உயிர் குறித்த அச்சம் ஏற்பட்டவராக கல்லோயாக் குடியமர்வை நோக்கிச் சென்றார்கள்.

கொடுமையுடன் இரு நாட்கள் கொந்தளிப்புடன் நகர தள்ளாடித் தள்ளாடி வெள்ளிக்கிழமை வெளிக்கிட்டு வந்தது. செவ்வாயில் மூண்ட கலவரத்தின் பீதி வெள்ளிவரை அடங்காது பற்



றிக் கொண்டேயிருந்தன. அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய இடங்களிலிருந்த தமிழ் மக்கள் சிலர் அச்சம் சூழப் பெற்றவராய் தம் வாழிடம் பெயர்ந்து மட்டக்களப்பு நகருக்குள் வந்த வண்ணமிருந்தனர்.

தமிழ் மக்கள் இவ்வாறு இடம் பெயர்ந்த காலையில், மட்டக்களப்பு நகரின்கண் இருந்த காவல்துறைப் பணிமனையின் மேலாளர் சிங்களவராக இருந்தது. நகரிலுள்ள சிங்கள முதலாளிகள் நெஞ்சில் துணிவைக் காத்தது. இதனால், இவர்கள் பதியத்தலாவை, பெரிய

காலிமுகத்திடலில் தொட்ட கலவரம் நாடு முழுதும் தீயெனப்பரவியதை அடுத்தச் சிங்கள அரசு விசேட ஊரடங்குச் சட்டத்தைக் கொணர்ந்தது. தமிழீழத்திலிருந்திட்ட காவற்துறைப் பணியகங்கள், துப்பாக்கிகள் தூக்கிய காவலர்களினால் நிறைக்கப்பட்டன. தமிழ்ப் பகுதிகளில் நகரங்கள் யாவற்றிலுமுள்ள வீதிகள் எல்லாம் துப்பாக்கிகளோடு காவலர்கள் உலவினார்கள்.

மெல்ல மெல்லச் சாய்ந்த பொழுது ஓய்ந்து, புதன் பிறந்தது. அவ்வேளையில், சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்

புல்லுமலை ஆகிய இடங்களிலுள்ள தம் உறவினரையும் கூடவே அழைத்து வைத்துக் கொண்டனர். முழுக்க முழுக்கத் தமிழ் மக்களின் வாழிடமாகவிருந்த கல்லோயாவைத் தம் கையகப்படுத்தியது போலவே, அரசின் திட்டமிட்ட குடியமர்த்தற் சதியின் மூலம் வளம் நிறைந்த பெரிய புல்லுமலையென்ற தமிழ் ஊரும் சிங்களவர் வசமாயிற்று. பிபிலை, கேகாலை, பதியத்தலாவையில் இருந்து சிங்களவர்கள் அரசின் உதவியுடன் பெரிய புல்லுமலையில் குடியமர்த்தப் பட்டார்கள். அவ்வாறே மொனறாகலை, சியாம்பலான்டுவ ஆகிய இடங்களில் வாழ்ந்திட்ட சிங்களவர்கள் மூலமாகவும், ஏனைய சிங்கள ஊர்களில் இருந்தோர் மூலமாகவும், கல்லோயா எனும் வளம் மிக்க தமிழர் வாழிடம் சிங்களவர் கையகமாயிற்று. இவ்விரண்டு இடங்களிலும் இருந்த சிங்கள வன்முறையாளர்கள் மட்டக்களப்பிலுள்ள சிங்களவர் இல்லங்களில் கலந்துறைந்துள்ளதான செய்தி மெல்ல மெல்ல நகருக்குள்ளிருந்த தமிழரிடையே தலையெடுத்திட்டது.

### சிங்கள மொழிச் சட்ட நாளில் சிவப்பேறிய மட்டக்களப்புநிலம்

8–ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நேரம் 11 மணி 30 நிமிட வேளையில் தாண்டவன் வெளியென்ற ஊரிலுள்ள வீடுகள் சில எரிந்து கொண்டிருந்தது. நித்திரையாகிக் கொண்டிருந்த குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு அலறியவாறு பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறிட எரியும் வீடுகளின் நெருப்பை நீரூற்றி அணைக்கும் முயற்சியில் அவ்விடத்து ஆண்கள் மிகு முனைப்புடன் ஈடுபட்டு இருக்கையிலே;

யாரும் எதிர்பாராத வகையில் துப்பாக்கி வெடிச்சத்தங்களும் தொடர்ந்து ஆண்களின் அலறலும் அவ்விடத்தே பேரோசையெனக் கேட்டிட்டது. திக்குகள் எங்கும் மக்கள் சிதறி ஓடலாயினர். முகட்டில் எரிந்து கொண்டிருக்கும் பெரும் நெருப்பின் ஒளியானது துப்பாக்கியுடன் ஓடும் பெரிய புல்லுமலைச் சிங்களவன் றபாயலை இனங்காட்டிய வண்ணம் எரிந்து கொண்டிருந்தது.

அழுகுரல் கேட்டுக் கூடிய கூட்டத்தினர் துப்பாக்கி வெடியால் வீழ்ந்தவர்களைத் தூக்கிய போதில்; மட்டக்களப்பு மக்களிடையே நன்கு பேர் பெற்றிருந்த சட்டத்தரணி சாம் ஸ்ரீபனின் மகனாகிய கல்லூரி மாணவன் ஸ்ரீபன் ராசேந்திராவும்; பொதுவுடமைக் கொள்கைப் பற்றாளர் தோழர் வி.தங்கராசாவும் இறந்து போயினர் என்பதைத் தெரிந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டனர்.

ஆவேச அலையில் அள்ளுண்ட மக்கள் சிலர் கொலைகாரன் புல்லுமலை றபாயலைத் துரத்தியபடி ஓடினர். மற்றோர் காயப்பட்டோரைக் காத்திடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். துப்பாக்கி வெடியினால், ந. ஏரம்பமூர்த்தி எனும் பெயருடைய கவிஞர் எருவில் மூர்த்தி என்பவர் தன் வலது கண்ணை இழந்திருந்தார். மற்றும் தம்பிமுத்து – ஆறு வயதுடைய செல்வி எஸ்.கபிலமாது, எஸ். அரசரெத்தினம் – வி.நடராசா – பா. ஜீவானந்தம் ஆகியோர் பலத்த காயமுற்றிருந்தனர்.

குறித்த சில கணப்பொழுதில் நடந்தேறிய இச்சம்பவம் மட்டக்களப்பு மக்களிடையே தீயெனக் காற்றிடை பரவியதை அடுத்த வேளையை எதிர்பார்த்திருந்த அங்குள்ள காவல்துறையினர் சுழல் துப்பாக்கிகளுடன் நகர்வலம் வரலாயினர்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் கொழும்பு வாழ் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுநெறியைவிடவும் மோசமான முறையை கல்லோயாவில் குடிகொண்ட தமிழர்கள் மீது சிங்களவர்கள் கையாண்டனர்.

தமிழர் வீடுகளிலுள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பெண் மகளிர் மானம் பறிக்கப்பட்டது. தமிழர் கோயில்கள் உடைக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழ் மக்களின் உயிர்கள் இரவு பகலாகச் சிங்களக் காடையர்களால் காவு கொள்ளப்பட்டன. தம் உயிர் காத்தற் பொருட்டு அஞ்சி ஒதுங்கிய பிஞ்சுக் குழந்தைகளைக் கொடுவாள் கொண்டு கொன்றனர் சிங்கள வன்நெறியினர். பாதுகாக்க எவருமில்லாத நிலையில் தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக மட்டக்களப்பையும்; கல்முனையையும் நோக்கி விரைந்திட்டனர்.

**பட்டிப்பளை ஆறு கல்லோயாவானது**

1941–ம் ஆண்டு டீ. எஸ். சேனநாயக்காவினால் அரசமரம் நட்டு ஆரம்பிக்கப்பட்ட இக்குடியமர்வுத் திட்டத்தினால் பட்டிப்பளை ஆறு என்ற பாரம்பரிய தமிழ்ப்பகுதி கல்லோயாவாகச் சிங்கள அரசால் மாற்றமுற்றது. கல்முனை – களுவாஞ்சிக்குடி, கல்லாறு– சம்மாந்துறை ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ், முஸ்லீம் மக்களின் முழு எதிர்ப்பையும் மீறி 44 பகுதிக் குடியிருப்புகளைக் கொண்ட இத்திட்டத்தில் 38 குடியிருப்புப் பகுதிகளில் முழுக்கவும் சிங்களவர்களை நிறைத்தும், ஏனைய குடியிருப்புகளினூடே சிங்களவர்களைப் புகுத்தியும், பெரும் சிங்களவர் குடியிருப்பு மையத்தினை ஏற்படுத்தியது சிங்கள அரசு.

தமிழ் மக்களுக்கு நன்மை தரும் திட்டம் என்று சொல்லிக் கொண்டு, கொரளை, களுத்துறை, கம்பசுர ஆகிய இடங்களிலிருந்தும் ஆயிரமாயிரம் குடும்பங்களைக் கொண்டுவந்து, உகனை – பக்கியகலை இக்கினியாகலை என்ற மூன்று இடங்களை உருவாக்கி நிறைத்த குடியமர்த்தல் நிகழ்வுகளைப் பொறுக்காத தமிழ் மக்கள் தமது உள்ளத்துக் கொதிப்பைக் காட்டி அவ்வேளை அரசுக்கு முறையீடுகள் செய்தும், தமிழீழப் பகுதிக்கு வரும் சிங்கள அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடிகாட்டித் தம் வெறுப்புணர்வைக் கூட்டியும் வந்தனர்.

மட்டக்களப்பு நகர் முழுவதும் சுழல் துப்பாக்கிகளோடு வீதிகளில் உலாவிய காவல் துறையினரின் துணையில்லாமலேயே வெடிபட்டவர்களை மருந்தகத்திற்கு கொண்டு சென்றும் – வீழ்ந்திறந்தோரின் உடல்களை இடுகாட்டிற்குக் கொண்டு செல்லுதற்கான முயல்வுகளையும், அவரவர் உறவினர் ஊடாக நகர மக்கள் தொடர்ந்த வேளையில்;

நீடித்த ஊரடங்கு உத்தரவினாலும் வன்நெறிக்கொடூரங்களினாலும் தமிழீழ நகரங்கள் துடித்துக் கொண்டிருந்தது கேட்டு; பழந்தமிழ் ஊர்களில் ஒன்றான துறை நீலாவணை மனத்தாற் கொதித்துக் கொண்டிருந்தது.

நித்திரையில் இருக்கும் குழந்தையின் அழகுபோல் தாமரைகள் விரிந்திருக்கும் தங்கள் ஊரின் குளமும் வயலும், தாய்மை எழில் கொண்ட தமது கோயிலும் வருடத்து வைகாசி மாதம் முதல் விரிக்கும், என்பதும் அதற்கு முன்னாக வயலில் குவிந்துள்ள நெற்கட்டை எருமைகளால் அடித்து வீட்டுக்கு நெல்லைக் கொண்டு செல்ல வேண்டுமென்ற அவசரமும் நீலாவணை உழவர் முகங்களில் மின்னின.

முன்னங்கால் ..... வெள்ளையப்பா
முகம்
நிறைந்த சீதேவியாம் சீதேவியார்
போகுமிடம்
செங்கழுநீர்ப்பூப்பூக்கும் கிழக்கோ
வெளிக்குதப்பா
கீழ்வானம் மின்னுதப்பா பொழுதோ
விடியுதப்பா
பொற்கோழி கூவுதப்பா நிலவே
சரியுதப்பா
நீலவண்டார் கூவுதப்பா.

நீறும் சந்தணப்பொட்டும் வைத்திட்ட நெற்றி குங்குமத்தால் சிவப்பேறியிருக்க, நாற்பது வயது தாண்டிய அனுபவத்தில் வேலையாட்களைத் தூண்டும் விவேகம் குடிகொண்டு விளையாடித் தேநீரை ஊற்றிக் கொடுத்தவாறு, வேலை செய்பவர்களை விளித்து;

"மக்காள் இண்டை மதியத்துக்குள்ள – வேலையை முடிச்சின்று ஊட்டுக்குப் போகவேணும்" என்றபடி மீண்டும் எருமைகளைத் தட்டி நடங்கோ சீதேவி... முன்னங்கால் வெள்ளையப்பா... குரல்கள் வெளியைக் கலகலப்பாக்கின.

இவ்வேளைகளில்,

தென்பகுதியிலிருந்த மென்மேலும் சிங்களக் காடையர்கள் பொத்துவில் வழியாகவும் வேறுள வழியாகவும் பல





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறு வாகனங்களின் துணையோடு தமிழர் பகுதி நோக்கி விரைவர் என்ற அறிவிப்பும் காற்று வாக்கில் கலந்து துறைநீலாவணையில் குவிந்திருந்தது. இதனாலும்; ஏலவே நாட்டில் நடக்கும் வன்முறைகளைப் பற்றித் தெரிந்து வைத்திருந்த துறைநீலாவணையினரின் இரவு வேளைகள் – விழிப்போடு நகர்ந்தன.

ஒரு கிழமையாகக் கல்லோயாவில் நடத்திய வன்நெறிகளின் ஊக்கத்தில் வேகமுற்ற சிங்கள வன்நெறியாளர்கள் கல்முனை, மட்டக்களப்பு மற்றும் ஏனைய இடங்களிலுள்ள காவல் துறையினரின் ஆதரவுடன் தமிழர் நகர் எங்கும் கலந்துறைந்த போதில்;

வீம்பு கொண்டெழுந்த சில சிப்பாய்களுடன் காவல்துறை மேலதிகாரியும் இணைந்து தம் காவல்துறை வாகனத்தில் நகர் சுற்றுக்கென்று 12.06.1956 செவ்வாய் காலையில் துறைநீலாவணை ஊரை நோக்கினார்கள்.

ஊரைநோக்கிய வண்டியும், ஆட்களும் தமிழ் ஊர்களின் அழகைக் கிழித்துக்கொண்டு – புழுதியுடன் துறைநீலாவணையை அண்டிய வேளையில்;

ஆங்காங்கே வழி ஓரம் அமைந்திருந்த சிறு புதர்களைக் கடந்து ஓரிரு துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்ட ஒரு நொடிப்பொழுதிலோ–

கண் இமைக்கும் முன்னே கனலாகத் தெறித்து முழங்கின சன்னங்கள் –

குண்டடிபட்ட சிப்பாய்களின் காவல் துறை வாகனத்தை வீரமக்கள் தீயிட்டுக் கொழுத்த – உயிர்தப்பினால் போதும் என்ற நிலையில் சிங்களக் காவல்துறையினர் வந்த திசை நோக்கிப் பதறிக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தனர்.

05.06.1956 முதல் 12.06.1956 வரையிலான நாளிடைவேளையில்; தமிழர் வாழ்நிலைகளைத் தளர்த்தி அவர்களைப் புலம் பெயர்த்திட்ட சிங்கள வன்முறையாளர்களும் – காவல் துறையினரும் – துறைநீலாவணை மக்களின் வீரச்செயல் கேட்டுக் கிலி கொண்டார்கள்.

கல்லோயா – பொலநறுவை ஆகிய தமிழிடங்களின்மையத்தேயும், அருகேயும் குடியமரும் சிங்களக் குடியமர்வுகளைக் கண்டும் கேட்டும் நெடுநாளாகக் கவலையில் மூழ்கியிருந்த தமிழர் பலரும் இச்செய்தியாற் களிப்புற்றனர்.

பன்னெடுங்காலத் தமிழர் வாழ்வியல் நிலத்திலே சிங்களக் குடிகளின் நிழல் படிந்தது.

இந்நாட்டிலிருந்தும், வெளிநாட்டவரிடத்தும் பெற்றுக்கொண்ட பணத்தில் இருபத்தைந்து வீதமானவற்றை கல்லோயாக் குடியமர்த்தலுக்குச் செலவிட்ட அரசு; முதலில் முந்நூறு குடும்பங்களெனத் தொடங்கி தொடர்ந்த பத்தாண்டினுள் இருபத்தையாயிரம் குடும்பங்களைக் குடியமர்த்துவதை தன் இலக்கெனக் கொண்டதால்;

**சிங்களவரைக் குடியமர்த்தி சேனநாயக்கா உலா வந்தார்**

கல்லோயா, இக்கினியாக்கலை, சடையன், தளாவை, சவளக்கடை ஆகிய இடத்து நிலங்களூடே; தமிழ், முஸ்லீம் மக்கள் வழிவழியாகச் செய்துவந்த வயல் நிலங்களையும் அள்ளிச் சேர்த்து ஆனி மாதம் 1950–ம் ஆண்டிற்குள்ளாக – இரண்டாயிரத்து ஐந்நூறு ஏக்கருக்கும் அதிகமான நிலத்தைச் செப்பனிட்டுச் சிங்களவர்க்கு அரசினர் அளித்திட்டார்.

சிங்கள மக்கள் வாழுமிடமான மொனறாகலையிலிருந்து (மயில்மலை) – சியாம்பலாண்டுவ எனுமிடத்தின் ஊடாகப் பொத்துவிலுக்குப் பாதையை டி. எஸ். சேனநாயக்கா 1950–ம் ஆண்டு ஆவணி இருபத்திரண்டாம் நாளில் திறந்து வைத்திட்டதின் பின்னர்; பாணமை எனும் கடற்புறத்துத் தமிழ் ஊர் சிங்களரால் நிரம்பிற்று.

இவ்வாறு கடற்புறத்தேயுள்ள தமிழ் நிலங்களில் சிங்களரைக் குடியமர்த்திட்ட அரசினர்; மறுபுறத்தில் நெற்பயிர் செய் நிலங்களைத் தம்மவர் வயமாக்குவதில் முனைப்பாயினர்.

பொலநறுவைக்கு அண்மித்த மன்னம்பிட்டிக்கருகமைந்த கங்குலுவில்லுக் குளத்தை அகலப்படுத்தி நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்களை சிங்கள அமைச்சர் சி.பி.டி. சில்வா குடியேற்றினார்.

இதுமட்டுமின்றி;

கல்லோயாத் திட்டத்தை விரிவாக்குவதன் பொருட்டு 1952–ம் ஆண்டில் திரு. கே. கனகசுந்தரம் தலைமையோடு இராணி வழக்குரைஞர் என்.டீ.வீரசூரியா, ஏ.ஜே.அமரதுங்கா என்போர் கொண்ட கல்லோயா அபிவிருத்திச் சபையை அரசு ஏற்படுத்திய போதிலே – கல்லோயா அபிவிருத்திச் சபையின் செயல் எல்லைக்குள் இருப்பவர்கள் என்று காரணம் கற்பித்து; 1952–ம் ஆண்டு ஆடித்திங்கள் பதின்மூன்றாம் நாளில் நூறு தமிழ் குடும்பங்களை வாழிடம் விட்டு இச்சபை வெளியேற்றியது.

வழிவழி விளைந்து வந்த தமது வயல் நிலங்களில் சிங்களவர் விதை விதைத்துப் பயன்பெறுதல் கண்டு துயர்பட்ட தமிழர் மனத்தை கல்லோயா அபிவிருத்திச் சபையினரின் இச் செயல்கள் தீயெனச் சுட்டது.

1952 வைகாசி இருபத்து இரண்டாம் நாளில் தமிழர் வீடுகள் பலவும் – சிங்களவர் வீடுகள் சிலவும் கல்லோயாவில் எரியுண்டன. இதனால் தமிழர் வாழிடமான நற்பிட்டிமுனைவரை காவல் துறையினரின் உதவியோடு வந்த சிங்கள வன்முறையாளர்கள் தமிழர்களின் அங்காடிகளை எரித்ததால் தமிழ் மக்கள் பலர் ஏதிலிகளாய் கோயில்களில் சில நாளைக் கழித்தனர்.

இதன் பின்னர் –

1952.08.22–ம் நாளில் காவல்துறை மேலாளர் சிலரும் – சிறீலங்கா அரசின் முதலமைச்சரின் செயலாளரும் கூடிய மகாநாட்டில் சிங்களவர்கள் தவறு செய்திட்டார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் இத்தகு தீச் செயல்கள் இடம் பெறமாட்டாது

## ஓயாத அலைகள்

– தமிழ்மாறன்

வசந்த காலத்தின்
வைகறைப் பொழுதுகள் போல்
நாங்கள்
வாழ்ந்த வாழ்வினை - இல்லாது
அழித்தவனே
இனி உனக்கு இடிவிழும்.
இலக்குகள் எமக்கு - இனியும்
நெடுந்தூரமில்லை.
தொலைவிலிருந்தும் - இனி
உனது பாசறை எரிப்போம்.
இலக்குகள் தவறவிடமாட்டோம்
இலக்குகள் எமக்கு - இனியும்
நெடுந்தூரமில்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற உறுதிமொழி காவல்துறை மேலாளர்களால் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்வாண்டிலேயே ஓர் ஓட்டுத் தொழிலகத்தை கல்லோயா அபிவிருத்திச்சபை சிங்களவர்களுக்கென ஏற்படுத்திற்று.

இவ்வாறான செயல்களுடன் மிக்க விரைவோடு 1953-ம் ஆண்டு ஆடி மாதத்திற்குள்ளாகப் பதினாறு சிங்களப் பள்ளிக்கூடங்களையும், முறையே கடுகண்ணாவை (347) – கம்பளை (210) – வட்டகொடை (422) – உலப்பனை (234) – கண்டி (1357) – பொல்காவல, கேகாலை (2455) – நாவலப்பிட்டி (80) – வத்தேகம (217) – சிலாபம் (29) – நத்தாண்டியா (14) – மருதான (55) வியாங்கொடை (139) – மொராட்டுவா (41) – போலவத்தை (21) – கொச்சிக்கடை (24) – கம்பகா (165) ஆகிய சிங்கள ஊர்களிலும், வேறுள சிங்கள ஊர்களிடத்தும், எடுத்திட்ட ஆறாயிரத்துப் பன்னிரண்டு (6012) சிங்களக் குடும்பங்களைக் கடுகி விரைந்து குடியமர்த்தியது சிறீலங்கா அரசு.

இவ்விதமாக தம் அரசு குடியமர்த்திட்ட மக்களை காணுதற்காக பெரும் பொருட்செலவில் 1952-ம் ஆண்டு சித்திரைத் திங்கள் பிற்பகுதியில் தலைமை அமைச்சர் டட்லி சேனநாயக்காவோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருபத்து நால்வரும் அமைச்சர் சிலரும் கல்லோயாக் குடியேற்றத்திற்கு உலாச் சென்றிட்டதும் ஒரு சம்பவமாகும்.

சேனநாயக்க உலாவின் சலசலப்பு முடிவடையுமுன்னமே கல்லோயா அபிவிருத்திச் சபைத் தலைவர் கே. கனகசிங்கம் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

கலகவேளையில் தமிழர்களைக் கொலை செய்வதற்காக அதிகமான சிங்கள வன்முறையாளர்களை வெளியிடத்திலிருந்து அழைத்துக் கொள்ள கல்லோயா அபிவிருத்திச் சபைக்குக் குரிய வாகனங்களை கே. கனகசிங்கம் உடன் உதவவில்லை என்று அமைச்சர்களிடம் கல்லோயாச் சிங்களக் குடிகள் முறையிட்டிருந்தனர்.

அப்படியிருந்தும் சிங்கள வன்நெறியாளர்களை ஊக்கப்படுத்தித் தமிழர்களை வாழிடம் விட்டு ஓடச் செய்தார் என்ற வெறும் பாரத்தைச் சுமந்தபடி சிங்கள அமைச்சரின் பதவி விலக்கல் கட்டளையைப் பெற்றவாறு கல்லோயா அபிவிருத்திச் சபையைவிட்டு வெளியேற்றப்பட்டார் அத்தமிழர்.

★

# வரலாற்றுக் காலம் தொட்டு திருமலையில் திட்டமிட்ட குடியேற்றம்

தமிழர் வாழ் தொல்பதியான திருகோணமலை நகரம் – 1997ம் ஆண்டாகிய இக்காலம் சிங்களவர்களால் நிறைந்து காணப்படுகிறது. தமிழர்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளிலும் கோயிற்காணிகளிலும் அத்துமீறிக் குடியேறும் சிங்களக் குடிமக்களின் பாதுகாப்பைச் சிறீலங்கா அரச இராணுவப் படைகள் உறுதி செய்து வருகின்றன.

1983-ம் ஆண்டின் பின் அரசபடைகளின் ஆதரவுடன் அகலக்காலூன்றும் இக்குடியமர்வுகளின் விபரங்கள் கீழ்வருகின்றன. இங்கே குறிப்பிடப்படும் பெரும்பாலான குடியமர்வுகள் திருகோணமலைப் பட்டினத்தையும், அதைச் சூழவுள்ளனவுமேயாகும்.

**சிறீமாபுர, விஜிதபுர** - இவ்விரண்டு குடியேற்ற ஊர்களும் திருமலைப்பட்டினத்திலிருந்து தென்னை மரவடிக்குப் போகும் பிரதான பாதையில் (பட்டினத்திலிருந்து மூன்று மைல்களுக்குள்ளாக) அமைந்துள்ளன.

சிறீமாபுர – சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் காலத்தில் உருவானதோர் குடியேற்றமாகும். திருமலைப் பல்கலைக்கழகக் காணியில் திருக்கடலூர் என்ற தமிழ் ஊரில் உருவாகிய இக் குடியேற்றத்தின் மூலம்; தமிழ் மீன்பிடித் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதும் அதனால் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே ஏற்படும் கலகங்களும் சகஜமான சமாச்சாரங்களாகும். விஜிதபுர, சிறீமா புரத்தின் அருகில் இதே ஆட்சியாளர்களினால் உருவானது. இக்குடியமர்வு 1968, 1970-ம் ஆண்டுக்குள் ஆரம்பமானது. சிறீமாபுர 1977-ம் ஆண்டில் முழுமை பெற்ற குடியேற்றமாகிவிட்டது. 1977க்குப் பின்பு யூ. என். பி. கட்சி ஆட்சி செய்த வேளையில் நடராசா என்னும் தமிழரின் காணியில் மேலும் வரதாஸ்வத்தை என்ற ஒரு குடியேற்றத் திட்டத்தை உருவாக்கியது.

1977இன் பின்பு இதே யூ. என். பி. அரசு மட்டிப்பக்கள் என்ற இடத்தில் டாக்டர் (தனியார் வைத்தியர்) சிவானந்தத்தின் காணியில் ஒரு புத்த விகாரையையும் நிறுவி 100 குடும்பங்களுக்கு மேலான ஒரு குடியேற்றத்தையும் அமைத்தது.

1983 இலும் – 1987 இலும் லவ்லேன் பகுதியில் விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் குடியேற்றம் நடைபெற்றது. 1970-ம் ஆண்டு முதல் 1977-ம் ஆண்டிற்குள்ளாக சுதந்திரக் கட்சியின் காலத்தில் கண்டிவீதியில் அரச காணிகளில் காட்டுப்பகுதியில் பெரும் குடியமர்வு நடைபெற்றது. ஏறக்குறைய 600 குடும்பங்கள் வரை ஆங்காங்கு குடியேறி சனச் செறிவுள்ள தொடர் குடியேற்றமாக இது உருவகம் பெற்றது.

**மிகிந்தபுரம்** - 1970 – 1977 காலப்பகுதியில் ஏலவே தென்னிலங்கைத் தமிழ் மக்கள் (மலையகத் தமிழர்) இருந்த இக்காணியைச் சுவீகரித்து, அம்மக்களை பலவந்தமாக வெளியேற்றி – சிங்கள மக்களைக் குடியேற்றியது. சிறீலங்கா அரசு தலைமையிலான அரசு இதைச் செய்தது – திருமலையிலிருந்து கன்னியாவிற்குச் செல்லும் பாதையில் பாரதிபுரத்திற்கும் – கன்னியாவிற்கும் இடையில் இக்குடியேற்றமுள்ளது. மிகிந்தபுர 2431 என்ற கிராம சேவையாளர் பிரிவாகவும் மாற்றப்பட்டு 233 குடும்பங்கள் கொண்ட ஊராகவும் (1990-ல்) மாறிவிட்டது.

**ஆண்டான்குளம் (4ம் கட்டை)** - கிட்டத்தட்ட 1953-ல் இருந்து தென்னிலங்கைத் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்ற இவ்விடத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வயற்காணிகளுண்டு. இரண்டு சிங்களவர் மட்டுமே இருந்த இவ்விடத்தில் 1970-ன் பின் மாத்தறையிலுள்ள மீன்பிடியினர் நிறைந்த குடியமர்வு உருவாகியுள்ளது.

**தாரணியகம** - 'பிரிமா' மா ஆலையில் வேலை செய்யும் ஊழியர்களுக்காக உருவாக்கப்பட்ட இக்குடியேற்றத்தில் முதலில் கட்டப்பட்ட 100 வீடுகளில் தலா ஒரு தமிழர் ஒரு முஸ்லீம் வீதம் கொடுக்கப்பட்டது. இதுதான் இக் குடியமைப்பின் நிலை.

**சுமேதங்புர (வைரியூத்து) 5ம் , 6ம் கட்டைகள்** - கண்டி வீதியில் 6-ம் கட்டை என்ற இடத்தில் 1977-ம் ஆண்டு கலவரத்தின் பின்னர் தென்னிலங்கைத் தமிழ் மக்கள் குடியமர்ந்தனர். இங்குள்ள காடுகளில் விறகுவெட்டி திருமலை நகரத்திற்குக் கொண்டு சென்று விற்பதுதான் இவர்களுடைய வருவாயாக சீவியமாக இருந்தது. 1982இன் பின் சிங்களக் குடிமக்களை விமானப்படையினர் இங்கு குடியேற்றினர். நாளடைவில் இங்கு அமைந்திருந்த வைரியூத்து தமிழ் பாடசாலையில் சிறீலங்கா விமானப்படையினர் முகாம் அமைத்துப் பாடசாலையில் சிங்களப் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தினர். இன்றைய நிலையில் இங்கு சிங்களப் பாடசாலையும் சிறீலங்கா வான்படை முகாமும் உள்ளது.

- திருமலை யோகேந்திரம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரப் பொன்விழா




அச்சுப் பதிப்பு: வாசன் அச்சகம், லண்டன் 0181 646 2885

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்